படைப்பு

ஊற்று: 2 | நதி: 4 | ஆகஸ்ட் 2019 | திங்களிதழ்

www.padaippu.com

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

## படைப்பு இலக்கிய விருதுகள்



சந்திப்பு
– எழுத்தாளர் பாமரன்



நினைவுகள்
– நா.முத்துக்குமார்



தேநீர் சாலை
– கரிகாலன்

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று: 2 | நதி : 4 | ஆகஸ்ட் 2019

**நிர்வாக ஆசிரியர்:**
**ஜின்னா அஸ்மி**

•

**ஆசிரியர்:**
**ஆசியாதாரா**

•

நிர்வாகக் குழு:
**சகா (சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**

•

தலைமை நிருபர்:
**வலங்கைமான் நூர்தீன்**

•

நிருபர்கள் குழு:
முனைவர் **கோ.நித்தியா**
**ஸ்டெல்லா தமிழரசி**

•

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

•

வடிவமைப்பு: **ஐசக்**

•

ஓவியக் கலைஞர்கள்:
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

•

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப
வேண்டிய மின்னஞ்சல் முகவரி:
**padaippugal@padaippu.com**

•

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002
✉ admin@padaippu.com
✆ 9489375575

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே, படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...

- **தலையங்கம்** - பக். 04
- **“படைப்பு இலக்கிய விருதுகள்”** - பக். 05
- **ரோஸ் ஆன்றா கவிதைகள்**
  - விக்ரமாதித்யன் - பக். 10
- **ஆசியான் கவிஞர் க.து.மு.இக்பால்**
  - முகம்மது பாட்சா - பக். 14
- **மீன் பொதிந்த இலைகள் - நூல் மதிப்புரை**
  - திருமேனி - பக். 23
- **“உலகத்துல எவனாவது தன்னை அறிவுஜீவினு சொன்னாப் பளீர்னு அறையணும்”**
  - தோழர் பாமரன் அவர்களோடு ஒரு சந்திப்பு - பக். 25
- **கந்தகக் காவியங்கள்**
  - அபர்ணா - பக். 33
- **காற்றின் அலைவரிசையில் ஒலிக்கும் அந்தக் குரல்..**
  - வீரசோழன் க.சோ.திருமாவளவன் - பக். 36
- **ஹெர்ட்டா முல்லர்**
  - தா. ஜோ. ஜூலியஸ் - பக். 44
- **தேநீர் சாலை**
  - கரிகாலன் - பக். 49
- **எனது அடையாளம் கவிதை..**
  - தமிழச்சி கோ.பிரியதர்ஷினி - பக். 53
- **ஆவண மலர்களின் அழகுப் பூங்கா**
  - கோதையூர் மணியன் - பக். 55
- **சங்கத்தேன்**
  - நித்யா - பக். 63

## சிறுகதைகள்


- **நட்ட கல்லும் பேசுமோ?**
  - பிரேமபிரபா – பக். 17
- **பாரத மாதா**
  - எம்.முகுந்தன்-தமிழில்: கே.வி.ஷைலஜா – பக். 39
- **சின்னஞ்சிறு உலகம்**
  - கவிஜி – பக். 51
- **ரயில்**
  - லா.ச. ராமாமிருதம் – பக். 58


## கவிதைகள்


- **நா.முத்துக்குமார்** – பக். 09
- **படைப்புலகம்** – பக். 20
- **போகன் சங்கர்** – பக். 35
- **ஊர்மிளை**
  - அழ.ரஜினிகாந்தன் – பக். 41
- **உமா மோகன்** – பக். 48
- **நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் - 11**
  - ஜின்னா அஸ்மி – பக். 52
- **அறிவுமதி** – பக். 57





படைப்பு

★ சமூகத்தின் இணைப்பு ★

# மூன்றாம் ஆண்டு முப்பெரு விழா...

8 செப்டம்பர் 2019





இடம்:

அரசு அருங்காட்சியக கலையரங்கம், எழும்பூர், சென்னை

# தலையங்கம்

வணக்கம்.

படைப்பு 'தகவு' பதினாறாம் மின்னிதழ் உங்கள் கண்முன் விரிந்துபரந்திருக்கிறது.

மனதின் ஆழத்தில் எங்கோ ஒரு மறைவில் துளிர்விடும் ஒரு கருவை உயிராக்கும் பிரயத்தனத்திலும் ஆசுவாசத்திலும் ஒளிர்வதுதான் கவிதை. உள்ளக் கவிதைகளைச் சமூக வெளியில் உலவவிடும்போது எழும் அங்கீகாரங்களும் விமர்சனங்களும் திருத்தல்களும் சிற்பியின் உளிப்பணியைச் செய்வன. 'கடை விரித்தேன் கொள்வாரில்லை' என்பதற்கெல்லாம் இவ்வூடக உலகத்தில் பொருளேயில்லை. எங்கு கடை விரித்தோம் என்பதுதான் முதன்மையான வினாவாய் முன்னிற்கும். சரியான களம் கண்ட கனவுகளுக்கு வெற்றிதான்.. நிச்சயம் வெற்றிதான். இச்சூழலில், சிறந்ததொரு களமாய்த் தங்கள் தளத்தை அளித்துவருகிறது படைப்புக்குழுமம்.

'படைப்பு - சமூகத்தின் இணைப்பு' என்னும் உயர்நோக்கு கொண்ட படைப்புக் குழுமம் உலகெங்கும் தனது வேர்களைத் திரளாய்ப் பரப்பி உயர உயர வளர்ந்துகொண்டேயிருக்கிறது. வேர்களெல்லாம் சங்கமமாகி விருட்சத்தின் விரிவை விழாவாய்க் கொண்டாடி மகிழவிருக்கும் அழகு நிகழ்வு செப்டம்பர் எட்டாம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று சென்னையில் அரங்கேறவுள்ளது.

கவிதையோடு நின்றுவிடாமல் இலக்கிய மின்னிதழ், கவிதை மின்னிதழ், திறமைகளுக்கான மேடை தொலைக்காட்சி என இலக்குகளை நீட்டித்துக்கொண்டே பயணப்படுவது நம் படைப்புக் குழுமம். இவற்றால் அடையாளங் காணப்பட்டு இலக்கியத்திற்காய் இணைந்த உள்ளங்கள் இலக்கிய விழாவிற்காகவும் இணைவது இனிது என எண்ணிய படைப்புக் குழுமத்தின் முன்னெடுப்பினால் நடைபெறவுள்ளது மூன்றாமாண்டு விழா. இலக்கியத்திற்கான அங்கீகாரங்களாய்ப் பல பரிசுகளும் விருதுகளும் 'தகுதி' உடைய சாதனையாளர்களை மகிழ்விக்கவிருக்கின்றன.

இயல்பான ஒரு விழா அல்ல அது. சமூகத்தை நோக்கி வாளாய்த் தம் எழுதுகோலை உயர்த்தும் எழுத்து வீரர்கள் ஒன்றுகூடும் களம் அது. கருத்துக்களிலும் கற்பனைகளிலும் தோய்ந்திருக்கும் கவி உள்ளங்கள் கலந்து மகிழ்ந்திருக்கும் விழாவில் இணைய வாருங்கள்.. வேர்களும் விழுதுகளுமாய் இணைய வாருங்கள்.

இம்மாதத் தகவு இதழில் படைப்பு இலக்கிய விருதுகள் பெறும் நூல்கள் குறித்த அறிமுகம் இடம்பெற்றுள்ளது. நல்ல எழுத்துக்கான அங்கீகாரம்தானே மிக நல்ல எழுத்துக்கள் உருவாவதற்கான விதை. மிகச் சிறந்த ஆக்கங்களை எதிர்பார்த்திருக்கும் படைப்பின் சிறு ஊக்கம் இது. எழுத்தாளர் பாமரனுடனான சந்திப்பு இவ்விதழில் இடம்பெற்றுள்ளது. அவருக்கே உரிய இயல்புத் தொனியில் அனுபவமாய்ப் பல விடயங்களைப் பகிர்ந்துள்ளார். இன்னும் சிறுகதைகள், கட்டுரைகள், தொடர்கள், அனுபவங்கள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

**- ஆசிரியர்**

• படைப்புக் குழுமம்

# படைப்பு இலக்கிய விருதுகள்






படைப்புக் குழுமம் திறமை எங்கிருந்தாலும் அத்திறமை மெய்த்திறமை அறிந்து ஊக்கப்படுத்தும் உன்னதப் பணியை முன்னெடுத்து வருகிறது. அதன் முத்தாய்ப்பாக ஒவ்வொரு ஆண்டுவிழாவிலும் - தலைசிறந்த நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதளிக்கப்படுகின்றன. அவ்வகையில் இந்த மூன்றாமாண்டு விழாவில் இலக்கிய விருதுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள் குறித்த அறிமுகம்..








பிரிவு : கவிதைகள்

விருது பெற்ற நூல் : ரொட்டிகளை விளைவிப்பவன்


படைப்பாளர் : ஸ்டாலின் சரவணன்

வெளியீடு : உயிர்மை பதிப்பகம், சென்னை.

*"சமூகத்தில் நடக்கும் அநீதிகளுக்கு எதிராகத் தங்கள் கருத்துக்களை இளைஞர்கள் வெளிப்படுத்துவார்கள் என்பதற்கு ஸ்டாலின் சரவணனிடம் நிறையக் கவிதைகள் உள்ளன.. ஸ்டாலின் சரவணனுக்கு எழுதுவதில் நல்ல நிதானம் வாய்த்திருக்கிறது.. 'பலகாரத்தில் அங்குமிங்கும் ஓடும் ஒரு சிற்றெறும்பு' எனத் தொடங்கும் கவிதை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. முழு வாழ்வையும் காதலின் சாராம்சத்தில் வைத்துக் கவிதையில் பேசுகிறார்."*

➲ யவனிகா ஸ்ரீராம்.

---



பிரிவு : சிறுகதைகள்

விருது பெற்ற நூல் : திருக்கார்த்தியல்

படைப்பாளர் : ராம் தங்கம்

வெளியீடு : வம்சி புக்ஸ், திருவண்ணாமலை.

*"அதிகம் புனைவு இன்றி, அலங்காரத் தோரணங்கள் இன்றி, மொழி விளையாட்டு இன்றி, பக்கத்துக்குப் பக்கம் 'நான் இன்னாராக்கும்' என்ற கோடி அறிக்கைகள் இன்றி, இயன்ற வரையிலான நேர்த்தியுடன் இவை எழுதப்பெற்றுள்ளன. வாழ்ந்த, வாழும் அனுபவ மொழி துல்லியம் கொள்கிறது."*

➲ நாஞ்சில் நாடன்.




பிரிவு : கட்டுரை/வாழ்வியல்

விருது பெற்ற நூல் :

எங்கே இருக்கிறாய் கேத்தரின்?

படைப்பாளர் : மானசீகன்

வெளியீடு : தமிழினி பதிப்பகம், சென்னை.

*"மனித உணர்வுகளை, மேடும் பள்ளமுமான அவர்தம் வாழ்நிலையைத் துல்லியமாகச் சித்தரிக்கும் கட்டுரை நூல். சமூகத்தின் மீதான தனது விமர்சனக் குரலைத் துளியும் ஒளிவுமறைவின்றி முன்வைக்கிறது. அகம், புறம் என இருதளங்களிலும் பயணப்படும் கட்டுரைகள் நமது வாசிப்பனுபவத்தை மேம்படுத்துகின்றன."*

---




பிரிவு : நாவல்

விருது பெற்ற நூல் : பச்சை மஞ்சள் சிவப்பு


படைப்பாளர் : கவிஜி

வெளியீடு : சப்னா புக் ஹவுஸ், பெங்களூர்.

*"நாவலுக்கான மைய இழையாக இருக்கவேண்டிய கட்டமைப்புகளை உடைத்து, புதுமைக்குள் கருத்துக்களை முன்வைக்கிற மாறுபட்ட நாவலே 'பச்சை மஞ்சள் சிவப்பு'.. விவாதிக்கவும், உணர்ந்துகொள்ளவும், புதைந்துள்ள சம்பவங்களாக நாவல் தளம் அமைந்திருக்கிறது."*

➲ **க.அம்சப்ரியா**

---




பிரிவு : மொழிபெயர்ப்பு

விருதுபெற்ற நூல் :

துண்டிக்கப்பட்ட தலையின் கதை

– உலகச் சிறுகதைகள் – 3.

தொகுப்பும் மொழியாக்கமும் : கார்த்திகைப் பாண்டியன்

வெளியீடு : எதிர் வெளியீடு, பொள்ளாச்சி.

*"மூலத்தினின்றும் மூன்றாவது மொழிக்குப் பெயர்க்கப்பட்டிருக்கும் இக்கதைகள் பல வகைகளிலும் அலாதியானதொரு வாசிப்பனுபவத்தைத் தருபவையாக அமைந்திருக்கின்றன."*

➲ **க.மோகனரங்கன்**

---

## சிறப்புப் பரிசுகள்

---



பிரிவு : கவிதை

நூல் : சாஅய்

படைப்பாளர் : கோ.சாமானியன்

வெளியீடு : சந்தியா பதிப்பகம், சென்னை.

*"பச்சையாகச் சொல்லப்போனால்.. இக்கவிதைகளுக்கு அணிந்துரை எழுதக்கூடிய அளவுக்கு நான் தகுதியுடையவன்தானா என்கிற பெரும் கூச்சத்தைக் கொடுத்தது இத்தொகுப்பு.. ஒன்றோடொன்று ஒப்புநோக்கும் உவமைகளில் ஆச்சர்யமூட்டுகின்றன தம்பியின் வரிகள்."*

➲ **பாமரன்**

பிரிவு : சிறுகதை

நூல் : பிராண நிறக் கனவு

படைப்பாளர் : அண்டனூர் சுரா

வெளியீடு : பன்முக மேடை, தேனி.




"இவரது கதைகளில் அவதானிப்பு, பாத்திரச் சித்தரிப்பு, சுற்றுச்சூழல், இந்திய மாநிலங்களின் பண்பாட்டுக் கோலங்கள், பேச்சு மொழி வழக்கு, சமூகச் சிக்கல்கள், குடும்ப உறவுகள், குறியீட்டுப் படிமங்கள், நனவோடை உத்தி மற்றும் பின் நவீனத்துவம் முதலான அம்சங்கள் அனைத்தும் முழுமை பெற்றிருப்பதனால், ஒவ்வொரு கதையும் என்னை ஆச்சரியப்படவைத்துள்ளன. நான் அறியாத புதிய உலகத்திற்கும் இட்டுச்சென்றன."

➲ லெ.முருகபூபதி.

---

பிரிவு : நாவல் /குறுநாவல்

நூல் : நடுக்கடல் தனிக்கப்பல்

படைப்பாளர் : அன்பாதவன்

வெளியீடு : பத்மம் பதிப்பகம், விழுப்புரம்.




"முற்போக்குக் குரல்களில் அன்பாதவனின் குரல் இன்றியமையாததாகப் படுகிறது. காரணம் அவர் கதைகளின் யதார்த்தம். அதுவும் யாரும் பதிவு செய்யத் தயங்குகிற யதார்த்தம். யதார்த்தம் குலையாத புனைவும் மிகாத எதிர்க்குரல், எதிர்க்குரல் வழி விரியும் மானுடத்தின் பாதை இவைதான் அன்பாதவனின் கதைகள்."

➲ கலைக்கோவன்


---

பிரிவு : கட்டுரை/வாழ்வியல்

நூல் : முகமூடிகளும் முட்கிரீடங்களும்

படைப்பாளர் : பிரேமபிரபா

வெளியீடு : பாரதி புத்தகாலயம், சென்னை.




"என் வாழ்க்கை அனுபவங்கள், போராட்டங்கள், தோல்விகள் என்ற பல படிநிலைகள் என்னை முழுவதுமாக மாற்றியது. கண்ணைக் கட்டிக்கொண்டு பந்தய மைதானத்தின் விளிம்புகளில் ஓடி அதன் வடிவத்தைக் கண்டறிய, எனக்குக் கிடைக்கிறது ஒவ்வொரு முயற்சியிலும், ஒவ்வொரு வடிவங்கள். அதுதான் கடவுளா என்பதில் எனக்கு இன்றும் ஒரு சந்தேகம் இருக்கிறது. இந்தத் தடுமாற்றத்தின் வெளிப்பாடே என்னுடைய படைப்புகள்."

➲ பிரேமபிரபா ■

• கவி : நா.முத்துக்குமார்


மரணிப்பவர் மறைந்தாலும்
மரணத்தின் சுவடுகள் மறைவதில்லை.
மரணத்தைவிடக் கொடூரமானது
மரணம்
மண்ணிலும் மனத்திலும் விட்டுச்செல்லும்
சுவடுகள்.
.........
மரணம் ஒரு மலர்
உதிர்ந்தபிறகும்
காற்றில் அதன் வாசனை
கசிந்துகொண்டிருக்கிறது
மரணம்
ஒரு புள்ளி
அது முற்றுப்புள்ளியா
என்பது மரணத்துக்குப் பின்பே
தெரியும்
மரணம் ஒரு சங்கிலி
மீண்டும் நம்மை அது கருவறையின்
கதகதப்பான இருட்டுக்கு
அழைத்துச்செல்லும். ■





• விக்ரமாதித்யன்

# ரோஸ் ஆன்றா கவிதைகள்




ஆண்டவனோ
அந்நியனோ
பேசிச் சிரித்தாலோ
கோபப்பட்டாலோ
அதே கணம்
கண்ணாடியாய்ப்
பிரதிபலித்து விடுகிறேன்
சர்வ சாதாரணமாய்
பாண்டமாய்
இருக்கச் சொல்லி
வற்புறுத்திக் கொண்டேயிருக்கிறாள்
மனைவி.

('நிலமெங்கும் வார்த்தைகள்', பக்கம் : 17)


*தன்மையில்தான் சொல்லப்பட்டுள்ளது; பார்க்கப்போனால் வாக்குமூலமாகத்தான் இருக்கிறது; அதேசமயம், பகிர்ந்துகொள்ளலும் தான்; தன்னியல்பு: கண்ணாடி; மனைவி இருக்கச்சொல்வது: பாண்டமாய்; இந்த முரண்தான் விஷயமே; பிந்தைய நாலு வரிகள்தாம் முந்தைய எட்டு வரிகளோடு இசைந்து கவிதையாக மாற்றம் கொள்ளச் செய்வன; "உலகத்தோடு ஒட்ட ஒழுகல்" வற்புறுத்தப் படுகிறது? உள்ளதால் உண்டாகும் உபத்ரவம் வேண்டாமென; மனுஷிதானே மனுஷனை அறிவாள்; வெள்ளைக் கவிதைதான்; பாடுபொருள், பிரதானம்; சொற்சிக்கனம், சுருக்கம் சுட்டப்பட வேண்டியவை; வகை வைக்க வேண்டியதே ஆகும்.*

வீட்டினுள்ளிருந்த
வைரம் பாய்ந்த பத்தாயத்தையும்
கதவு கட்டளைகளையும்
பாத்திரங்களையும்
பிக்காசு கடப்பாரையோடு வந்த
பெரியப்பனும் அவனது மகன்களும்
அப்பனை அடித்துப் போட்டுப்
பறித்துச் சென்றனர்
கேட்பாரும் கேள்வியுமின்றி
நனைந்து
நடுங்கிக் கொண்டிருந்தோம்
தொடக்கத்திலிருந்தே
கத்திக் கதறிக்
கண்ணீர் வடித்துக்கொண்டிருந்த
மழையில்.

(பக்கம் : 18)

*பங்காளிச் சண்டை? கடந்த காலத்தில் நேர்ந்த துன்பம்; விவரிப்புகளாலும் சித்தரிப்புகளாலும் இருப்பதைப் புரிந்துகொள்ளலாம்; பெரிய விஷயத்தைக் கூட அலட்டிக்கொள்ளாமல் சொல்வதே நற்கவிதைப் பண்புதான்; "கத்திக் கதறிக் / கண்ணீர் வடித்துக்கொண்டிருந்த" எனும் வரிகள் நைந்தனவாக இருந்தபோதும், விஷயத்தினால் தோற்கவில்லை; செய்தி சொல்லலொப்ப இருப்பதில், இவ்வண்ணம் வரலாகாது; முதல் தொகுப்பு, புதிதாக எழுதவந்துள்ளவர் என்பனவற்றைக் கருத்தில் கொண்டே எடுத்துரைப்பது நாளைப் பின்னே உதவும்.*

காலூன்றிய
அதே இடத்திலேயே நின்று
கை கால்களை நீட்டி
வளர்ந்துகொண்டே
கிடைக்கும் ஏதேனுமொன்றைப்
பற்றிப் பிடித்தெழ
எவ்வித
வாய்ப்பும் கூடாததால்
தன்
மூட்டைச் சுற்றியே
படர்ந்து



பூக்கத் தொடங்கியிருக்கிறது
பாகற்கொடி.

(பக்கம் : 37)

*பாகற்கொடியை உருவகமாகக் கொண்டு, பேசப்படுவதென்ன; இருத்தல்? வாழ்தல்? "மூட்டைச் சுற்றியே" என்பது? எப்படியும் தழைத்து வளரும் என்பதுதானே; பிறிது மொழிதல், புரிந்து கொள்ளப்படவேண்டியது; எளிமையான கவிதை கண்ணில் பட்டது, கருத்திலாகி, செயல்முறைக்குப் பயன்பட்டதோ; நல்ல விஷயம்; நற்கவிதை.*

பீடத்திலேறி நின்றுகொண்டு
பிரசங்கிக்கிறாய்
என்ன பாப
புண்ணியம் செய்தேனோ
நின்ற இடத்திலேயே நான்




நின்றவாறு விழிக்கிறேன்
மலங்கமலங்க

(பக்கம் : 48)

*சீரிய கவிதை; ஏழே வரிகள்தாம்; வார்த்தை செட்டு, சொல்லும் முறை, பேசுபொருள் எல்லாமும் சேர உணர்வுச் செறிவோடு, உண்மையாக; இரண்டாவது பத்தியின் 'நான்' தேவையில்லை; தன்மையில்தானே சொல்வதே; ரோஸ் ஆன்றா மீது நம்பிக்கை வைக்கவும் எதிர்பார்க்கவுமாகவும் நிறையவே உள்ளன.*

நான்கே வயதான
முயல் குட்டி
எட்டு இருபதுக்குப்
போர்வைக்குள்ளிருந்து
தலையை வெளியே நீட்டி
வேன் போய்விட்டதா எனப்
பாட்டியிடம் கிசுகிசுத்ததைக்
கேட்டுக்கொண்டிருந்த அம்மா
சமையலறைக்குள்ளிருந்து வெளியேறி
அடித்தெழுப்பி
எட்டு முப்பதுக்கு வந்து நின்ற
மஞ்சள் நிற வேனில் ஏற்றிவிட்டாள்
மாலையில் திரும்பி வந்த
அதே வேனுக்குள்ளிருந்து
சோம்பலோடு போன முயல்குட்டி
துள்ளிச் சாடி வெளியேறிய வேகத்தில்
புத்தகப் பைக்குள்ளிருந்த
டைரியைப் புரட்டி
மிஸ் போட்டிருந்த கையெழுத்தை
வீட்டுக்குள்ளிருந்த பட்டாசுத் துப்பாக்கியால்
சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருந்தது

(பக்கம் : 57)

*குழந்தைகள் உலகமும் நம்முடைய கல்விமுறையும் கவியின் பார்வையில்; பாடச்சுமை கூடுதலாகிவிட்டது; பெற்றோர், தர வரிசை பார்க்கிறார்கள்; கல்வி, இனிதாய் இருக்க வேண்டியது; வேம்பாக ஆனால்? விடுமுறை விட்டால் ஏன் கொண்டாடுகிறார்கள் குழந்தைகள்?*

இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது
அன்புள்ள கொறட்டிக்கு
மூத்தவள ஆர்சில குடுக்கலாமுன்னா
செங்கபெர கொத்தவேலகாரவிய
மூணு நாலு லெச்சம் கேக்கியானுவ
அதுக்கு எங்க போவேன்
புள்ளைக்க அழகையும் கொணத்தையும்
பாத்திட்டு
முடிஞ்சத செய்யுங்கன்னு சொல்லிற்றாவ
தாலிகெட்டு அவிய மொறையில நடக்கணுமாம்
ரெண்டாமிசியத்துல சேருயதுக்கு சாமியாருகிட்ட
கெட்டிக் குடுக்க பொட்டபுள்ள
இன்னம் ரெண்டண்ணம் இருக்குன்ன பொறவும்
ஐயாயிரம் ரூபா கேக்கியாரு
பீடி சுத்துய பைசாவ வச்சி
நான் ஒத்தைக்கு என்ன செய்வேன்
அது உண்டுன்னா
நெக்குலஸ் எடுத்துப்போடுவேன்
விசயத்தையும் மாப்புள ஊட்டுல தெரிவிச்சேன்
கல்யாணத்த எழில் மண்டபத்துல வச்சிருலாம்
சாமியாரையும் அவியளே
கூப்பிட்டுக்கிடுவாவுளாம்
காட சவுரியானந்தன் அடிச்சான்
மைக்கு செற்ற சோத்தியான் அண்ணே
கொறச்சி அடிச்சித் தருவாராம்
எப்புடியும் ஒருவழியா
ஒப்பேத்திடலாமுன்னு நெனச்சிருக்கேன்
மறக்காம மைனி செல்லச்சி
மாமி ஞானசௌந்திரிய
கெட்டுக்கு முந்துன நாளே
குடும்பத்தோட வந்துரச் சொல்லு
நீ கண்டிப்பா
யாருகிட்ட இருந்தாவது
பத்தாயிரம் ரூபா மறிச்சித் தா
இல்லாட்டி
வட்டிக்காவது எடுத்துத் தாட்டியக்கா
ஜெயசீலிகிட்ட சீட்டுப் போட்டிருக்கேன்
அர்ச்சென்றுக்குப் புடிச்சாப்
பாதிப் பணங்கூட கிடைக்காது
சீட்ட புடிச்ச ஒடனே தந்துருயேண்டி
காட தபாலுல அனுப்பிருக்கேன்னு
மனசுக்க ஒண்ணும் வச்சுக்காத.
இப்படிக்கு
டிலோமி
2/80, மடத்து சமீபம்
மாடத்தட்டுவிளை
வில்லுக்குறி அஞ்சல்
கன்னியாகுமரி மாவட்டம்
தமிழ்நாடு - 629 180.
18.05.2005

(பக்கம் : 58-59)

*பாவப்பட்ட குடும்பத்தில், குமரைக் கரையேத்துவது அரும்பாடு; அதுவும், தனி மனுஷி; கடிதமாய் நாஞ்சில் தமிழில்; இன்றைய கவிதை; பெண் வாழ்வை எழுதத் தோன்றியதே பெரிய விஷயம்; அல்லல் அத்தனையும் பேசப்பட்டுள்ளன.*

*புதிதாக எழுதிவரும் இளைஞர்களுள் ஒருவர், ரோஸ் ஆன்றா; 'படிகம்' எனும் நவீன கவிதைக்கான இதழைத் தொடங்கி, செம்மையாக நடத்திவருபவர்; அவர் பணியைச் சிறப்பிக்கும்முகமாகவே எழுத முற்பட்டதே; கவிஞர் யவனிகா ஸ்ரீராம் தொகுப்பின் கவிதைகளைச் சரியாகவே மதிப்பிட்டு முன்னுரை எழுதியுள்ளார்; வாசகர்களுக்கு உதவும்படியாய் அமையும்; எதிர்வரும் நாள்களில், வளர்ந்து, தேர்ந்து, ஆசறு நல்ல நல்ல கவிதைகள் வழங்க வாழ்த்துக்கள்.*

நூல் : **நிலமெங்கும் வார்த்தைகள்**

ஆசிரியர் : ரோஸ் ஆன்றா

வெளியீடு : புது எழுத்து, 2/205, அண்ணா நகர், காவேரிப்பட்டணம் - 635112, கிருஷ்ணகிரி மாவட்டம்.

செல் : 9042158667.

முதல் பதிப்பு : டிசம்பர் 2017.

• முகம்மது பாட்சா

# ஆசியான் கவிஞர் க.து.மு.இக்பால்



**எவரும் என் விளக்குகளை
அணைக்கலாம்
என்னை அணைக்க முடியாது
ஏனெனில் - நான்
நீ ஏற்றிய விளக்கு!**

கவிதைகளால் கவிஞன் சிறப்புப் பெறுகிறான். கவிஞனால் கவிதைகள் சிறப்புப் பெறுகின்றன.. இது ஒரு அரபிய வழக்குமொழி. உண்மையில் கவிதைகள் கவிஞனால்தான் சிறப்புப் பெறுகின்றன. அவன் காலத்தின் பதிவுகளை எழுத்துக்களால் அலங்கரிப்பவன். அந்த அலங்கரிப்புகள் அவனுக்கே புகழ் மாலைகளாக வந்து குவிகின்றன. அப்படியொரு கவிஞன்தான் ஆசியான் கவிஞர் க.து.மு. இக்பால் அவர்கள்.

கவிஞர் க.து.மு. இக்பாலைப் பற்றி இங்கு எத்துணைப் பேருக்குத் தெரியும் என்று தெரியவில்லை. பல சாதனைகளுக்குச் சொந்தக்காரரைப் பல நாடுகள் பாராட்டிக் கௌரவித்தபோதும், நம் தமிழ்நாட்டில் மட்டும் அவருக்கென எதுவும் விழா எடுத்ததாக அறிய முடியவில்லை.

சிங்கப்பூரைத் தேசியமாகக் கொண்டாலும் கவிஞரின் பிறப்பிடம் நம் தமிழ்நாட்டின் கடையநல்லூர்தான். 1941இல் துவான் ரஹமத்துல்லா - பீர் பாத்திமா தம்பதியின் மகனாகப் பிறந்தவர். சிங்கப்பூரில் வங்கி ஊழியராகப் பணிபுரிந்து அங்கேயே வாழ்விடமாகவும் வாழ்ந்துவருகிறவர்.

தனது 15வது வயதிலேயே கவிதைகளை எழுதத் தொடங்கிய கவிஞர் இதுவரை 14க்கும் மேற்பட்ட கவிதைத் தொகுப்புகளைப் படைத்திருக்கிறார்.

சிங்கப்பூர் வானொலியில் 'பாடிப் பழகுவோம்' என்ற நிகழ்ச்சிக்கு மட்டும் 1970-80 இடைப்பட்ட காலத்தில் 200க்கும் அதிகமான பாடல்களை எழுதிய கவிஞர் இவர் மட்டும்தான்.

சிங்கப்பூரின் உயரிய விருதான கலாச்சார விருது 2014இல் வழங்கப்பட்டது. அதுமட்டுமில்லாமல் சிங்கப்பூர் இந்திய நுண்கலைக் கழகத்தின் கலாரத்னா விருது 1990லும்

தென்கிழக்காசிய இலக்கிய விருது, தமிழவேள் விருது, மோண்ட்பிளாங் இலக்கிய விருது ஆகியவற்றையும் பெற்றுள்ளார்.

கவிஞரின் 'கனவுகள் வேண்டும்' என்ற கவிதைத் தொகுப்பில் இடம்பெற்ற 'தண்ணீர்' என்ற கவிதை பெரும் புகழைப் பெற்றுத் தந்தது. அவரது இந்தக் கவிதையைக் கௌரவிக்கும் முகமாகச் சிங்கப்பூர் தேசியக் கலைகள் மன்றத்தின் சார்பில் இந்தக் கவிதை எம்.ஆர்.டி.ரயில் வண்டிகளில் இடம்பெற்றது.

ஜெர்மனியில் ஹனேவர் நகரில் நடைபெற்ற எக்ஸ்போ 2000 எனும் மாபெரும் உலகக் கண்காட்சியில் கோய்த்தே இன்ஸ்ட்டியூட் ஆதரவில் 'தண்ணீர்' கவிதையும் இடம்பெற்றது.

தென்கொரியாவின் பூசான் நகரில் நடைபெற்ற ஆசிய பசிபிக் பொருளியல் உச்ச நிலை மாநாட்டில் 'மாலைப்பண்' என்ற கவிதை இடம்பெற்றது. அதுமட்டுமில்லாமல் இந்தக் கவிதை 'Representative poetry of participating nations in 2005 APEC' எனும் தொகுப்பிலும் இடம்பெற்றுள்ளது.

சிங்கப்பூர் பிச்சினிக்காடு இளங்கோவன் அவர்களின் முயற்சியால் தொடங்கப்பட்ட கவிமாலை என்ற இயக்கத்தில் கவிஞர் க.து.மு.இக்பால் முக்கிய முடிவுகளை எடுக்கும் நபராகவே நியமிக்கப்பட்டார். அங்கு வளரும் சமுதாயத்திற்கான கவிதைப் பட்டறைகளையும் யாப்பிலக்கண வகுப்புகளையும் எடுத்துப் பழக்கி வந்தார் என்பதையும் அறியமுடிகிறது.

கவிமாலை இயக்கத்தின் விழாக்களில் பங்குபெற்றுச் சொற்பொழிவாற்றாத தமிழ்க் கவிஞர்களே இருக்க முடியாது என்று சொல்லலாம்.

கவிஞரின் முக்கியக் கவிதைகளைத் தொகுத்துச் சிங்கப்பூர் தேசியக் கலைகள் மன்றம் 2016இல் கவிதைப்பெண் என்ற தலைப்பில் நூலாகவும் வெளியிட்டுள்ளார்கள்...

எண்ணற்ற விருதுகளையும் பாராட்டுகளையும் வாங்கிக் குவித்த கவிஞர் க.து.மு. இக்பால் அவர்களை, தமிழ்நாட்டின் இலக்கிய உலகம் இதுவரை தூக்கிச் சுமக்காதது ஏன்? என்ற கேள்வி ஒன்று தொக்கி நிற்கிறது..

சமீபத்தில் கவிக்கோ மன்றத்தில் இடம்பெற்றுள்ள முக்கியக் கவிஞர்களின் நிரந்தரப் புகைப்படங்களில் கவிஞரின் படத்தையும் காணமுடிந்தது..

கவிஞரின் கவிதைகள் ஒவ்வொன்றுமே காலத்தின் சுழலில் நகர்கின்றன. மென்மையாகப் பேசும் கவிதைகள் அவலத்தின் அழுக்குகளைச் சுட்டிக்காட்டாமல் நகர்ந்ததில்லை. சொல்வளம், பொருள் வளம், கற்பனை, மொழியாளுகை அத்துணையிலும் கைதேர்ந்தவராகவே கவிஞர் விளங்குகிறார். இவரது கவிதைகளைக் கவிக்கோ அப்துல் ரகுமான் தேன்கூட்டின் சேகரங்கள் என்று புகழ்கிறார்.

குழந்தைகளுக்குக் கவிதையாக அவர் சொல்லும் உபதேச மொழியும் கூட புதுமையாகவே இருக்கிறது...

**இன்று தள்ளாடி நடந்து**
**நாளை தவழப் போகிறவன் நான்**
**நீயோ**
**இன்று தவழ்ந்து**
**நாளை நடக்கப்போகிறவன்**
**உனக்கு நடைவண்டி**
**எனக்கு ஊன்றுகோல்!**

மாலைப்பண் என்ற கவிதையில் வரும் இந்த வரி ரூமியோடு கஸலாக இழைகிறது...

**அரவணைக்கப் போகும் மண்ணை**
**அடிக்கடி பார்த்துக் கொள்ளவோ**
**என் முதுகை வளைத்தாய்?**

பெண்களைக் கவிதையின் மென்மையோடு நோக்குகின்ற கவிஞர் தனது கவிதையில் ஒப்பீடு செய்கிறார்.

**பெண்ணைப் போலவே**
**கவிதைக்கும் நாணமுண்டு**
**கவிதையும்**
**எதையும் மறைத்தே பேசுகிறது**
**முக்காடு போட்டுக்கொண்டே**
**எதையும் செய்கிறது...**

சமூகத்தின் ஓரங்கமான காதலைப் பற்றியும் கவிஞர் எழுதுகிறார் தாஜ்மஹாலின் வாசலில் அமர்ந்துகொண்டு... என்னவொரு நயம்! அனுபவியுங்கள்...

**'ஒரே சொல்லில் வடிக்கப்பட்ட**
**கவிதை நீ**
**யமுனையில் நீ**



முகம் பார்க்கிறாயோ இல்லையோ
யமுனை உன்னில்
தன்னைப் பார்த்துக் கொள்ளும்
ஏனெனில்
காதல் தண்ணீரைவிடத் தெளிவானது
கலங்கினாலும்
தூய்மையாகவே இருப்பது'

இறந்தவர்களைக் காலம் ஆகிவிட்டார்கள் என்பது வழக்கு மொழியென்றாலும் முன்னோர்களின் இந்தச் சொல்வழக்கு எவ்வளவு பொருளைச் சுமந்து வருகிறது... காலத்தோடு வாழ்ந்து காலத்தோடே மரணம் எய்வதுதானே வாழ்க்கை.. கவிஞரின் பார்வையிலும் காலமாதல் கவிதையாக விரிகிறது..

நேரம் முடிந்தபிறகு
நீயும் நானும் எப்படி
காலம் ஆகிறோம்?
காலம் ஆவதற்குள்
நானும் காலம் ஆக வேண்டும்!

இவரது சொல்வடிவங்களில் சொக்கித்தான் தாய்லாந்து அரசும்கூட இவருக்குத் தென் கிழக்காசிய இலக்கிய விருதினை 2001இல் வழங்கியது...

கவிஞரின் புகழ்பெற்ற கவிதையான தண்ணீர் கவிதையை வாசிக்காவிட்டால் இந்தக் கட்டுரை முழுமையடையாது... உலகத்தின் இன்றைய முக்கியப் பேசுபொருளே தண்ணீர்தான். தண்ணீர்தான் அடுத்த உலகப்போருக்கும் காரணியாக விளங்கும் என்பதைக் கவிஞர் வைரமுத்துவும் முழங்குகிறார். தண்ணீர் கடலில் கலந்துவிடுவதைத் தடுப்பதுதான் சரியென்று வாதிடும் அதே வேளையில் இயற்கையோடு சிந்திக்கும் கவிஞர் தண்ணீர் கடலோடு சேரும்போது செல்லும் வழிக்கரைகளில் ஊற்று எடுப்பதாகச் சொல்கிறார்.. அதுதான் உண்மையும் கூட... அணைகளைக் கொண்டு நதிகளைத் தடுத்ததால் அதன் வழிகள் இறந்துவிட்டதை இப்போது அனுபவப்பூர்வமாக உணர்கிறோம்...

தண்ணீர்

வெயிலின் வாய் உன்னை
விழுங்கிவிட்டதாக
நினைத்துக் கொண்டிருந்தேன்...

மழையாக நீ
மண்ணுக்குத் திரும்பும்வரை!

கடலுக்குள் ஆறாய்க் கலந்து நீ
களங்கப்பட்டு விட்டதாகக்
கலங்கிக் கொண்டிருந்தேன்...

ஓரக்கரையில் நீ
ஊற்றாகச் சுரக்கும்வரை!

இறங்கிவர மட்டுமே
உனக்குத் தெரியும் என்று
எண்ணிக் கொண்டிருந்தேன்...

ஆவியாக நீ
ஆகாயத்தில் ஏறும்வரை!

உயிர்களை உண்டாக்கும்
உன்னதப் பொருளாகவே
உன்னைப் பாடிக்கொண்டிருந்தேன்...

மூழ்கிச் செத்தவர்களை நீ
முதுகில் சுமந்து காட்டும்வரை!

தண்ணீரே
புற அழுக்கை மட்டுமே உன்னால்
போக்க முடியும் என்றிருந்தேன்...

என் சோக அழுக்கை நீ
கண்ணீராக வந்து சுத்தம் செய்யும்வரை! ■

• பிரேம பிரபா
ஓவியம் : அன்பழகன்

# நட்ட கல்லும் பேசுமோ? (நவ கண்டம்)

**"என்னை முன் நில்லன்மின் தெவ்வீர் பலரென்னை முன்னின்று கல்நின் றவர்" – திருக்குறள்.**


தமிழகப் போர்களில் முக்கியத்துவம் வாய்ந்தது வெண்ணிப்போர். காவேரியாற்றின் கரைகளை உயர்த்தி, கல்லணையும் கட்டிய சோழ மன்னனின் வீரத்தைப் பறைசாற்றும் போர்தான் வெண்ணிப் போர். சோழ நாட்டைப் போராடி வென்றுவிடலாம் என்று ஒன்பது வேளிர் குறுநில மன்னர்களும் பாண்டிய மன்னனுக்கு முதலில் ஆசை வார்த்தை காட்டினார்கள். பாண்டியன் சற்றே தயங்க, சேர மன்னன் பெருஞ்சேரலாதன் துணைக்கு வந்தான். சேரன், பாண்டியன் மற்றும் ஒன்பது வேளிர் குறுநில மன்னர்களும் சோழ நாட்டைக் கைப்பற்ற படைகளோடு வந்தார்கள்.

போர்ப் பறை அதிர சோழ நாட்டில் மறவர் பலரும் திரண்டனர். அங்கிருந்த சான்றோர் ஒருவர் போர்க்குரிய பூவைப் பெற்றுச்செல்லுமாறு அனைவரிடமும் கூறுகின்றார். கரிகாலன் தன் யானைப்படைகளின் தந்தங்களில் கூரிய ஈட்டி முனைகளைப் பொருத்தி எதிரி படைகளுக்குள் ஊடுருவச் செய்கிறான். எண்ணற்ற வீரர்களைத் தூக்கி எறிந்தபடியே சோழனின் யானைப்படை விரைவாக முன்னேறுகிறது. இதைப் பார்த்த புலவர் பெருமக்கள் நீல வானத்தைக் கார்மேகங்கள் சூழ்ந்தது போல் யானைப்படைகள் காட்சியளித்ததாகப் பாடியிருக்கிறார்கள்.

சோழ மன்னன் கரிகாற்சோழனுடன் நடந்த வெண்ணிப் போர் வாகைப் பெருந்தலை என்னுமிடத்தில் ஒரு முடிவிற்கு வந்தது. கரிகாற் சோழன் இறுதியில் தன்னை எதிர்த்து நின்ற ஒன்பது குறுநில மன்னர்களின் கூட்டணியை முறியடித்து வெற்றி வாகை சூடினான். போரில் திருமாவளவன் எய்த நெடுவேல் சேரனின் மார்பைத் துளைத்து ஊடுருவிச் சென்று முதுகின் புறத்தே புண் செய்தது. இப்படிப் புண் செய்வது புறமுதுகிட்டு ஓடுதலிற்கிணையான வீரக் குறைபாடு என்று கருதிய சேரன் அப்போதே வடக்கிருந்து உயிர் நீக்கப்போவதாக அறிவித்தான். தன் உடைவாளின் கூர் முனை கழுத்தை நோக்கி இருக்குமாறு நட்டுவிட்டு அன்னம் தண்ணீர் தவிர்த்து உண்ணா நோன்பிருக்க ஆரம்பித்தான்.

போர்க்களம் அமைதியானது. சோழனின் வெற்றிமுரசு முழங்கவில்லை. பாணர் யாழிசை கூட்டிப் பாடவில்லை. வீரர்கள் வெற்றியைக் கொண்டாடிக் கள் பருகவில்லை. ஊரிலுள்ள மக்கள் சுற்றத்தாருடன் தேறல் அருந்தவில்லை. உழவர்கள் வயல்வெளியிலும் குரவை ஓசை எழுப்பவில்லை. சோழ மக்கள் வெற்றித் திருவிழாவைக் கொண்டாடக்கூட மறந்துவிட்டனர்.

போர் முடிந்து அரண்மனையை நோக்கி அணிவகுத்துச் செல்லும் போர் வீரர்களின் ஒரு பிரிவைத் தலைமை தாங்கி வழிநடத்திய அரவான் பாதை இரு மருங்கிலும் நின்றுகொண்டிருந்த மக்களிடம் மௌனமாகத் தன்னிடம் இருக்கும்



வேலினை உயரே உயர்த்திக் காட்டிக்கொண்டே நடந்தான். அவன் அணிந்திருந்த இடுப்புக் கச்சையின் திடமான மடிப்புகளில் இருக்கும் குஞ்சங்கள் அவன் நடையின் அதிர்வைத் தாங்கமுடியாமல் தடுமாறின. அவனுக்கு முன்னே சென்ற சோழனின் வெற்றிக்குக் காரணமான யானைப் படைகள், பிளிர மறந்து மௌனமாக அணிவகுத்தன. அரவான் தன் இளம் மனைவியை விரைவில் பார்க்கப்போகிறோம் என ஒருபுறம் மகிழ்ந்தாலும் மறுபுறம் போர்க்களத்தில் சுயேச்சையாகத் தான் எடுத்த முடிவை அவள் எப்படி ஏற்றுக்கொள்ளப்போகிறாளோ என்று உள்ளூர மருகினான்.

கரிகாலன் போர் புரிவதை மிக அருகில் இருந்து பார்த்தவர்களுள் அரவானும் ஒருவன். மின்னலென விண்ணில் இறங்கிய மன்னரின் வாள்வீச்சையும், இடியெனத் தகர்ந்து தரையைப் பிளந்த கேடயத்தின் தொடர் இரைச்சலையும் கேட்டு அப்படியே பிரமித்து நின்றான். இதை எப்படியோ ஓரக்கண்ணால் கவனித்த சோழன் அரவானைச் சுய நினைவிற்குக் கொண்டு வரக் குரல் எழுப்பினான். என்ன ஒரு கம்பீரமான குரல் என்று வியந்த அரவான் சுய நினைவிற்கு வர மிகுந்த உற்சாகத்துடன் தொடர்ந்து போரிட்டான்.

குளிர், பனி என்று பாராமல் போர்க்களத்தில் புண்பட்ட மறவர்களைச் சோழன் நள்ளிரவானாலும் கண்துயிலாது ஆறுதல்படுத்துவதைக் கடமையாகக் கொண்டிருந்தான். அப்படியான ஒரு இரவில்தான் அரவானையும் சோழன் சந்தித்தான். அவன் தோள்களைத் தட்டிப் பாராட்டியவன் "போர்க் களத்தில் நடக்கவேண்டும். கனவில் அல்ல வீரா!" என்று கூறி அந்த இடமே அதிரும்வண்ணம் சப்தமாகச் சிரித்தான். அரவான் ஒன்றும் கூறாமல் "மன்னருக்கே வெற்றி. மன்னருக்கே வெற்றி" என்று வெறி கொண்டவன் போலக் கையை உயர்த்தி மற்ற மறவர்களையும் ஒருமித்துக் குரல் எழுப்பச் செய்தான். போரில் பெரும்புண்பட்டு வீழ்ந்த மறவர்களுக்கு மருத்துவம் செய்யும்போது அவர்களின் வேதனையை மறக்க விறலியர் ஆடிப்பாடுவது வழக்கம். புண்பட்ட ஒவ்வொரு வீரரையும் சந்தித்து ஆறுதல் கூறிய சோழன் தன்னைப் பின் தொடர்ந்து வந்த அரவானைத் திரும்பிப் பார்த்து மெலிதாகப் புன்னகைத்தான். அந்த ஒரு நொடியில் அரவானின் மனதில் பெரும் வெளிச்சமெனத் தோன்றிய தீர்மானத்தைத் துளியும் அறியாதவனாயிருந்தான் சோழன் அப்போது.

அரவான் வருவதைக் கதவிடுக்கின் வழியாகப் பார்த்த முல்லை வேகமாகச் சாலைக்கு ஓடி வந்தாள். அவனை வரவேற்கச் சுற்றங்கள் இரவில் இருந்தே காத்துக்கொண்டிருந்தார்கள். மதர்த்துத் திமிறிய தோள்கள். அகன்ற விழி. தெறித்துச் சிவந்த கூரிய நாசி. சிறிய புன்முறுவலுடன் மீசையை முறுக்கிக் கொண்டே அரவான் முல்லையைத் தொடர்ந்து ஓரக்கண்ணால் யாரும் அறியாவண்ணம் உற்றுப் பார்த்துக்கொண்டேயிருந்தான். முதலில் நாணித் தலை குனிந்தவள் வாசல் திண்ணையில் வைத்திருந்த நிறைகும்பத்தை எடுத்து அவனை வரவேற்றாள். தன்னைக் காண வந்திருந்த ஊர்ப்பெரியவர்கள் அனைவரையும் வணங்கி நன்றி தெரிவித்தான் அரவான். பிறகு வீட்டினுள் நுழைந்தான். தன் தலையில் அணிந்திருந்த மகரந்தங்கள் உதிர்ந்த வாகை மலரை எடுத்து முல்லையின் நெற்றி, விழிகள், நாசி, இதழ்கள், சங்குக்கழுத்து வழியாக அப்படியே தீண்டிக்கொண்டு வர தன்னிலை மறந்த முல்லை அவனை வெட்கத்துடன் நெஞ்சோடு நெஞ்சாக இறுக அணைத்துக்கொண்டாள்.

இரவு முல்லையிடம் போர்க்களத்தில் தான் நேரில் கண்ட சோழனின் வீரத்தைப் பற்றிப் பேசிக் கொண்டே இருந்தான் அரவான். "முல்லை நம் மன்னரின் வெற்றிக்காக நீ என்ன கொடுப்பாய்?" இந்தக் கேள்வியின் ஆழத்தை அந்த அளவிற்குப் புரிந்துகொள்ள முடியாத முல்லை அவனையே மிரண்டபடி பார்த்தாள். மறுபடியும் அதே கேள்வியை வேறு விதமாகக் கேட்டான். "முல்லை, நம் மன்னரின் வெற்றிக்காக நீ என்னைக் கொடுப்பாயா?" கேள்வியைத் தனக்குள் ஒருமுறை கேட்டுக்கொண்டவள் "நம் மன்னரின் வெற்றிக்கு உங்களை நான் ஏற்கெனவே கொடுத்துவிட்டேனே, பிறகென்ன?'' என்று அப்பாவியாக முகத்தை வைத்துக்கொண்டு கேட்டாள். முல்லையை மேலும் தெளிவுபடுத்தத் தயக்கத்துடன் வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து மெதுவாகப் பேசினான் அரவான்.

"முல்லை நான் கூறுவதை மிகவும் கவனமாகக் கேள். எந்தச் சந்தர்ப்பத்திலும் உணர்ச்சிவயப் படமாட்டேன் என்று நீ வாக்களித்தால் மட்டுமே நான் இதைக் கூறுவேன்" என்றான்.

அரவானின் கைகளை இறுகப் பற்றித் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள் முல்லை. "தனி ஒரு நாடாக நின்று பாண்டியரையும், சேரனையும், ஒன்பது வேளிர் தலைவர்களையும் போரில் முறியடித்து வெற்றி பெற்ற நம் மன்னருக்கு நாம் ஏதாவது பரிசு அளிக்கவேண்டாமா? நான் ஒருவேளை கவிஞனாயிருந்தால் மன்னரின் போர்த் திறமையை வர்ணித்து ஒரு நெடிய போர்ப்பரணியே பாடியிருப்பேன். மன்னர் வெற்றி பெற போர்க் களத்திலேயே நான் ஒரு தீர்மானம் செய்து கொண்டேன் முல்லை" என்றான். சிறிது நேர இடைவெளிக்குப் பிறகு அரவான் தொடர்ந்தான்.

"அரசரின் வெற்றிக்குக் கொற்றவையிடம் வேண்டி நவகண்டம் ஏற்கத் தீர்மானித்துவிட்டேன்."

இதைக் கேட்டு அதிர்ந்த முல்லை அவன் மேல் மூர்ச்சையுற்றுச் சரிய, அவளை அப்படியே அள்ளிப் படுக்கையில் கிடத்தினான்.

நவகண்டம் என்பது.. தனது நாட்டு அரசன் போரில் வெற்றி பெற்றால் தன் உயிரையே பலியிடுவதாக வேண்டிக்கொள்வார்கள். அவ்வாறு அரசன் வெற்றி பெற்றவுடன் வேண்டுதலை நிறைவேற்ற உடம்பில் கை, கால் என ஒன்பது இடங்களில் வெட்டிக்கொண்டு, முடிவில் கழுத்தில் கத்தியால் வெட்டித் தங்களது உயிரைப் பலி கொடுப்பார்கள்.

மீண்டும் அவள் கண் விழிக்க அவளின் நெற்றியில் ஆழ்ந்த முத்தத்தைப் பதித்தான். படுக்கையின் தலைமாட்டில் இருந்து நறுமணப் புகை அறை முழுவதும் வெண்மேகம் போல் பரவ அரவானின் மார்பு ஒருமுறை விம்மி அடங்கியது. சிவந்த கண்களுடன் காலையில் எழுந்தவள் கலைந்த உடைகளை நேர் செய்து கூந்தல் கோதி அறையிலிருந்து வெளியேறினாள்.

அடுத்த நாள் ஊர்ப் பெரியவர்கள் அரவானைக் காண வந்திருந்தார்கள். அனைவரிடமும் அரவான் தன் முடிவைப் பணிவுடன் தெரிவித்தான். அன்றிலிருந்து தினம் ஒரு குடும்பமென அரவானுக்கு மிகவும் பிடித்த உணவினைச் சமைத்துக் கொண்டு வந்தார்கள். விழாவிற்காகக் கொற்றவையின் கோயிலை மீள் புனரமைத்தார்கள். நீண்ட சடைமுடியுடன், புலித்தோல் ஆடையுடன், புலிப்பல் தாலியுடன், முறுக்கிய கொம்புகளையுடைய கலைமான் மேல் அமர்ந்து கையில் வில்லுடன் அனைவருக்கும் அருள் பாலித்துக்கொண்டிருந்தாள் கொற்றவை. விழாவின் தொடக்கத்தில் வண்ணக் குழம்பு, சுண்ணப்பொடி, மணமுள்ள சந்தனம், எள்ளுருண்டை, இறைச்சியுடன் கூடிய சோறு, நறுமணப் புகை தூபம் தாங்கிப் பெண்கள் ஊர்வலத்தில் வர, உடன் வருபவர்கள் பறையடித்து மக்களை உற்சாகப்படுத்திக்கொண்டே வந்தார்கள். சோழ நாட்டில் அரவான் தன்னை நவகண்டம் ஏற்கத் தயாராயிருந்த அதே சமயம் சேர நாட்டில் வடக்கிருந்து உயிர் துறக்கும் வரை உண்ணா நோன்பு ஏற்ற மன்னனைக் காண கண்ணீருடன் தொடர்ந்து மக்கள் திரண்டு வந்துகொண்டிருந்தார்கள். அரண்மனை வைத்தியரிடம் தலைமைச் சேனாதிபதி "மன்னரின் தற்போதைய நிலை எப்படியுள்ளது?" என்று கேட்க "மன்னர் தன் சுய நினைவை வேகமாக இழக்க ஆரம்பித்துவிட்டார்" என்று உதிரம் படிந்த மன்னரின் கழுத்தைக் காண்பித்தார். மூர்ச்சையுற்ற மன்னனின் தலை சற்றே சரிந்து நிலை தடுமாறத் தரையில் நட்டிருந்த வாளின் நுனி மன்னரின் கழுத்தை அறுத்து ரணமாக்கியது.

பக்தியுடன் அரவானைக் கொற்றவைக் கோயிலிற்கு அழைத்து வந்தார்கள். இடையில் உடைவாளும், மார்பில் கவசமும் தரித்துப் போர்வீரன் போல் போர்க்கோலம் பூண்டுஇருந்தான் அரவான். கோயிலின் முன்புறம் இருக்கும் திடலில் அவனை அமர வைத்தார்கள். திருமஞ்சனமாட்டுவித்து, திருநீற்றுக் காப்புமிட்டு, புது ஆடையுடுத்தி, ஆபரணங்கள் பூட்டி அலங்கரித்து, பரிமளக் கஸ்தூரிகள் பூசி, வீர சந்தனம் இடுவித்து, பாக்கு வெற்றிலையை அவன் கையில் கொடுத்தார்கள். வாசனைத் திரவியங்கள் கலந்த நீரினால் முல்லை அவன் பாதங்களைக் கழுவினாள். கை நிறைய சந்தனம் எடுத்து அவன் பாதத்தில் பூசி, நெற்றியில் திலகம் இட்டாள். எதற்கும் கலங்காமல் வாளுடன் அமர்ந்திருந்த அரவானைக் கடைசியாகப் பார்த்தாள் முல்லை. கொற்றவையைப் பார்த்தபடி முழங்காலிட்டு நின்ற அரவான் தன் கற்றைத் தலைமுடியை இடது கையால் இறுகப்பிடித்து மேலே உயர்த்தி வலது கையில் இருக்கும் வாளினால் கழுத்தை அறுத்துக்கொண்டான். வீரக் கொம்பு, வீர மல்லாரி, வலம்புரி சங்கின் ஒலியுடன் பறை ஒலியும் பெண்களின் குரவை ஒலியும் சேர அரவான் பூவுலகம் சென்றான். மக்கள் அனைவரும் அரவானை மனதார வாழ்த்தி வழி அனுப்பினார்கள். சிரசற்ற உடல் தரையில் சரிய அதை அப்படியே முல்லை வாரிச் சேர்த்து அணைத்துக்கொண்டாள்.

பாலில் ஊறவைத்திருந்த வீரக்கல்லில் அரவானின் உருவத்தைப் பொறித்து அவன் இறந்த இடமான கொற்றவைக் கோயிலின் முன் இருக்கும் திடலில் நட்டு, மாலை சூட்டி, பூச்சொரிந்து, சந்தனம் குங்குமம் சாற்றி, வீரக்கல்லைச் சுற்றி மயிற்பீலியால் அலங்கரித்து வந்திருந்த அனைவரும் காப்பு நூல் கட்டிக்கொண்டார்கள். துடி என்னும் பறையை முழக்கி, நெல்லிலிருந்து தயாரித்த தோப்பி என்னும் கள் வைத்து, செம்மறியாட்டைப் பலிகொடுத்துப் படையல் போட்டார்கள். வீரக்கல்லைச் சுற்றி வில், வேல், வாளால் வேலி அமைத்தார்கள். அந்த இடத்திலேயே முல்லை தன் அணிகலன்களையும் கூந்தலையும் களைந்து கைம்மை நோன்பு ஏற்றாள்.

• • •

கரிகாலன் அரசவையில் வீற்றிருந்தான். "மன்னருக்கே வெற்றி, மன்னருக்கே வெற்றி" என்று உரத்துக் குரலெழுப்பிக்கொண்டே அந்த வீரன் மன்னரை நோக்கி வந்தான். தான் போரில் வெற்றி பெற நவகண்டம் ஏற்று உயிர் துறந்த அரவானின் குரல்தான் அது என்று அறிந்த மன்னன் அந்த இளைஞனை ஆவலுடன் நெருங்க, அறை முழுவதும் பரவிய நறுமணப் புகையின் காலை பனியொத்த மெல்லிய மூட்டத்தில் கரிகாலனின் பார்வையிலிருந்து அரவான் மெல்ல மெல்ல மறைந்து கொண்டே போனான். ■

ஓவியங்கள் : அன்பழகன்

# 11.08.19 அன்று நடைபெற்ற தலைமைச்செயலகத் தமிழ் மன்றக் கவிதைப்போட்டியில் தெரிவு செய்யப்பட்ட கவிதைகள்



## தனிமையின் மேல் ஒளிரும் பிறைநிலவு

என் அத்தனையிலும்
இணங்கிப்போக
ஒருவர் கூட இல்லாமல்
உடையத் தொடங்குகிறது
என் காலங்கள்

சுவையற்றதாகத்
தெரியும் என் மனதில் ஒரு பூ மலர
நான் அனுமதித்திருக்கவேண்டும்
இன்றைய நெருப்பு
அணைந்திருக்கும்

எல்லா நிகழ்வுகளையும்
சகித்துக்கொள்ளக்
கற்றுக்கொள்கிறேன்

என் தனிமையும்
என்னை விரட்டிவிட
நினைக்கிறது
நான் ஏதேனும் சொல்வேனா என்று
என்னுடனேயே
காத்திருக்கிறது

அதற்குத் தெரியாது
யாரிடமும் எதையும்
நான் பகிர்வதில்லையென்பது

பேசிக்கொள்கிறேன்
எனக்குள்ளேயே
என் படுக்கையறை
சன்னலில் தெரியும்
மரக்கிளையிடம்
செடியில் மலரும்
பூக்களிடம்
என்னோடு விளையாடும்
அணிலிடம்
என்னைப் போட்டியாக நினைத்துத் தலைசாய்த்துப்
பார்க்கும் புறாவிடம்

ஓவியங்கள் : அன்பழகன்

என் தனிமையைப்
பகிர்ந்துகொள்கிறேன்

சிலநேரங்களில் என் தனிமையின் மௌனத்தைக்
கடல் அலைகளும்
கடத்திச்செல்ல அனுமதிக்கிறேன்

தனிமையின் வலியில் திட்டுத் திட்டாக
உறைந்து
நெளிந்து உருண்டு புரண்டு
மூச்சுக் காற்றும் அந்நியமாகும்
தருணங்களில்

நிலவின் மடியில்
தலை சாய்த்து உறங்க
நெற்றியை வருடிக்கொடுக்கும் உலகத்தில்
எனது தனிமையில்
எனது பால்வெளியில்
ஒளிர்ந்துகொண்டிருப்பேன்
ப்ரகாசமான
முழுநிலவென...

– லட்சுமி

## முழு இரவின் கடைசித் துளி

தூங்கிக் குறுகிய அந்த
இரவுகளின் நுனி பின்அந்தி!

இருட்டுக்குப் பழகிக் கண்கள் கேட்கும்
மான்களின் வாயசைப்பில் நீள்கதைகள்!

தீவிரவாத அடிகள் முதுகில் விழ
யூனியன் பிரதேசங்களாய்ப் பிளவுபட்டு
ஆளுக்கொரு மூலையில்
'கண்ணவிய' செல்லமாய்ச் சபிக்கப்பட்டோம்!

மாணவப் புத்தகங்கள் தரைபார்க்கத்
தூங்கி வ(வி)டியும்
அந்த முழு இரவின் கடைசித் துளி!


நடுயாமம் சோம்பல் முறிக்கத்
துவங்குகிறது இந்த இரவின் நுனி!

விரல்கள் தேய்த்துத் திரைகள் சோர
கெஞ்சுகிறது பின்யாமம்!

நாளைப்பொழுதின் தொடக்கக்கோட்டில்
அலாரங்கள் வானைச் சுட
ஓடவைக்கிறது
இந்தப் பின்னிரவின் கடைசித்துளி!

– உஷாராணி

ஒப்பனை கலைத்துக் கண்ணயரத் தொடங்குகிறது
யுகங்களுக்கான அசதி
துஞ்சும் யாமத்தின் ரம்மிய இருளைக்
கொதிக்கக் கொதிக்கப் பருகும் மார்புகளில்
மூச்சிறைக்க விம்முகிறது
அசூயையில் கனலும் காமம்



பொசுக்கும் ஞாயித்துக்கிழமை வீதியில்
வீடுவீடாகக் கறி மணந்து திரியும் நம்பிக்கையுடைய நாய்
காலத்தைக் கவ்வியபடி மடிகளசைய ஓடிவருகிறது
ஃபுளூரசன்ஸ் ஒளிரும் பாதுகாப்பு ஜாக்கெட்டுடன்
கடப்பாரையால் அவரோகணம் இசைக்கும்
வடநாட்டுச் சிறுவன்
மெல்ல என் தூளியை ஆட்டி விடுகிறான்
அலசலாகப் புலரும் விடியலுக்கு அஞ்சி
செருகும் கண்களுடன்
இரவின் கடைசித்துளியால் அழுகிறது அல்குல்.
அடிச்சுவடின்றிக் கடந்து செல்கிறது
உருளும் பால்வெளியில் ஒரு மாமிசப் பட்சி..

– சுபத்ரா



பசிக்கும் போதெல்லாம் திணிக்கப்பட்ட
தனிமை தின்றே வளர்ந்தவள்...

உயிர் பெருக்க பெருங்கடலிலும்
தனித்துணரும் மீனாக்கி நீந்தச்
செய்கிறது இயல்பாக்கப்பட்ட
தனிமை

கற்பிதங்களிலிருந்து மீண்டெழக்
கிடைத்த ஒரு போதிமர நாளில்
மீத்திறன் மிருகத்தனிமை தாக்க சிறு பயணக்
கடவுள் செய்கிறாள்...

எஸ்கலேட்டர் நாவால் அவளை
உள்ளிழுக்கும் மெட்ரோரயில்
வேறோர் நிலையத்தில்
துப்பிவிட்டுச் செல்கிறது....
குடல் நீளப் பயணத்தில்
செரிக்க இயலா
அவள் தனிமையுடன் அவளையும்..

மதிப்புக்கூட்டப்பட்ட தனிமையுடன்
தள்ளாடுபவளை
ஒளிக் குழல்களால்
உறிஞ்சித்
தன் மீதமர்த்தி
மென்னூசல் ஆட்ட
சாய்வு நாற்காலியாகிறது
யுகாந்திரத்தனிமையின் மேல் ஒளிரும்
பிறைநிலவு

– சு.சுசித்ரா

• திருமேனி

# மீன் பொதிந்த இலைகள் – எஸ்.சுதந்திரவல்லி



பிரெஞ்சுப் புரட்சியின்போது ஒவ்வொரு புரட்சிக்காரனும் கவிஞனாக இருந்தான்; ஒவ்வொரு கவிஞனும் புரட்சியாளனாக இருந்தான் என்று சொல்லுவார்கள். நம் இந்திய நாடு ஒரு சுதந்திரப் போராட்டத்திற்கே தலைவருக்குத் துப்பாக்கிச் சூடைப் பரிசாகப் பெற்ற நாடு. வறுமையாய் இருந்து வளர்வதாய் முன்னேறித் தற்போது வேகமாக வளரும் நாடாகியிருக்கிறது. இந்த நாடு முழுமையாக உருப் பெற்று எண்பது ஆண்டுகள்தான் ஆகிறது. தற்போது அதுபோன்ற புரட்சிக்கெல்லாம் வேலை இல்லை. அங்கங்கே கொஞ்சம் நிலங்கள் மாநிலங்களாக; நிலங்களின் மனிதர்கள். அவர்களின் இயற்கை, அந்த இயற்கை வழங்கிவரும் வாழ்க்கை. அதனால் இன்றைய இந்திய வாழ்க்கை சிந்திப்பவர்களை எல்லாம் ஏகாந்திகளாக ஆக்கிவருகிறதோ எனச் சந்தேகம் எழுகிறது. வாசகர்கள் எழுத்தாளர்கள் கவிஞர்கள் என நிறைய பேர் அப்படித்தான் வாழ்வை மேற்கொண்டு வருகிறார்கள்.

ஓய்வு உரிமையைப் பங்குவைத்து நாம் மனிதரில் மனிதரை வெல்லும் வாழ்வியல் நோக்கு எதுவும் நம்மில் தடம் பதியாமல் ஆகிவிட்டிருக்கிறது. வெகுகாலமாய் அடிமையாய் இருந்து சுதந்திரம் சுயமரியாதை பெற்று இருபத்துநான்கு மணிநேரத்தை நிரப்பிக்



கொண்டிருந்தோம். இப்போது மணித்துளிகள் போதவில்லை.

எல்லாம் இருந்தும் எல்லாம் நிகழ்ந்தும் வாழ்க்கை எங்கே கசிகிறது என்பது புலப்படவில்லை. ஆண் பெண் குடும்பம் உறவு அன்பு வெற்றி தோல்வி கனவு மயக்கம் உண்மை மாயை எல்லாம் கலந்து அவியலாக மனிதக் கதை வட்டக்கோட்டில் நகர்கிறது. சில பேரிடம் கேள்வியாய்... சில பேரிடம் பதிலாய்... பொதுவாகப் புதிராய்... ஒரு சிலரிடம் கவிதையாய்... சுதந்திரவல்லி தனது கவிதைகள் மூலமாக இப்படியான ஒரு யோசனைத் தளத்தை விரித்துவைப்பதாகத் தோன்றுகிறது. மைய மற்றும் மையம் நோக்கியும் விரியும் கவிதைகளாக அவரே தன்னை அடையாளம் காண்கிறார். ஆதிரனின் அணிந்துரையில் குறிப்பிடும் எளிமையும் சுதந்திரவல்லியை முக்கியமான ஒரு ஆளுமையாகக் கணக்கிடவைக்கிறது.

நிலத்தின் செழிப்பில் உயிர்களின் குவிவளையத்தை மகிழ்வோடு ஔவை மாதிரி வரவேற்கிறார்.. பற்றற்றான் பற்றினைப் பற்றியும் சிந்திக்கிறார்.. பின் இருக்கையில் தோள் சாய்ந்த பயணத்திலும்கூட இவருக்குக் கவிதை கார்பன் காகிதங்களாய் விழுதசைக்கின்றன. காக்கைச் சிறகினிலே தீக்குள் விரலை வைத்தால் மாதிரி கவிதைக் கணங்களைக் காகித ஓவியம் போல (கொலாஜ்) மிக ஏகாந்தமாக மொழியாக்கிக் காட்சிகளைப் புதிர்களாய் வரைகிறார்.

அன்றாடமே ஒவ்வொரு நாளுமாகித் தானே ஒரு பச்சோந்தியானதாய்க் கூறுகிறார். மரஞ் செடிகளைச் சுளுக்கெடுக்கும் காற்றலைகள் பாடலாய் இசைத்தபோதும் தன்னில் எண்ணங் களாய்ப் பூத்துக்காயும் காலத்தைக் கசக்கிப்போட எத்தனிக்கும் இயல்பானது எங்ஙனம் (ப.184)? தனித்தனியே நிம்மதியாய் உறங்கும் கனவின் சுமை தாளாமலே வீதிவீதியாய் இறங்கி நகரும் பல்லக்கு வாழ்க்கை (ப.183). சரீர ஆதாரமே மீண்டும் சரீரமாய்க் கனக்கும் இறகற்ற பிரயாசையாய் (ப.182), புழுங்கி உயிர் வாழ்தலைக் கையாளுவதை நினைவோடு வாழ்க்கையாக்க நாம் படும் ஆசுவாசமாய் (ப.202), அதில் சுயசிந்தனையை ஆராதிக்கும் சுயநேசமாய் (ப.200), நாட்களின் வரவு செலவுக் கணக்கில் நாளையே புறக்கணிக்கச் செய்யும் மனமே மனமாய் (ப.195) இவரின் கவிதை உலகம் எளிமையில் புறப்பட்டுத் தத்துவார்த்தமாய் விரிகிறது.

எதார்த்தம் நீங்கிய புண்ணிய யாத்திரையில் கூடக் கடவுளின் பாரத்தில் கவலையோடு ஜன்னலின் கொலுசுக்காலில் தெய்வதரிசனம் காண்பதும் (ப.198), பராமரிப்பில் அன்பின் அழுத்தம் வகை மாறுவதை உணர்வதும் (ப.205), கால வெள்ளத்தின் ஓட்டத்தில் உயிர்வகை ஜென்மம் மாறுவதாய்ச் சிந்திப்பதும் (ப.207), இடுப்புச் சதையின் ஒற்றைவரியில் குவியும் உப்பு நீரைப் புனிதக் கடலாக்கிக் கால் நனைத்துத் திரும்பும் பார்வை மீது எள்ளல் கொள்வதும் இவரின் கதாவிலாசத்தைப் பேசவைக்கின்றன. நாவல் அளவுக்குக் கவிதைப் புத்தகம் இருப்பதாய் அங்கலாய்க்காமல் அட்டை முதல் அட்டை வரை படிக்கவேண்டிய கவிதைகளாக அமைந்தது அவரையும் கனப்படுத்தும்.■

• கவிஜி



# "உலகத்துல எவனாவது தன்னை அறிவுஜீவினு சொன்னாப் பளீர்னு அறையணும்"

## தோழர் பாமரன் அவர்களோடு ஒரு சந்திப்பு

**கோ**வையின் அடையாளங்களில் முக்கியமானவர். எழுத்திலும் பேச்சிலும் மானுட இயல்பைக் கொண்டிருப்பவர். எப்போதும் தன்னை விடுத்துத் தன் எழுத்தை மட்டுமே முன்னிறுத்துபவர். எழுத்து.... கோபம்.... மொழி... என்று எது பற்றிப் பேசினாலும்... தனக்கே உண்டான கொங்கு மொழியில் வெகு இயல்பாகப் பேசினார். ஒரு சாரல் மாலையில் அவரோடு உரையாடியதிலிருந்து....

**உங்கள் இணையதள முகப்பில் 'இதுவரையிலும் எந்த ஒரு விருதோ... பட்டங்களோ பெற்றிராத தமிழகத்தின் ஒரே எழுத்தாளன்...' என்று உங்களைப் பற்றிச் சொல்லி இருக்கிறீர்கள். பட்டங்களும் விருதும் வாங்கியே ஆக வேண்டும் என்ற கட்டாயம் ஒரு எழுத்தாளனுக்கு இருக்கிறதா..?**

*சமகாலத்து எழுத்தாளனுக்கு இருக்குனு வேணாச் சொல்லலாம். முதல்ல எழுத வர்றதுக்கு முன்னாலேயே விருத யோசிச்சிட்டுத்தான் எழுத வரானோன்னு சந்தேகமெல்லாம் உண்டு. எல்லாரும் விருது வாங்கத்தான் எழுதறாங்கனும் சொல்லிட முடியாது. புதுமைப்பித்தன் எழுதினார்... விருது வாங்கவா எழுதினார்? ஜி. நாகராஜன் எழுதினார்... விருது வாங்கவா*



எழுதினார்? மண்டோவை விருது வாங்கத்தான் எழுதினார்னு சொல்லிட முடியுமா?

உண்மையான எழுத்துக்கு விருது சிறைதான்.

அந்த விருதுக்கு எந்த எழுத்தாளனும் தயாரா இல்லை. நான் உட்பட. எல்லாமே லாபிதானே. விருது கொடுக்கறது வாங்கறதுங்கிறதே இப்போ நிறுவனம் ஆகிப் போய்டுச்சு. அது ஒரு வர்த்தகம் சம்பந்தப்பட்டதா ஆகிப் போய்டுச்சு.

**எழிற்கோ பாமரன் ஆனதைப் பகிர்ந்துகொள்ளுங்கள்....!**

அப்பா பகுத்தறிவுவாதி. அம்மா ஆன்மீகவாதி. அம்மா, சாமி கும்புடுன்னும் கட்டாயப்படுத்தினது இல்ல. அப்பா, சாமி கும்புடாதன்னும் கட்டாயப்படுத்தினது இல்ல. கோயிலுக்குக் கூட்டிட்டுப் போன அம்மாதான் பெரியார் புத்தகத்தை வாங்கிக் குடுத்துப் படின்னு சொன்னாங்க. அப்பா கூட்டங்களுக்குக் கூட்டிட்டுப் போவாரு. ஆக, ரெண்டு பேருமே என் மீது எதையுமே திணிக்காததால, நானே எனக்கான பாதையைத் தேர்ந்தெடுக்க முடிஞ்சது. ஆரம்பத்துல நானும் ஆன்மீகக் கூட்டங்களுக்கு எல்லாம் போயிருக்கேன். அப்பறம்... எனக்கு சாமி இருக்கற மாதிரி படல.

ஒருவேளை சாமி இருந்து, வந்தா... நான் ஒன் பை டூ டீ வாங்கிக் குடுக்கத் தயாராருக்கேன். அதுவரைக்கும் இங்கிருக்கற மக்கள பாக்கற வேலை இருக்கு. ஆன்மீகமோ பகுத்தறிவோ ரெண்டுமே ட்ரையா இருந்தா வீண்தான். சாமி சாமின்னு சாமிய கட்டிப் புடிச்சிட்டே கிடந்தாலும் வீண்தான். இங்க பல லட்சம் மக்கள் பட்டினில செத்துட்டு இருக்கான். பாதிக்கப்படறவன் பக்தனாக்கூட இருக்கலாம். இல்ல நாத்திகனாக்கூட இருக்கலாம். ஆக, இங்க டிமாண்ட் அது அல்ல. இங்கு மனிதம் காக்கப்படவேண்டும் என்பதுதான் முன்னிலைல இருக்கணும்.

இந்த மாதிரி சூழல்ல வளர்ந்ததுனால நிறைய புத்தகங்கள் படிக்கற வாய்ப்பு கிடைச்சது. பல பத்திரிக்கைகள் படிக்கும்போது பார்த்தாக் கண்றாவியாயிருக்கும். சரி அவுங்களே எழுதும்போது நாம ஏன்டா எழுதக்கூடாதுனு தோணுச்சு. அப்டி எழுத வந்ததுதான் (சிரிக்கிறார்).

எழுத்துங்கிறது எண்ணங்களைப் பகிர்ந்துக்கறதுதாங்க. இன்னைக்கு வரைக்கும் நான் எழுதிட்டு இருக்கேன்னா.. அது எல்லாமே இந்தச் சமூகத்துக்குப் பயன்படற எழுத்துன்னு எல்லாம் நான் நம்பத் தயாரா இல்ல. நான் இந்தச் சமூகத்துல இருக்கற பிரச்சனைகளைப் பகிர்ந்துக்கறேன். என்னை நான் ஒரு செய்தி கொண்டு சேர்ப்பவனாகத்தான் பார்க்கிறேன். எழுத்தாளனுக்கான தகுதி இருக்கறதா நினைக்கல. நான் என்னை எழுத்தாளனாக உணரவும் இல்லை. ஒரு எழுத்தாளனா இருக்கறதவிட ஒரு செயல்பாட்டாளனா இருக்கறதத்தான் நான் விரும்பறேன். எழுத்தாளனின் வேலை எழுதிட்டு வீட்டில் தூங்குவது அல்ல. அவன் செயல்பாட்டின் மூலமாகக் கிடைக்கும் அனுபவம் எழுத்தா மாறணும்ங்கிறதுதான் முக்கியம். சமூக அவலத்துக்கு எதிராகச் செயல்படணும். அந்தச் செயல்பாட்டின் ஊடாக எழுத்து

வரணும். அப்டி எழுத்து வராவிட்டாலும் தப்பில்ல. ஆனா, செயல்படணும்.

**உங்கள் முதல் புத்தகம்..?**

88ல "அன்புத் தோழிக்கு"ன்னு என் முதல் புத்தகம். அந்தப் புத்தக வெளியீட்டில்தான் எங்க திருமணம் நடந்துச்சு.

**நாளை காலை உங்களுக்கு எழுத மறந்து விடும் என்று தெரிய வருகிறது. இன்று முழுக்க என்ன செய்வீர்கள்...?**

நாளைக்குக் காலையில எழுத முடியாமப் போய்ட்டா ஒன்னும் இல்ல. தமிழ்ச் சமூகம் ஒன்னும் அழிஞ்சிடாது. அது அதுபாட்டுக்கு இருக்கும்.

**மார்க்ஸ் பெரியார் அம்பேத்கர் இன்றும் தேவைப்படுவது குறித்து?**

மார்க்சியம் என்பது ஒரு விஞ்ஞானம். அந்த விஞ்ஞானத்தை ஒவ்வொரு நாடும் கையிலெடுத்துட்டுப் போகுது... அப்டி நம்ம நாட்டுல எடுத்துப் போனவங்க அந்த மார்க்சியத்தைச் சரியாச் செயல்படுத்தத் தவறிய விளைவுதான்... பெரியாரும் அம்பேத்காரும். மார்க்சியத்தை நேசிக்கிறவர்கள் செய்யத் தவறிய கடமையை முன்னெடுத்துச் செல்லும் பணியைத்தான் பெரியாரும் அம்பேத்காரும் செஞ்சாங்க. மார்க்சியத்தின் ஒளிபடாத பக்கங்களை இவுங்க பார்த்தாங்கன்னு சொல்லலாம்.

மார்க்சியம் என்ன சாதியம் வேணும்னா சொல்லுச்சு...! அங்க வர்க்கம் இருந்துச்சு..... இங்க சாதி. நாளைக்குக் காலைல நாலரை மணிக்குச் செவ்விடியல் வந்துரும்ங்க தோழர். நாம நகரத் தலைமையைக் கைப்பற்றிருவோம்னு கற்பனையில் வாய பொளந்துக்கிட்டுத் தூங்கிட்டாங்க. ஆனா இங்கிருந்தது சாதிதான். அவன் மாபெரும் கோடீஸ்வரனா இருந்தாலும் ஒரு பன்னெண்டு வயசு பார்ப்பனச் சிறுவன் அவனை வாடான்னு கூப்பிடுவான். எண்பது வயது முதியவரா இருந்தாலும் அவர் சாதியால் ஒடுக்கப்பட்டவரா இருந்தா அவரை இந்தப் பையன் என்ன ராமசாமின்னு பேர் சொல்லித்தான் கூப்பிடுவான். இந்த முடிச்சை மார்க்சியவாதிகள் கவனிக்கத் தவறினாங்க.

இப்போ சமீபகாலமாக் கொஞ்சம் யோசிக்கறாங்கன்னு நினைக்கறேன். குறிப்பாக ஒடுக்கப்பட்ட தலித் மக்களுக்கான பார்வை இன்னும் கூர்மைப்படுத்தப் படல. ஆக மார்க்சியவாதிகளின் பணியின் போதாமை யினாலும், பொறுப்பாகச் செய்ய வேண்டியவர்கள் செய்யத் தவறியதாலும் பெரியாரும் அம்பேத்காரும் தேவைப்பட்டாங்க. மார்க்ஸ் நினைச்சதோ... பெரியார் நினைச்சதோ.. அம்பேத்கார் நினைச்சதோ... எதுவுமே வேறு வேறில்லை. எல்லாமே ஒன்னுதான். இங்க முரண்படுக்கறது மார்க்சிஸ்ட்டுகளும் பெரியாரிஸ்ட்டுகளும் அம்பேத்காரிஸ்ட்டுகளும் தானே தவிர மார்க்ஸ் பெரியார் அம்பேத்கார் அல்ல. எல்லாரும் அவங்கள காப்பி ரைட் வாங்கி வெச்சிட்டுப் பேசிட்டு இருக்காங்க. அவுங்களை யாரும் சொந்தம் கொண்டாட முடியாது. அவர்கள் இவ்வுலகத்தோட சொத்து.

**பாலுமகேந்திரா பற்றி.....**

மிக நெருங்கிய நண்பர்களில் ஒருவர். அத விட அவர்கிட்ட எனக்குப் புடிச்சது அவர் தீவிர புத்தக வாசிப்பாளர். எப்போ பாலு மகேந்திராவைப் பாக்கப் போனாலும் என்ன புக்





படிச்சன்னுதான் முதல்ல கேப்பாரு. என்கிட்டே மனம் விட்டுப் பேசக்கூடிய ஒரு தோழராத்தான் இருந்தாரு. அவர் கோவையில ஒரு மாதம் இருந்தபோதுகூட... என்னைப் போன்ற சில நண்பர்களுக்கு மட்டும்தான் தகவல் சொல்லிருந்தாரு. அவரைப் பாக்கப் போய்க் கதை பேசிட்டுருக்கறதும்... சுவர் எட்டிக் குதிச்சு வெளிய போய் சினிமா பாக்கறதுமா இருந்த நாட்கள் அது.

அவரைக் கடைசி முறை சந்திக்கிறபோது கூட, "அய்யா ஈழத்துல இருந்து "சயந்தன்"னு ஒரு பையன் "ஆறாவடு" னு ஒரு நாவல் எழுதி இருக்கான், ரொம்ப நல்லா இருக்கு"னு சொன்னேன். ஒரு நிமிஷம்னு பேடைத் திறந்து ஆறாவடுனு மெல்லமா எழுதறாரு. ஆக, அவர் படிப்புக்கு எல்லை வெச்சுக்கல. சாகும் நொடி வரைக்கும் அவர் படிக்கணும்னு நினைச்சாரு.

இன்னும் சொல்லணும்னா பாலுமகேந்திராவும் நானும் சேர்ந்து "மகேந்திர"னோட "சாசனம்" படம் சத்யம் தியேட்டர்ல பாக்கறோம். நான் கோயம்புத்தூர்ல கியூல நின்னு "மூன்றாம் பிறை" பார்த்த ஆளு. அவர் கூட அறிமுகம் ஆவேன்... மனம் விட்டுப் பேசக்கூடிய தோழமையாவேன்னு எல்லாம் நினைச்சதில்ல. இதெல்லாம் என் வாழ்க்கையில பெரும் பேறா நான் நினைக்கறேன்.

**சமூக ஊடகங்களின் அசுர வளர்ச்சியை வாழ்வு முன்னெடுக்கிறதா.... முடக்குகிறதா..?**

சமூக ஊடகங்கள்ல தீமையானதும் உண்டு. நன்மையானதும் உண்டு. அதில் நாம எதைத் தேர்ந்தெடுக்கறோம்ங்கறதுல இருக்கு. இப்போ அஞ்சு பேர் ஒன்னாச் சேர்ந்து உக்கார்ந்திருந்தாலும் அந்த அஞ்சு பேருக்குள்ள உரையாடலே இல்ல. ஆளுக்கொரு வீடியோ, சாட்டிங்னுட்டுக் கையில போனைப் புடிச்சிட்டே உக்காந்திருக்கானுங்க.

குரங்கு நிலையில் இருந்து குனிஞ்சுக் குனிஞ்சு மேல வந்தான்னா இனி வருங்காலத்துல குனிஞ்சுக் குனிஞ்சுக் கீழ போயிடுவான் போல. பழையபடி இவன் குரங்காகிடுவானோன்னு சந்தேகமெல்லாம் வருது. ஆக்கப்பூர்வமான விஷயத்தைக்கூட நீங்க இருபத்துநாலு மணி நேரமும் உக்காந்துப் பாத்துட்டு இருக்க முடியாது.

ஒவ்வொன்னுக்கும் ஒரு நேரம் இருக்கு. போன் இருக்குங்கிறதுக்காக நான் எல்லா நேரமும் பேசிட்டு இருக்க முடியாது. முக்கியமான விஷயம்னா எப்படிக் கூப்பிட்றதுன்னு ஒரு குறுக்குக் கேள்வியும் வருது. இந்தப் போனைக் கண்டுபிடிக்கறதுக்கு முன்னாடி எப்படி கூப்டீங்க. அவ்ளோ வேகமாப் போய் இப்போ என்ன செய்யப் போற.. எதையுமே அளவாப் பயன்படுத்தும்போது அது அருமையான பொருளா இருக்கும். எவன் எவன வெட்டினாலும் சரி.. நொக்குனாலும் சரி.. உடனே லிங்க் அனுப்பணும். மண்டைக்குள்ள தேவையில்லாத குப்பைகளைச் சேர்த்துட்டான். தலையைக் குப்பைத் தொட்டியா வெச்சிருக்கான். எல்லா நேரமும் சமூக வலைத்தளங்களில் உக்காந்துக்கொண்டிருப்பது பைத்தியக்காரத்தனம்.

**ஹிந்தி திணிப்பு பற்றி....!**

அது எந்த மொழியா இருந்தாலும் நான் திணிப்புக்கு எதிராத்தான் இருக்கறேன். இந்தியாவுல இவ்ளோ மொழி இருக்கும்போது ஹிந்திய மட்டும் படின்னு சொல்றது எல்லாருக்கும் எரிச்சலை உண்டு பண்ணிருக்கு. நானா விரும்பி ஒரு மொழியைப் படிக்கறது வேற. அப்பகூட ஹிந்தி படிச்சா வட இந்தியாவுல வேலை கிடைக்கும்னா அத நான் வெறுக்கறேன். பயன்பாட்டின் நிமித்தமாக ஒரு மொழியைப் படிச்சுக் கொச்சைப்படுத்த மாட்டேன். அது தமிழா இருந்தாலும் அப்படிதான்.

தமிழ்ல நல்ல கலாச்சாரங்கள் உண்டு. மொழி வளம் உண்டு. பண்பாடு உண்டு. இலக்கியம் உண்டு. அதற்காக நான் தமிழ் படிக்கறேன்னு சொன்னாப் பரவாயில்லை. ஆனா ப்ரமோஷனுக்காகத் தமிழ் படிக்கறேன்னு சொன்னா அத ஒத்துக்க மாட்டேன். எந்த மொழியையும் நாம சிறுமைப்படுத்தவில்லை. ஆனா இந்த மடையர்கள் என்ன சொல்றாங்க.. ஹிந்தி படிச்சா வேலை. அதும் வட இந்தியா போனாப் பேச ஹிந்தி வேண்டும். நான் எதுக்குயா வட இந்தியா போறேன்... ஹிந்தி படிச்சா வேலை கிடைக்கும்னா... வடக்குல இருந்து லட்சக்கணக்கான பேர் எதுக்கு ரயில் ஏறி இங்க வர்றான்...? ஆக இது அப்பட்டமான முட்டாள்தனம். மூணாவது மொழி ஒன்னு படிக்கணும்னா.. தென்னிந்திய மொழிகள்ல அதுவும் விருப்பம் இருந்தா படிக்கலாம். தாய்மொழிக் கல்வியே நமக்குத் தடுமாற்றமாருக்கு. அதுக்கு வசதி இல்லாம இருக்கு. மொழி தான். ஆனா அந்த மொழில நாம எத படிக்கறோம்னு இருக்கு. தமிழைச் செழுமைப்படுத்தணும். ஆனா அத விட முக்கியம் தொழில் நுட்பத்தைப் படிக்கணும். அதே சமயம்.... மொழி அரசியல் பண்ணி நான் ஆங்கிலம் படிக்க மாட்டேன்.. நீ ஹிந்தி படின்னு சொன்னா உதைப்பேன். ஹிந்தி திணிப்பு எதிர்ப்பு இந்தத் தலைமுறையிலும் பற்றிக் கொண்டிருக்கிறது என்பது மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கிறது.

**பெரியார் விரும்பிய தமிழ்....!**

ஆங்கிலம் உலக மொழி. அத படிச்சதுனால உலக அளவுல தகவல் தொழில் நுட்பத்துல இந்தியாவுல இருந்து தமிழர்கள்தான் அதிக அளவுல பரவி இருக்காங்க. அதுக்குக் காரணம் பெரியார். தமிழைக் காட்டுமிராண்டி மொழின்னு திட்டுனார்னு சொல்றோம். ஆனா அவர்தான் இன்னைக்குக் கம்பியூட்டர்ல இருக்க யூனிகோட் பாண்டுக்கான வழிகாட்டி.

'லை' போடறதுக்கும் 'னை' போடறதுக்கும் யானை கொம்பு மாதிரி போட்டுட்டு இருந்தோம். பெரியார் கொண்டு வந்த மொழிச்சீர்திருத்தம் தான் இன்னைக்கு நாம யூனிகோட் பாண்டா உபயோகப்படுத்தறோம். அந்தக் காலத்துல அலுமினியத்துல உருக்கிச் செய்யற எழுத்துரு, அத வெச்சு அச்சு கோர்க்கறதுதான் இருந்துச்சு. அது எவ்ளோ சிரமம்னு யோசிச்சவரு பெரியார். எழுத்துக்களை இன்னும் குறைக்கணும்னு சொன்னவர். ஆக, அவர் தமிழை ஒரு அறிவியல் மொழியாப் பார்த்தார். சிவனடியாருக்குப் பிள்ளைக்கறி போட்டதோ... முதலை உண்ட பாகனா வர்றதோ.... அந்தப் புராணக் கதைல வர்ற மொழியாப் பார்க்கல. நவீன அறிவியலைப் பேசுகிற ஒரு தமிழைத்தான் அவர் விரும்பினார்.

**மொழிபெயர்ப்புகளின் அவசியம் பற்றி உங்கள் பார்வை....?**

மொழிபெயர்ப்பு எப்போதும் அவசியம்தான். உலகம்ங்கற கதவுகள் திறக்க, ஜன்னல்கள் திறக்க





மொழிபெயர்ப்பு அவசியம். மாற்று மொழிகள்ல இருக்கற நல்ல படைப்புகள்.. அது சோவியத் இலக்கியமாக இருந்தாலும் சரி.. பிரெஞ்சு இலக்கியமாக இருந்தாலும் சரி.. அதிலிருக்கும் நல்லவைகளை நாம தெரிஞ்சுக்கணும். ஒரே நேரத்துல எல்லா மொழியையும் நாம படிச்சிட்டுருக்க முடியாது. "ஆல்பெர் காம்யூ"வின் "அந்நியன்" படிக்கறோம்னா, அதுக்குக் காரணம் மொழிபெயர்ப்புதான். "பிடல் கேஸ்ட்ரோ"வை மொழிபெயர்த்ததாலதான்.. "கியூபா" பத்தித் தெரிஞ்சுக்க முடிஞ்சது. ஒரு கட்டம் வரைக்கும் "ஜெயகாந்த"னை விட பெரிய எழுத்தாளன் இல்லன்னு நினைச்சேன். ஈழ எழுத்த படிக்கும்போது அவருக்கு அவ்ளோ பத்தாதுன்னுத் தெரிய வந்துச்சு. அதுக்கு அப்புறம் "சதத் ஹசன் மண்டோ"வ படிக்கும்போது இவர் ஐம்பதுகளிலேயே இப்டி இருந்திருக்காரா..ன்னு ஆச்சரியம். இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின் போது அவ்ளோ அற்புதமான எழுத்து... மதம் குறித்து அது இதுன்னு.....

இதெல்லாம் மொழிபெயர்ப்பு மூலமாத்தான் நமக்குத் தெரிஞ்சுது. உலகத்தின் எந்த மொழியில் இருக்கற நல்ல படைப்புகளும் மொழிபெயர்ப்பு மூலமாத்தான் இன்னொரு இடத்துக்குப் போக முடியும். படிச்சவன்.. போய்க் கொண்டு வந்து சேர்த்தாத்தான் பூமி பயன்பெறும்.

இது தமிழ்நாடு.. இது பாகிஸ்தான்.. இது ஆசியா... இது ஆப்பிரிக்கான்னு பவுண்டரி நாமதான போட்ருக்கோம். உலகத்துல இருக்க எல்லா விஷயங்களையும் படிக்கறதுக்கு நமக்கு ஆயுள் பத்தாது. உலகத்துல எவனாவது தன்னை அறிவுஜீவினு சொன்னாப் பளீர்னு அறையணும். அவ்ளோ விஷயம் இருக்கு. இப்போ என்னாலயும் உங்களாலயும் செருப்பு தைக்க முடியுமா...? நீ ஒரு விஷயத்துல கிங்னா இன்னொருத்தன் இன்னொரு விஷயத்துல கிங்கா இருப்பான். மனுசன்ல சூப்பர் கம்பியூட்டர்னு ஒன்னு இருக்கா என்ன...? எல்லாமே கத்துக்க வேண்டியவைதான்.

**உங்கள் சிரிப்புக்குப் பின் மிகப் பெரிய கோபம் இருப்பதை உணர்கிறோம். உணர்வு சரிதானா...?**

*(சிரிக்கிறார்)* சரிதான்.

இது ஒரு எழுத்து வகை. வஞ்சப் புகழ்ச்சி அணி. ஒரு நுட்பமான விஷயத்தை சீரியசாச் சொல்லியும் புரிய வைக்கலாம். ஒரு எள்ளலோடு அவலச் சுவை கலந்தும் புரிய வைக்கலாம். அப்டி பார்த்தீங்கன்னா... "புதுமைப்பித்தன்" நிறைய பண்ணியிருக்கார். அவரோட "பொன்னகரம்" படிச்சீங்கன்னாத் தெரியும். சட்டையர்தான். எள்ளல்தான். ஆனால் துயரம் கலந்த எள்ளலா இருக்கும். "எம் ஜி சுரேஷ்" எழுத்துக்களைப் படிச்சீங்கன்னா நக்கல் இருக்கும். ஆனா உள்ள ஒரு துயரம் ஒளிஞ்சிட்டிருக்கும். எள்ளல் வகைமையை ஐம்பதுகளில் நாற்பதுகளிலேயே பண்ணிப் பார்த்துட்டாங்க. "குத்தூசி குருசாமி" எள்ளலுக்குப் பக்கத்துலகூட நாம போக முடியாது. உலகக் குசும்பரான பெரியாரே சிலாகிச்ச குசும்பர் "குத்தூசி குருசாமி". குத்தூசிக் கட்டுரைகள் இல்லன்னா "விடுதலை" பத்திரிக்கை படிச்ச மாதிரியே இல்லன்னு சொல்லி இருக்கார். ஆக, நமக்கு முன்னோடிகள்.. ஜாம்பவான்கள் இருக்காங்க. சீரியசோ எள்ளலோ எதுல சொன்னாலும் அது சமூகத்துக்குப் போய்ச்

சேரணும். நோக்கம் இதுதான். மாற்றம் வேண்டும். அந்த மாற்றத்துக்காக எந்த வடிவத்தையும் பயன்படுத்தலாம். நான் தேர்ந்தெடுத்தது இந்த வகைமை. அவளோதான்.

**எழுதுவதற்கான நேரத்தை எப்படி கணக்கிடுகிறீர்கள்.... ஒரு நாளைக்கு எத்தனை நேரம் எழுதுவீர்கள்?**

அப்படி எல்லாம் ஒரு குப்பையும் கிடையாது. ஒரு திட்டமும் இல்லை. ஒரு கணக்கிடலும் இல்ல. இந்த அஃபிசியல் எழுத்தாளர்களைப் பார்த்துப் பார்த்து இந்தக் கேள்வி வந்துருச்சுன்னு நினைக்கறேன். கண்ணதாசன் மாதிரி எழுதலான்னு நினைச்சு ரெண்டு பீர் பாட்டிலோடு எழுத உக்காந்த காலமெல்லாம் இருந்துச்சு. அப்புறம் பார்த்தா... வாந்திதான் வந்துச்சு. எழுத்து வரல. அதே நேரத்துல ஒன் பை டூ டீ குடிச்சிட்டு ஒரு டீக்கடையிலேயே ஒரு புத்தகத்தை எழுதி முடிச்ச காலமும் இருக்கு. திட்டமெல்லாம் இட்டா எழுத்து வராது.

“செவ்வாய்தோறும்...”ன்னு இணையத்துல ஒரு தொடர் ஆரம்பிச்சு அந்த முதல் வாரமே புதன்கிழமைதான் வந்துச்சு.. என்ன பண்றது...? (சிரித்துக்கொள்கிறார்). வாழாவெட்டி மாதிரி நான் ஒரு எழுதாவெட்டி. நாம என்ன காபி தயாரிக்கும் மெஷினா...? கொட்டைய போட்டா டொக்குடொக்குனு காபி கொட்டறதுக்கு?

உங்கள ஒரு விஷயம் பாதித்து அன்னைக்கே உக்காந்து எழுதிறீங்கல்ல அதுதான் எழுத்து. மகிழ்ச்சியா இருக்கலாம். துக்கமா இருக்கலாம். கோபமா இருக்கலாம். ஒரு பாதிப்பின்பாற்பட்டு எழுதறீங்கல்ல... அதுதான் எழுத்து. அனுபவத்தின் பாற்பட்டு வருவதுதான் இன்னும் வலுவானதா இருக்கும்.

**எப்போதாவது எழுத்து சலித்ததுண்டா...?**

படிக்கறவனுக்குத்தான் சலிக்கும். எழுதறவனுக்கு எப்படி சலிக்கும். நான் சலிக்கற அளவுக்கு இன்னும் எழுதல.

**தோழர் மணிவண்ணன் அவர்களுக்கும் உங்களுக்குமான நட்பு பற்றிக் கூறுங்களேன்..!**

அவர் மீது அதீதமான காதல்னு சொல்லிக்கலாம். அவர் மகனின் மொழியில் சொல்ல வேண்டுமானால் "அங்கிள் நீங்க எங்க அப்பாவோட கள்ளக்காதலன்". 2007 வாக்குலதான் தோழர்கூட பழக்கம் ஏற்படுது. அதுக்கப்புறம் அவருடைய கடைசி நாட்கள் வரைக்கும்.. அது ஒரு அபரிதமான அன்பு. எதிர்பார்ப்பில்லாத ஒரு உறவு இருக்கில்லையா.. அது எங்களுக்குள்ள இருந்துச்சு. சொல்லப் போனா முழுக்கத் தன்னை அவர் எங்ககிட்ட ஒப்படைச்சார்னு சொல்லலாம். அவர்கிட்ட என்ன சுதந்திரம் வேணும்னாலும் எடுத்துக்கலாம். அவருக்கு ஒருபோதும் ரெண்டு முகங்கள் இல்லை. அதே மாதிரி அவர் ஒரு புத்தக வெறி புடிச்ச மனுஷன். தோழர் மணிவண்ணனை ஒரு பரிமாணமா அடக்கவே முடியாது. இயற்கை வேளாண்மையா.. சுற்றுச்சூழல் பற்றியா.. ஈழம் பற்றியா.. உலக அரசியல் பற்றியா.. எது பற்றினாலும் படிச்சிருப்பார்.

அவர் ஒரு இயக்குநரா.. ஆம் இயக்குநர். நடிகரா.. ஆம் நடிகர். ஒரு மனித உரிமைச் செயற்பாட்டாளரா.. ஆம்.. அதுவும்தான். ஈழ விடுதலைக்கு உழைச்சவரானா.. ஆமா உழைச்சவர். அவருடைய மாடி அறை முழுக்கப் புத்தகங்களால் நிறைஞ்சு வழியும்.

(இடையில் அவரின் நினைவுகளோடு தடுமாறுகிறார்).





இப்போ உங்ககிட்ட பழகினார்னா உங்களோட மட்டும் நிறுத்த மாட்டார். உங்க நண்பரோட நண்பர்கிட்ட பழகிட்டு இருப்பார். அவர் மாதிரி ஒரு ஆளுமையை நாம பாக்கவே முடியாது. கலைஞர், எம்.ஜி.ஆர், ஜெயலலிதா என மூன்று முதலமைச்சர்களுக்கும் அவரைத் தெரியும். ஆனா அவரோட நடவடிக்கையில ஒரு இடத்துலகூட தன்முனைப்பு இருக்காது. அவர் இருக்கறவரைக்கும் அவர் கவிதை எழுதுவார்னு எனக்குத் தெரியாது. அப்டி எல்லாவகையான ஆளுமையும் அவர்கிட்ட இருந்தது. ஒரு புத்தகக் கண்காட்சிக்குப் போனார்னா அவர் வாங்க நினைக்கற புத்தகம் ஒன்னு வாங்கமாட்டார். பத்து வாங்குவார். மீதி ஒன்பதை நண்பர்களுக்குக் கொடுத்திடுவார். அவர் ஏன் ஒரு ஆச்சரியமான மனிதர்னா 2010வாக்குல உடல்நிலை சரியில்லாம ஒருமாதமா இங்க கோவையில மருத்துவமனையில அட்மிட் ஆகியிருக்கார்.

ஆனா பத்து நாட்களுக்குள்ள வந்த ஒரு புத்தகத்தைச் சொல்லி.. போய் வாங்கிட்டு வாங்கனு சொல்றார். நான் அதிர்ந்து போயிட்டேன். அதே மாதிரி ஈழத்தின் படுகொலைகள் அவரை ரொம்பப் பாதிச்சது.

நாங்க எழும்பூர்ல தங்கி இருப்போம். மேல மூணாவது மாடி. மூணாவது மாடிக்கு நடக்கமுடியாத காலைத் தூக்கித்தூக்கி வெச்சு நடந்து வந்திருவாரு. அவருடன் எந்த நொடியும் நாம போலியா இருக்கவேண்டிய அவசியமே இல்லை. நாம் நாமாக அவரிடம் இருக்கலாம். நிறைய சொல்லிட்டே போகலாம்..

**சாதி ஒழியாம நான் தமிழன்னு சொல்லிக்கறதுல என்ன பெருமை இருக்க முடியும்....? விளக்குங்களேன்.**

தமிழன்னு சொல்லும்போது அவன் சாதி மறுப்பை உள்ளடக்கிய ஒரு தமிழனா இருந்தாத்தான் அது ஏற்றுக்கொள்ளத்தக்கதா இருக்கும். இனரீதியாக ஒன்றுபடணும்னா அதன் முன்நிபந்தனையே சாதி ஒழிப்புதான். சாதியை மறந்து தமிழர்களாக ஒன்றிணைவோம் அல்ல. சாதியை மறுத்துத் தமிழர்களாக ஒன்றிணை வோம் என்பதுதான் விஷயம். ஆனா அதே நேரம் ஒடுக்கப்பட்டவன் சாதிரீதியா ஒன்று திரள்வதை நாம பிழையாப் பாக்க முடியாது. அது தற்காப்பின் நிமித்தம் ஒன்றிணைவது. மற்றவங்க இணை வதற்கும் ஒடுக்கப்பட்டவர்கள் இணைவதற்கும் உள்ள வேறுபாட்டைப் பிரிச்சுப் பார்க்கத் தெரியணும். இங்க நகரம் வேற சேரி வேறயா இருக்கு. சாதிய ஒழிக்காம நீங்க எதுவாகவும் ஆக முடியாது.

நாம உலகத்தின் குழந்தைகள். ■

• அபர்ணா
மத்திய பல்கலைக்கழகம், திருவாரூர்.

# கந்தகக் காவியங்கள்

ஆயிரக்கணக்கான புத்தகங்கள் நிரம்பிய திடல் ஒன்றில் பல புத்தகங்களைக் கடந்து சென்றுகொண்டிருக்கையில் கண்ணில் பட்டவுடன் வாங்கத் தூண்டிய புத்தகம் "கந்தகக் காவியங்கள்''. காவியங்கள் என்றிருந்ததால் புரட்சிகரமான கவிதைகளாகத்தான் இருக்கும் என்றெண்ணிய எனக்குக் கட்டுரை என்று கண்டவுடன் சற்று ஏமாற்றமாகத்தான் இருந்தது. கதைகளையும் கவிதைகளையும் மட்டுமே விரும்பிப் படிப்பவள் என்பதால் கட்டுரைப் புத்தகம் வேண்டாம் என்று நினைக்கையில் "த.ஸ்டாலின் குணசேகரன்" என்ற பெயர் என் முடிவை மறுபரிசீலனை செய்ய வைத்தது. சரி உள்ளே என்னதான் இருக்கிறது என்று புரட்டிப் பார்க்கையில் "புதிய வெளிச்சம்", "சுக்கா மிளகா சுதந்திரம்?", "தியாகச் சுடர் பகத்சிங்", "கந்தகக் காவியங்கள்'', "செங்காவிச் சிங்கம்'' என்று அடுக்கடுக்காய்க் கண்ட தலைப்புகள் அடுத்த நொடியே அந்தப் புத்தகத்தை வாங்க வைத்தது. பையினுள் சர்க்கரைக்கட்டியை வைத்திருக்கும் குழந்தை நொடிக்கு நொடி பையைத் திறந்து எப்போது அதை உண்போம் என்று ஆர்வமாய்க் காத்திருப்பது போல்தான் நானும் எப்போது இந்தப் புத்தகத்தை வாசிப்போம் என்று நொடிக்கு நொடி சிந்தித்துக்கொண்டிருந்தேன். இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு பேருந்தில் வந்து அமர்ந்தவுடன் பல நாள் பட்டினி கிடந்தவன் சோற்றுப் பொட்டலத்தை ஆவலாகப் பிரிப்பது போல் ஒரு சொல்லில் அடங்கா ஆர்வத்தோடு அந்தப் புத்தகத்தை விரித்தேன்.

முதல் கட்டுரையான புதிய வெளிச்சத்தில் "எனக்கு இந்த உலகிலேயே மிகவும் பிடித்தமான சொல் 'செயல்' என்பது!" என்ற கியூபா நாட்டுக் கவிஞரின் வைர வரிகளைச் சுட்டிக்காட்டும் அவர், தமிழின் புதிய வெளிச்சமாம் பாரதி போல் இந்தச் சமுதாயத்தைப் புரட்டிவிடக்கூடிய நெம்புகோல் கவிதைகளை இளைஞர்கள் இயற்ற வேண்டும் என்கிறார்.

வரலாற்றுப் புத்தகங்கள் மூலம் சுதந்திரப் போராட்டத்தைக் கற்றறிந்த எனக்கு அது ஒரு வரலாறாகத் தெரிந்தது. முதன்முதலாகக் கட்டுரைகள் வாயிலாகப் படிக்கின்றபோது சுதந்திரம் வரலாறு அல்ல அது நமக்குக் கிடைத்த



வரம் என்பது புலப்படுகிறது. இன்று ஏகபோகங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் நமக்குக் கட்டாயம் இந்தச் சுதந்திர வேள்வியில் தன்னை இந்தியத் தாய்க்காய்த் தானே முன்வந்து அர்ப்பணித்து மாண்டுபோன மகத்தான மனிதர்களைப் பற்றிச் சிறிதளவேனும் தெரிந்திருக்க வேண்டும். பிளாசிப் போரில் இருந்து பம்பாய் கப்பற்படை எழுச்சி வரை இடையில் உள்ள சுதந்திரப் போராட்ட வரலாறு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. ஜாலியன் வாலாபாக்கில் நூற்றுக்கணக்கான மக்களை மண்புழுவெனச் சுட்டு வீசிய கொடூரனை "ஜெனரல் டயர்" என்று மரியாதையாகக் கற்பிக்கத் தெரிந்த இந்திய வரலாற்றிற்கு இருபத்தோரு ஆண்டுகள் தவம் இருந்து அந்தக் கொடியவனைச் சுட்டு வீழ்த்தி, மரண தண்டனை விதிக்கப்பட்டபோது "நான் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள மரண தண்டனையைக் குறித்துக் கிஞ்சிற்றும் கவலை கொள்ளவில்லை. என்னைப் போன்ற இளைஞர்களுக்கு என் சாவு உரமூட்டும். சந்தோசத்துடன் சாகிறேன்!'' என்று வீர முழக்கமிட்ட உத்தம்சிங்கைக் கற்பிக்கத் தெரியவில்லை.

இந்த நூலின் தலைப்பாய் அமைந்த கந்தகக் காவியங்கள் கந்தகமாய் வாழ்ந்து மறைந்த பகத்சிங் என்னும் ஒரு காவியத்தைப் பற்றிய கட்டுரை. சட்டசபையில் வெடிகுண்டுகளை வீசியபோது ஒரு துண்டுப் பிரசுரத்தையும் அங்கே வீசிவிட்டு வந்தான். "கொலை செய்வதுதான் எங்களது நோக்கமாகியிருந்தால் சட்டசபையில் வைஸ்ராய் இருக்கையில் இப்போது அமர்ந்திருக்கும் சைமன் கமிஷன் தலைவர் ஜான் சைமன் மீது நிச்சயமாய் வெடிகுண்டை வீசியிருக்க முடியும். இந்திய நாட்டு இளைஞர்கள் மத்தியில் ஒரு எழுச்சியை உண்டாக்கவே இந்தக் காரியத்தைச் செய்தோம். நாங்கள் வீசியுள்ள வெடிகுண்டு சக்தி வாய்ந்ததாக அல்லாமல் இதற்கென்றே செய்யப்பட்டதாகும்," என்றிருந்தது. பகத்சிங் ஒரு ஆவேசம் கொண்ட புரட்சிகர இளைஞன் மட்டுமல்ல.. ஆழ்ந்த சிந்தனையாளன் என்பதை இதை வைத்து உணர முடிகிறது.

"சிகாகோவில் முழங்கிய சிங்கம்" தலைப்பைக் கொண்டே இது யாரைப் பற்றிய கட்டுரை என்பதை அறியலாம். "மக்களுடைய வறுமையையும், துன்பங்களையும் அகற்ற முதலில் முயற்சி செய்யாமல், அவர்களிடம் மதத்தைப் போதிப்பது பயனற்றது'' என்று சொன்ன விவேகானந்தரைப் பற்றிய கட்டுரை இது. சிகாகோ சென்றபோது விழாவின் துவக்க நாளில் அவர் தனது நண்பருக்கு எழுதிய கடிதத்தில் "பொது மேடையில் பேசியறியாத நான் இந்த மகத்தான கூட்டத்தில் பேச வேண்டும்! எனக்கு இதயம் படபடவென்று அடித்துக்கொண்டது, நாக்கு வறண்டு போய்விட்டது, பேசத் துணிவற்றிருந்தேன்'', எனக் குறிப்பிடுகிறார். விழாவின் இறுதி தினங்களில் விவேகானந்தரின் உரை நிகழ்ச்சி நிரலில் இறுதியாக இடம் பெற்றிருந்தது. காரணம் பார்வையாளர்கள் அனைவரும் அவரது உரையைக் கேட்க ஆர்வமாய் இருந்ததால் கூட்டத்தை இறுதி வரை தக்க வைக்க விவேகானந்தர் இறுதியாகப் பேசுவது அவசியமாகிப் போனது. முதல் நாளில் பேசுவதற்கு அச்சப்பட்டவர் இறுதியில் அரங்கே காத்திருக்கும் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்.

எழுதப்பட்டவை மட்டுமே வரலாறு அல்ல. உண்மையான பல வரலாறுகள் மறைக்கப்பட்டும் மண்ணுள் புதைக்கப்பட்டும் இருக்கின்றன. அப்படிச் சுதந்திரப் போராட்டத்தில் நமக்குத் தெரிந்தவற்றைப் பற்றிய தெரியாத செய்திகளைக் கூறுவதாகவும் ஒரு வரலாற்றுப் பெட்டகமாகவும் இந்நூல் திகழ்கிறது. இருநூறு பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகம் வரிக்கு வரி தகவல்களையும் உணர்வுகளையும் தன்னுள் தாங்கியதாக அமைந்துள்ளது. இதனை இரண்டே பக்கங்களில் சுருக்கிச் சொல்லுதல் கடினம். கந்தகக் காவியங்கள் அனைவரும் கற்றிட வேண்டிய அற்புதம். ■

• கவி : போகன் சங்கர்
சித்திரம் : அன்பழகன்



தொலைநோக்கிக்குள்
தெரியும்
பறவை
ஏனித்தனை
மௌனமாக இருக்கிறது...
......
அவன் எடுத்த
எல்லாப் புகைப்படங்களிலும்
அவன்
முன் வரிசையில்
அமர்ந்திருப்பதைத்
தற்செயலாகத்தான்
அவர்கள் கண்டுபிடித்தார்கள்.

• வீரசோழன் க.சோ.திருமாவளவன்

# காற்றின் அலைவரிசையில் ஒலிக்கும் அந்தக் குரல்..



சினிமாத்துறைக்கு உள்ளே வரும்போதே எல்லோருக்கும் ஒரு ஆசை இருக்கும். ஆனால் சினிமாத்துறைக்கு ஒரு ஆசை இருந்தது.. அந்த ஆசையின் வழியாக உள்ளே நுழைந்தவர் அவர்.

திரைப்படத்துறைக்குள் இயக்குநராகிப் படம் எடுப்பதற்காக நுழைகிறார். அதைப்போலவே தி கிரேட் பாலுமகேந்திராவிடம் உதவி இயக்குநராக இணைந்து தனது திரைப்பட வாழ்வைத் துவக்குகிறார்.

ஆனால் விதி யாரை விட்டது? இயக்குநராக அவதாரம் எடுக்க நினைத்தவர், பாடல் எழுதச் செல்கிறேன் எனத் தன் ஆசான் பாலுமகேந்திராவிடம் சொல்ல இவரை அனுப்ப மனமில்லாமல் அனுப்புகிறார். ஆசான் வாழ்த்துகளோடு சீமான் அவர்களால் பாடலாசிரியராக அறிமுகம் ஆகிறார்.

இரண்டாயிரம் ஆண்டின் இறுதியில் உள்ளே நுழைகிறார் காஞ்சிபுரத்துக் கானக்குயில். யாருமே நினைத்திருக்க மாட்டார்கள் அவர் அடையப்போகும் உயரத்தை. ஆனால் திரும்பும் இடமெங்கும், பயணமாகும் திசையெங்கும், காணும் தொலைக்காட்சியிலும், கேட்கும் பண்பலையிலும், நீக்கமற நிறைந்திருக்கிறது அவரின் பாடல்கள்.

தமிழுக்கே பெருமை சேர்த்த அவர்.. கவிஞர் நா.முத்துக்குமார்.

இவரின் வரிகள், பலருக்கு வாழ்க்கையைக் கொடுத்தன. பலருக்கு வழியைக் கொடுத்தன. பலரைக் கண்ணீர் உகுக்கவைத்தன. பலருக்கு நம்பிக்கை கொடுத்தன. நிறைய காதலர்களுக்குக் காதலைக் கொடுத்தன. துவளும் இதயங்களுக்கு நம்பிக்கை விதைகள் தெளித்தன.

காஞ்சிபுரத்தில் கன்னிகாபுரம் கிராமத்தில் பள்ளி ஆசிரியருக்கு மகனாகப் பிறந்தவர். தனக்குக் கதை சொல்லியே வளர்த்த அன்னையைத் தனது மூன்றே வயதில் இழந்தவர். தந்தையே தாயாக இருந்து இவரை வார்த்தெடுத்தார். சிறு பிராயத்தில் இருந்தே புத்தக வாசிப்பைத் தூண்டியவர் தந்தை நாகராஜன்.

அப்பா புத்தகம் வாங்குவதற்காகவே கடனாளியாகியிருக்கிறார். வீடெங்கும் புத்தகங்களே அணிவகுத்துள்ளன. கோகுலம் முதற்கொண்டு கணையாழி என எல்லா இதழ்களையும் வீடு நோக்கிப் படையெடுக்கச் செய்திருக்கிறார் தந்தை. புத்தக வாசிப்பே நா.முத்துக்குமாருக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் தாயின் நினைவிலிருந்து விடுபட வழி கொடுத்திருக்கிறது. கடைசிவரை அவருக்குப் புத்தக வாசனையே துணையானது. இவரின் 'தூர்' கவிதையை எழுத்தாளர் சுஜாதா 'கணையாழி' நிகழ்வில் வாசித்ததால் கவிஞர்கள் வட்டத்தில் இவர் முகம் நன்கு பரிச்சயமானது.

முத்துக்குமாரின் கவிதைகள் அனைத்துமே வறுமைக்குடிலில் இருக்கும் இளைஞனின் குரலாக ஒலிப்பவை. தனக்கு அல்லது தன்னைப்போலவே உள்ள பாவப்பட்ட இளைஞனுக்கு நேர்ந்த அல்லது இனிமேல் நேரக்கூடிய சம்பவங்களின் ஏக்கங்களையே அக்கவிதைகள் பேசுகின்றன.

சின்னச்சின்ன மகிழ்வான தருணங்கள், வார்த்தைகளாக வடிவம் பெற்றிருக்கின்றன. சிறுசிறு வருத்தங்களும் கவிதையின் பிம்பமாக.. கவிதைகள் முழுமை பெற்றிருக்கின்றன. பெரிய பெரிய உயரங்களைத் தொட்டு விட்ட போதிலும் பெரிய கவிஞன் எனப் பெயரெடுத்த போதிலும் சின்னச்சின்ன பூக்களிலும், ஐஸ் பெட்டியிலும் வசமிழக்கும் தன்மையோடே தன்னை இழந்தவராகவே இருந்தவர்.

இதுவரை தமிழ் சினிமாக்கள் அம்மாவை மட்டுமே அம்மாவுக்காகவே தாலாட்டுப் பாடல்கள் தீட்டிய இடத்தில் அப்பாவுக்காகப் பாடல் வரிகளைத் தீட்டியவர் நா.முத்துக்குமார் மட்டுமே. தனது பேனாத்துளிகளை இப்படி விரவுகிறார்.

"ஆரிரோ ஆராரிரோ இது தந்தையின் தாலாட்டு"

நம்முடைய கண்ணீர்த் துளியில், நம்முடைய கனத்த மௌனத்தில் என்றுமே நம்முடன் இசை இருக்கிறது என்று கூறிய பாடலாசிரியர் அவர். இசைக்கு உயிர் கொடுத்த வள்ளல். இசையை வாழச் செய்த கீதாஞ்சலி. நம் மனம் உணர்ந்து நினைத்திருக்கும் ஏதோ ஒரு உணர்வை வார்த்தைகளாய்க் கேட்கும் கணம் அந்த வார்த்தைகளோடு நம் மனம் ஒன்றிவிடும். அப்படியான - வார்த்தை மலர்களை ஒன்று சேர்த்து பூ மாலையாகச் செய்துவிடும் வித்தைகளின் சொர்க்கபுரி மன்னர் நா.முத்துக்குமார்.

அங்காடித்தெரு எனும் படத்தில் இப்படி மீட்டுகிறார் தனது பேனாவை...

**'கோயிலின் உள்ளே நுழைந்திடும்போது**
**வருகிற வாசனை நீயல்லவா**
**உன்னுடன் வாழும் ஒவ்வொரு நொடியும்**
**சர்க்கரை தடவிய நொடியல்லவா**
**கல்லும் மண்ணும் ஓ வீடுகளில்லை**
**ஓ அன்பின் வீடே ஓ அழிவது இல்லை'**

வயது வித்தியாசம் எதுவுமேயன்றி வகைமை பேதமின்றிச் சிறியவர், பெரியவர் என எல்லாத் தரப்பினருக்குமான சொற்களை எப்போதுமான நிகழ்காலமாகப் பாக்கெட்டுகளில் இருக்கும்படிக் கொடுத்துச் சென்றுள்ளார் முத்துக்குமார்.

எல்லோரும் மழையைக் கொண்டாடிக் கொண்டிருந்த காலத்தில் வெயிலை அழகு என்று சொன்ன கவிஞன். தென் மாவட்டப் புழுதிகளில் வெயில் கரைந்த நிலத்தையும் தன் கவிதைகளால் பேசியவர். தனது எழுதுகோலில் வெயிலைக் கொண்டாடுகிறார்....

**'மழை மட்டுமா அழகு! சுடும் வெயில் கூட ஒரு அழகு!**
**மலர் மட்டுமா அழகு! விழும் இலை கூட ஒரு அழகு!'**

இப்படி வெயிலைக் கொண்டாடிய கவிஞன். வெயிலோடு ஆடும் மரங்களையும் விடவில்லை மகத்தான கவிஞன்.

காதலை.. காதலர்களை.. காதலுக்கான தருணங்களை.. உருக்கி உருக்கி.. உருகி உருகி எழுதியவர்களில் முக்கியமானவர்களில் முக்கியமானவர் நா.முத்துக்குமார் மட்டுமே. நீதானே என் பொன் வசந்தத்தில் இசைஞானியுடன் கைகோர்த்து இவர் எழுதிய ஒவ்வொரு வரியும் வரப்பிரசாதம்தான். காதல் பற்றி உருகி எழுதிய உற்சாகமான வரிகள்...

**'நேரில் பார்த்துப் பேசும் காதல்**
**ஊரில் உண்டு ஏராளம்**
**நெஞ்சினுள்ளில் பேசும் காதல்**
**நின்று வாழும் எந்நாளும்**
**தள்ளித் தள்ளிப் போனாலும் உன்னை**
**எண்ணி வாழுமோர் ஏழை நெஞ்சத்தைப் பாரடி'**



வாழ்க்கையின் எல்லா வகை உணர்வு களோடும், இன்பமொடு துன்பமென, துன்பமொடு இன்பமென நிகழ் வாழ்வைக் கடத்தத் தேவையான எழுத்துக்களும் பாடல்களும் மூன்று காலங்களுக்கும் இருக்கின்றன.

நம்மின் சோகங்களை, துன்பங்களை, வலிகளை, ஆறா ரணங்களை இவர் வரிகள் ஆற்றும்...

**'மழை வாசம் வருகின்ற நேரமெல்லாம்,**
**உன் வியர்வை தரும் வாசம் வருமல்லவா!**
**உன் நினைவில் நான் உறங்கும் நேரம் அன்பே!**
**மரணங்கள் வந்தாலும் வரம் அல்லவா!'**

பாரதி, பாரதிதாசன் தொடங்கிப் பின்னர் கலாப்ரியா, விக்ரமாதித்தன், பசுவய்யா, கல்யாண்ஜி, ஆத்மாநாம், நகுலன் ஆகியோர் தனக்குப் பிடித்த கவி ஆளுமைகள் என்கிறார் நா.முத்துக்குமார்.

பாடலாசிரியர்களில் உங்கள் மனதுக்குக் கவர்ந்தவர் யார் எனக் கேட்டதும், அவர் எனக்கு மிக நெருக்கமானவராக, ஒரு பல்கலைக்கழகமாக, தினந்தோறும் பூஜிக்கத் தகுந்தவராக நினைப்பது கவியரசு கண்ணதாசன் அவர்களைத்தான் எனச் சட்டென வார்த்தைகளால் புகழ் மாலை தூவுகிறார்.

ஆற்றாமையை, துயரத்தை, பிரிவை, ஏகாந்தத்தை, இன்பத்தை, கூடலை, காதலை, கொண்டாட்டத்தைப் பாடுகிற பாக்கள் அவரது பேனாவிலிருந்து வடிந்தபடியிருக்கின்றன.

அதுவும் தங்கமீன்கள் படத்தில் அவர் எழுதிய வரிகள் எல்லாம் காலத்தைச் சுமந்து நிற்கின்றன. இந்த வரிகளுக்காக அவர் தேசீய விருதும் பெற்றார்.

**'உந்தன் கைகள் பிடித்துப் போகும் வழி,**
**அது போதவில்லை இன்னும் வேண்டுமடி..**
**இந்த மண்ணில் இது போல் யாரும் இங்கே**
**என்றும் வாழவில்லை என்று தோன்றுதடி!'**

தமிழை மிக அழகாகக் கையாண்டு இலக்கியத் தரத்துடனும், நயத்துடனும் பாடல்களை எழுதுவதில் நா.முத்துக்குமார் வல்லவர். இதுவரை 1,500க்கும் மேற்பட்ட பாடல்களை அவர் எழுதியுள்ளார்.

2012ஆம் ஆண்டில் மட்டும் அதிகப்படியான எண்ணிக்கையில் 103 திரையிசைப் பாடல்களை எழுதிச் சாதனை படைத்தவர். எத்தனையோ மிகப்பெரிய பாடலாசிரியர்கள் கூட ஒரே ஆண்டில் இதுபோன்ற அதிகப்படியான பாடல்களை எழுதியது இல்லை.

தங்க மீன்கள் படத்தில் இடம்பெற்றுள்ள 'ஆனந்த யாழை மீட்டுகிறாள்' என்ற பாடலுக்கும், சைவம் படத்தில் இடம்பெற்றுள்ள 'அழகே.. அழகே எல்லாம் அழகே..' என்ற பாடலுக்காகவும் இருமுறை தேசிய விருதை நா.முத்துக்குமார் பெற்றுள்ளார்.

சிறந்த பாடலாசிரியருக்கான தமிழக அரசின் விருதைப் பெற்றுள்ள அவர், சைமா விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார். கடந்த 2015ஆம் ஆண்டு புதிய தலைமுறை சார்பில் இலக்கியத்திற்கான சாதனைத் தமிழன் விருது நா.முத்துகுமாருக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

பேசும் படம் காலம் தொடங்கி கி.பி. 2000 வரையிலான தமிழ்த் திரைப்படப் பாடல்கள் பற்றிய ஆய்வை முனைவர் பட்டத்துக்காகச் செய்தவர். மதுரகவி பாஸ்கரதாஸ் முதல் பழநிபாரதி வரையிலான பாடலாசிரியர்களின் பாடல்களை அலசியவர். மூத்த படைப்பாளி களின் பாடல்கள் எப்படிப் பயன்பட்டன, சமூகத்தின் மீது அவற்றின் தாக்கம், பாடல்களுக்கு இருந்த முக்கியத்துவம், சமூகப் பங்களிப்பு, சமூகத்திற்காக அவை எவ்வளவு தூரம் பயன்பட்டது பண்படுத்தியது என அலசி முனைவர் பட்டத்தைப் பெற்றவர். முனைவர் பட்டம் பெற்ற முதல் பாடலாசிரியர் இவராகத்தான் இருக்க முடியும்.

'Silk City' என்ற தலைப்பில், ஏழெட்டுத் தலைமுறைகளின் வாழ்க்கை பற்றிய நாவலை எழுதி வெளியிட நினைத்தவர். அவரின் கனவுகளில் இது முக்கியமான ஒன்று. ஆனால் காலம் அவரை விட்டுவைக்கவில்லை.

'வீட்டில் கூடுமானவரை குழந்தைகளிடம் தமிழிலேயே பேசுங்கள். தமிழ் மொழியையும் கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் அதன் பெருமையையும் அவர்களுக்கு உணர்த்துங்கள். நீங்கள்தான் அடுத்த நூற்றாண்டுத் தமிழை உலகெங்கும் கொண்டு செல்லப்போகிறீர்கள்' என்று ஓங்கி ஒலித்த கணீர்க்குரல் நா.முத்துக்குமார்.

அந்த கணீர்க்குரல் காற்றின் அலை வரிசைகளில் மிதந்துகொண்டிருக்கிறது.... ■

மொழிபெயர்ப்புச் சிறுகதை

# பாரத மாதா

• எம்.முகுந்தன் • தமிழில்: கே.வி.ஷைலஜா
ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

பாலகோபாலன் அலுவலக வேலை காரணமாகத்தான் பம்பாய்க்கு வந்தார். ராமசந்திரன் ரயில் நிலையத்தில் வந்து காத்திருந்தார். அவர்கள் இரண்டுபேரும் பால்யகால நண்பர்கள். ஆறாம் வகுப்பிலிருந்து கல்லூரி படிப்பு முடியும்வரை ஒன்றாய்ப் படித்தவர்கள். படிப்பு முடிந்தபிறகு அவர்கள் இருவரும் வேறு வேறு வழிகளில் வாழ்வின் பாடுகள் தேடிப் பயணப்பட்டார்கள். பாலகோபாலனுக்கு உள்ளூரிலேயே வேலை கிடைத்தது. ராமசந்திரன் வேலைக்காகப் பல நாட்கள் பம்பாயில் அலைந்து திரிந்தார். இப்போது இந்த இரண்டு நண்பர்களும் வேலை கிடைத்துத் திருமணம் செய்துகொண்டு பிள்ளைகளோடு இருக்கிறார்கள். ராமசந்திரனுக்கு ஜூஹூ சாலையில் சாங்க் சொசைட்டியில் ஒரு அடுக்குமாடி குடியிருப்புமிருக்கிறது.

ரயில் வந்து நின்று பாலகோபாலன் இறங்கியவுடன் ராமசந்திரன் அவசர அவசரமாக அவரிடம் வந்தார். அவர்கள் பரஸ்பரம் முகம் பார்த்து உள்ளார்ந்த மகிழ்ச்சியுடன் சிரித்துக்கொண்டார்கள்.

"நாம பாத்து..."




"ஆறு வருஷம்..."

பாதி பாதி வார்த்தைகளோடு பேசிக் கொண்டார்கள்.

டாக்ஸியில் ஏறி ஜூஹூ சாலையிலிருக்கும் குடியிருப்பிற்கு வந்தார்கள். இரண்டு படுக்கை அறையுடன் கூடிய மிக அழகான குடியிருப்பு அது. அவர் தன் மனைவி வாஸந்தியைப் பாலகோபாலனுக்கு அறிமுகப்படுத்தினார். அவர் தன் பெட்டியைத் திறந்து ராமசந்திரனின் மகனுக்காக வாங்கி வந்திருந்த விளையாட்டுச் சாமான்களையும் சாக்லேட்டுகளையும் வெளியே எடுத்துக் கொடுத்தார்.

குளித்துச் சாப்பிட்டு முடித்து ஆளுக்கொரு சிகரெட்டையும் புகைத்தபடி விஸ்ராந்தையாய் உட்கார்ந்து பல விஷயங்களையும் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆறு வருடங்களாய்ப் பார்க்காமல் இருந்தவர்கள்தானே, அவர்களுக்கு என்னென்னவோ பேசவும் கேட்டுத் தெரிந்து கொள்ளவுமிருந்தது! குழந்தைத்தனமான பல பழைய நியாபகங்களையும் புதுப்பித்து எடுக்க வேண்டியிருந்தது.

"பாலன் உனக்குப் பாரதமாதாவை நியாபகமிருக்கா?"

பள்ளிப்பருவம் கடந்து கல்லூரி நினைவுகள் ஊறி வரும்போது ராமசந்திரன் கேட்டான்.

"சந்திரமதியையா...!"

"அப்ப நீ அவள மறக்கல இல்ல?"

"எப்படி மறக்க..?"

திடுமெனப் பாலகோபாலனின் மனதில் சந்திரமதியின் முகம் தெளிவாய் நிழலாடியது. கல்லூரியில் அவரை விட இரண்டு வருடம் குறைந்த வகுப்பில் படித்தவள். ஒரு சாதாரணமான பெண். நீண்ட அழகான தலைமுடி மட்டுமே அவளுடைய வசீகரம். இரண்டாம் முறை திரும்பிப் பார்க்க வைக்கும் எதுவுமே அவளிடமில்லை.

கல்லூரி ஆண்டுவிழாவுக்குத் தவிர்க்கவே முடியாத அயிட்டமாக இருந்தது 'டாப்ளோ'. படகு துடுப்பு போடும் படகுக்காரனையும், சண்டாளபிக்ஷுகியையும், மேனகா கொண்டு வந்து காண்பித்த குழந்தையை உதாசீனப்படுத்தும் விஸ்வாமித்திரனையும், உறியிலிருந்து வெண்ணெய் திருடித் தின்னும் கிருஷ்ணரையும் என எல்லா வருடமும் ஒரு டாப்ளோ அரங்கேறியது.


பாரதத்தின் மிகப் பெரிய வண்ணப்படம். நீல நதிகளும், பனி மலைகளும் உள்ளடங்கிய பாரத தேசத்தின் வரைபடம். படத்தின் முன்னால் கூந்தலை அவிழ்த்து விட்டபடி சிலையாய் நிற்கும் பாரதமாதா.

மேடையில் கண்கள் கூசும் ஒளி வெள்ளத்தில் அலை அலையான கூந்தலைப் புரளவிட்டு, கண்களில் கங்கா நதியின் ஆழமும் நீலிமையும் ஒளிவிட இதழ்களில் சாந்தமான புன்னகை படர நிற்கும் பாரதமாதாவைப் பார்த்துப் பாலகோபாலனுக்குப் புல்லரித்தது. சாட்சாத் பாரதமாதாவையே தரிசித்தது போல அவன் பரவசப்பட்டான்.

பாலகோபாலன் கொஞ்சம் பழமைவாதி. பாரதம், பாரதமாதா என்றெல்லாம் கேட்டால் பொங்கிப் பிரவாகமாய்க் கசிந்துவிடுவான்.

அன்றிலிருந்து அவன் சந்திரமதியைப் பாரதமாதாவாகவே ஆராதிக்கத் தொடங்கிவிட்டான். அது காதலில்லை. தேசபக்தி மட்டுமே.

அந்தச் சந்திரமதியைக் கல்லூரிப் படிப்பிற்குப் பிறகு அவர் பார்த்ததேயில்லை.



“நான் கொஞ்ச நாளைக்கு முன்ன அவளப் பாத்தேன்.”

“எங்க பாத்த?” சாய்ந்து உட்கார்ந்திருந்தவன் நிமிர்ந்தபடி கேட்டான்.

“இங்க, பம்பாயில.”

இதைக் கேட்ட பாலகோபாலனுக்கு இதயத் துடிப்பு அதிகரித்தது.

“அவளுக்குக் கல்யாணம் ஆயிடிச்சு. புருஷன் ஏதோ ஃபேக்டரியில வேலை பாக்கறாராம். குழந்தைகளும் இருக்காங்க”.

இரவு உணவிற்கு முன்பாக அவர்கள் ஒன்றாய்க் கொஞ்சம் விஸ்கி குடித்தார்கள். வழக்கமாக ஒரு பெக்கில் நிறுத்தும் பழக்கமுள்ள பாலகோபாலன் அன்று நான்கைந்து பெக் அடித்தார். தொடர்ந்து சிகரெட் புகைத்தபடியே இருந்தார்.

“ராமா” இருளில் மின்னும் தெரு விளக்கைப் பார்த்தபடி ஒளிரும் கண்களை இடுக்கிக்கொண்டு குரல் தாழ்த்திச் சொன்னார்.

“நான் சந்திரமதியைப் பாக்கணும்”

“விடியட்டும் பாலா”

பாலகோபாலன் மேலும் ஒரு பெக் ஊற்றிக் குடித்தார். பேச முயற்சி செய்யும்போது நாக்கு குழற ஆரம்பித்தது.

மறுநாள் காலையில் பாலகோபாலனும் ராமசந்திரனும் வெளியே புறப்பட்டார்கள். மதியத்திற்கு முன்பாகவே பாலன் தன் வேலைகளையெல்லாம் முடித்தார். பிறகு இருவரும் சந்திரமதியைப் பார்க்கப் புறப்பட்டார்கள்.

“வீட்டிலேயே போய்ப் பாக்கலாம்.”

“அப்படி வேண்டாம்,” ராமசந்திரன் தயங்கினார்: “அவ பெரிய பொண்ண கூட்டிட்டுப் போக ஸ்கூலுக்கு வருவா. அங்கப் போய் நின்னு பாத்தாப் போதாதா?”

“போதும்”.

அப்படியாக அவர்கள் ஸ்கூலுக்குப் பக்கத்தில் போய் டாக்ஸியிலிருந்து இறங்கி ஒரு கம்பத்தினடியில் காத்திருந்தார்கள்.

பாலகோபாலன் ஒன்றும் பேசவில்லை. அவருடைய மனசு முழுக்க பாரதமாதாவின் உருவமேயிருந்தது. அவிழ்த்து விடப்பட்ட சுருள் சுருளாய் வளர்ந்து நிற்கும் கூந்தல், கங்கையும் யமுனையும் பிரவகிக்கும் கண்கள். பனி மலைகளில் விழும் வெயிலின் பொன்னொளி போல ஜொலிக்கும் மந்தகாச புன்னகை..

“அதோ உன்னோட பாரதமாதா வரா பாரு”

ராமசந்திரனின் குரல் கேட்டு அவர் நினைவுகளிலிருந்து தன்னை மீட்டெடுத்தார்.

கரை புரண்டு ஓடும் நினைவுகளின் கரையோரமாக மெலிந்து வற்றிப்போன உடலுடன் ஒரு பெண் நடந்து வருகிறாள். இடுப்பில் ஒரு குழந்தை. விரலைப் பிடித்தபடி இன்னொன்று. அதன் பின்னால் இன்னொரு குழந்தை நடந்து வந்துகொண்டிருந்தது. அவள் மெல்ல சாலையைக் கடந்து பள்ளிக்கூட வாசலை அடைந்தாள்.

துவைத்துத் துவைத்து நிறம் மங்கிப்போன புடவையை உடுத்தியிருந்தாள். ஒரு கறுப்புக் கயிற்றில் தாலி கோர்த்திருப்பாள் போலிருக்கிறது. கண்களின் கீழே குழி விழுந்து கருமை படர்ந்திருந்தது. துருத்திக் கொண்டு நிற்கும் கன்ன எலும்புகள். உடன் இடுப்பிலும் கை விரல்களிலும் இறுக்கிப் பிடித்த அவளைப் போலவே காய்ந்து மெலிந்த குழந்தைகள்..

“பாரதமாதாவப் பாத்தியா?” ராமசந்திரன் மெல்லக் கேட்டான்.

“நாம போலாம்...”

பாலகோபாலன் ஒன்றும் பேசாமல் ராமசந்திரனுடன் குனிந்த தலையை உயர்த்தி யாரையும் எதையும் பார்க்காமல் நடந்தான். ■

கவியும் சித்திரமும் :
• அழ.ரஜினிகாந்தன்

# ஊர்மிளை

இது
அன்னமிட்ட தமிழுக்கு
என்னாலான–
உபகாரம்
முன்னம் செய்த
பிழைக்கெல்லாம்
முத்தாய்ப்பாய் ஒரு –
பரிகாரம்

உழுது சோறிட்டவனையா
இந்த உலகம்
வாழ்த்துகிறது
அழுது பால்குடித்த
எல்லாப் பிள்ளையுமா
அன்னையைப்
போற்றுகிறது...?

வசியம் கூட்டி
எழுதுவதென்பது
கைவரப்பெற்றவர்களுக்கு –
ருசி
எனக்கோ
காலங்காலமாக அது
கனன்றுகொண்டிருக்கும் –
பசி

அபவாதம் பேசி
அன்றாடம்
மறுதலித்தாலும்
அவனருளின்றி
எழுத்தில் வராது
எல்லோருக்கும் –
இரசவாதம்

இது
அவன் – அருளியது
அவன்
அசந்த நேரத்தில்
அவனறியாது நான் –
உருவியது

பாடுதறியில்
ஊடுபாவாய்ச் சேர்த்து
நெய்ய முனைந்தேன்
ஒரு –
நூலை
பன்னாள் முயன்று
பையப்பைய
நெய்து முடித்ததுதான்
இந்த –
சேலை

இனி
நெய்த சேலைக்கு –
நிறமேற்ற வேண்டும்
செய்த வேலைக்குச்
சீர் செய்ய
வேண்டும்

காலம் என்னைக்
கட்டிவைத்திருக்கிறது
இந்த –
புவனத்தோடு
அதனால்தான்
கனிரசமும் அதிரசமும்
சேர்த்துக்
கவிதை தருகிறேன்
ஒரு –
கவனத்தோடு.....!

தூதுவளை
தும்பை
அதிமதுரம்
ஆடாதொடையெல்லாம்
பூத்துக்குலுங்கிய
ஆவணியெனத்
தொடங்கியிருக்கிறேன்
சற்றுப் பொறுங்கள்
எத்தனைக்காலம்தான்
எழுதுவீர்கள்
அரளி மல்லி
சம்பங்கி பூத்ததென்று
அழகானவற்றையே...
இவையெல்லாம்
பூத்தபோது
அவையெல்லாம் என்ன
மலடிகளாகவா
மண்ணில்
கிடந்தன...

வால்மீகியும் கம்பனும்
வரிந்துகட்டி
எழுதியதையே
நானும் எழுதினால்
நன்றாகவா இருக்கும்..
?
அவர்களெல்லாம்
மூலக்
கதைமாந்தர்களுக்கே
முக்கியத்துவம் –
தந்தார்கள்
நானோ
ஒரு கோலமயிலுக்குத்தான்
கோப்பையைக் –
கொடுத்திருக்கிறேன்

இப்படியாகத்தான்
சிற்சில இடங்களில்
என் கவிதையும்
மரபினின்றி விலகி –

இடரும்
இருப்பினும்
நிலவின் குளுமையை
ஏந்திவரும்
இரவின் ஒளியாய்
தழையத்தழைய
உங்கள் மீது இது -
படரும்

எழுதத் தொடங்கிவிட்டேன்
எப்படியும் இதை-
முடித்தாக வேண்டும்
எப்பாடு பட்டேனும்
இதை நீங்கள் -
படித்தாக வேண்டும்....!

• • •

தூதுவளை
தும்பை
அதிமதுரம்
ஆடாதொடையெல்லாம்
பூத்துக் குலுங்கிய-
ஆவணி
புதுக்கருக்கு
கலையாமல்
பூமித்தாய் அணிந்திருந்தாள்
தாது வருடமெனும் -
தாவணி....!

மந்தமாருதமொன்றை
ஈன்ற
மணிவயிற்றில்தான்
இந்தச்
சண்டமாருதமும்
சனித்ததா எனச்
சரித்திரத்தால்
சந்தேகத்தோடு-
பார்க்கப்பட்டவள்
சரக்கொன்றை
பூத்த
சனகனின் மாளிகையிலா
இந்த
விஷக் கொன்றையும்
விளைந்தது என
வியப்பு மேலிட-
வினவப்பட்டவள்

அவளது
நாமம் கேட்டால்
அமைதி கொலுவிருக்கும்
அயோத்தியே-
ஆவேசப்பட்டது
கைகேயியையும்
மந்தரையையும்
விட
இவளே கல்நெஞ்சக்காரியென
வசவுகளால் அந்த
வனிதையை -
சுட்டது

அந்த அளவுக்கு
அவளது நாமம்
பட்டிதொட்டியெல்லாம்
படாதபாடு -
பட்டது
பாவம் விதி
யாரைத்தான் -
விட்டது

உண்மையில்
அவளொரு -
உத்தமி
உணராது
இந்த உலகம்
ஒருமையில் திட்டிய -
பத்தினி

போர்முனை நோக்கிப்
போகிறவன் கூட
இந்த
ஊர்மிளையைக் கண்டால்
உணர்விழந்து -
நிற்பான்
தன்
வேல் முனையில்
பூ தொடுத்து
வீதியெங்கும்
அவளுக்காக -
விற்பான்

அவள்
ஆறு பூத்த
கடல்
அறிவு பூத்த
நிழல்
சேறு பூத்த
மலர்
செழுமை பூத்த
மடல்

ஐம்புலன் ஒடுக்கி
அவா
அறுத்தவள்
பைம்பொழில் முகிழ்த்த
பரிதி
நிறத்தவள்

மந்தரை
மாதவனை வீழ்த்த
மனம் வைத்தாள்
அதைக்
கைகேயியின்
கவனத்தில்
தினம் வைத்தாள்
காரியம்
கைகூட
பொறி வைத்தாள்
அவன்
காடாள வேண்டுமென
ஓர்
கந்தகத்
திரி வைத்தாள்
பரமன் இராமனைக்
காட்டுக்கு
ஓட்டு
உன் பாலகன்
பரதனுக்கு
மணிமுடியைச்
சூட்டு
வசமாகத் தசரதனை
இந்த வம்பினிலே
மாட்டு
வசிட்டனுக்குப் போடு
அவன்

வாயிலொரு
பூட்டு
வாழ்வாங்கு வாழ்வதற்கு
வழிவகையைத்
தீட்டு
பெண்ணே பிரதானம்
என்பதை
இந்தப் பிரபஞ்சத்துக்குக்
காட்டு
என
மந்தரை ஊதிய
மகுடிக்கு
மதிமயங்கிக் கிடந்தது
கைகேயி
என்னும் –
கருநாகம்
அதையேதான்
கொண்டு சென்று
தசரதனிடம்
கக்கியது அவளின் –
கருநாவும்....!
இறுதியில்
சூழ்ச்சிதான்
அங்கே –
வென்றது
மாட்சிமை கொண்ட
மன்னனையும்
மனசாட்சியே இல்லாமல்
கொன்றது
கறைபூசிக்கொண்ட
அவர்களின்
கருப்பு முகங்களும்
காலமெல்லாம்
சரித்திரத்தில்
அழியாமல் –
நின்றது

• • •

வனவாசம் ஏகுமுன்
அன்னையைக் காண
அரண்மனை போந்தான் –
இராமன்
அவளோ
என்னையும் கொண்டு போ
என

இருவிழி சிவக்க –
கதறினாள்
இழுத்துப் பிடித்த
தாதியரை எல்லாம்
பலங்கொண்ட மட்டும் –
உதறினாள்
தன்
பால்சுரந்த மார்புகள்
பதைத்திடப் பதைத்திடப்
பலமுறை
அடித்துக்கொண்டு –
அலறினாள்....

அவளை
ஆற்றுப்படுத்திட
தான் கொண்ட
அனைத்து முயற்சியிலும்
தோற்றுப் போய்
நின்றான் –
இராமன்
வாயிலும் வயிற்றிலுமாய்
அடித்துக்கொண்டு
கதறும்
தன் தாய்க்கு
யாதொரு தேறுதலையும்
சொல்லத் தோணாது
நின்றான் அந்த –
சேய்

முடியிழந்து போனாலும்
பரவாயில்லை
அது
வேந்தன் இட்ட
கட்டளையால்
விளைந்தது எனலாம்
என் பிள்ளையின்
தலையில்
இப்படி யொரு
இடி விழுந்து போனதே
என் செய்வேன்
ஊழ்வினையால்
இந்த
உபத்திரவம் நேர்ந்ததெனில்
பரவாயில்லை

அய்யகோ
ஒரு
பாழ்வினையாலன்றோ
இந்தப் பாதகம்
நேர்ந்திருக்கிறது
எனப்
பிடியிழந்து வீழ்ந்த
குருடியாய்க்
கதறினாள் –
பெற்றவள்......!

விடைபெறும் தருணம்
நெருங்கியது
விழுந்து புரண்டு
கதறும் தாயைக்
காணக்காண
கோசலைராமனின்
உள்ளம் –
நொறுங்கியது

அன்னை அழுகிறாள்
அது
அளப்பரிய பாசத்தின்
அன்பின் –
வெளிப்பாடு
என்னையும் அழைத்துச்செல்
என்கிறாள்
ஆ..
என்னே விதியின் –
ஏற்பாடு
தாயாகவே இருப்பினும்
தந்தை இருக்கப்
படி தாண்டக் கூடாது
இதுதானே
பத்தினி தர்மத்தின் –
கோட்பாடு...?

கருவில் சுமந்தவள்
கண்ணீர் வடிப்பதைக்
கண்டு
கலங்கி நின்றான்
அந்தப் –
பெருவில் முறித்தவன்...!

– தொடரும் ■

• தா. ஜோ. ஜூலியஸ்

# ஹெர்ட்டா முல்லர்



உலகம் உள்ள அளவிலும் கவிஞன் என்று ஒருவன் இருக்கத்தான் செய்வான். கவிஞனின் உள்ளம் ஒரு சிறிய உலகம்.. அது கடலைப் போன்றும் எரிமலையைப் போன்றும் கொந்தளிப்பும் பரவசமும் கொண்டது. கவிதைப் படைப்புகள் வெளியீடு செய்யப்படுவது குறைவாக இருக்கும் சூழலில் பாராட்டவோ அதனை மிதிக்கவோ இடமில்லை. கொஞ்ச நாட்களுக்குப்பின் கவிஞனே அவற்றை ஏன் எழுதினோம் எதற்கு எழுதினோம் எனத் தன்னைத் தானே கேட்டுக்கொண்டு சில சமயங்களில் கிழித்துப்போட்டு விடவும் வாய்ப்புண்டு. உலகின் சிறந்த கவிஞர்கள் வாழ்க்கை எப்படி இருந்தது.. அவர்கள் எப்படி உலகுக்கு வெளிப்படுத்தப்பட்டனர் என்பது இந்தத் தொடர் வாயிலாக நமக்கு அறிய வருகிறது.

ஜெர்மானிய மொழியின் புதின எழுத்தாளர், கவிஞர், கட்டுரையாளர் எனப் பன்முகங் கொண்ட பெண்மணியாகிய ஹெர்ட்டா முல்லருக்கு 2009ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

ருமேனியாவில் உள்ள டிமிஸ் பகுதியில், நிச்சிடார்ஃப் எனப்படும் ஊரில் பனத் ஸ்வாபிய கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்த இவருக்குத் தாய்மொழி ஜெர்மன் மொழி ஆகும். அவரது தாத்தா மிகப் பெரிய செல்வந்தராகவும் விவசாயியாகவும் இருந்தார். ஆனால் அவரது சொத்துக்கள் முழுவதும் கம்யூனிஸ்டு ஆட்சியினால் கைப்பற்றப்பட்டது. அவரது தந்தை கம்யூனிஸ்டு ருமேனியாவில் ஒரு ட்ரக் ஓட்டுனராகப் பணிபுரிந்து வந்தார். அவரது அன்னையார் தமது பதினேழாவது வயதிலேயே சோவியத் யூனியனில் பலவந்தப்படுத்தித் தொழில் செய்வோர் பாசறைக்கு ஒரு இலட்சம் பேரில் ஒருவராக - நாடு கடத்தப்பட்டுச் சென்றவர். 1950ஆம் ஆண்டில்தான் அவர் விடுவிக்கப் பட்டார்.

1990முதலாக இவர் உலக அளவில் பிரபலம் அடைந்ததுடன், இவரது படைப்புகள் உலகின் இருபதுக்கும் மேற்பட்ட, பெரும்பான்மையோர் பேசும் மொழிகளில் மொழியாக்கம் செய்யப் பட்டுள்ளன. முல்லரின் தாய்மொழி ஜெர்மன் மொழியாக இருப்பினும், அவர் ருமேனிய மொழியினை இலக்கணப் பள்ளியில் பயின்று வந்தார். நிக்கொலாஸ் லீனாவ் உயர்நிலைப் பள்ளியில் படிப்பை முடித்த பின்னர் திமிசோர வடக்குப் பல்கலைக்கழகத்தில் ஜெர்மன் பாடங்களையும், ருமேனிய இலக்கியத்தையும் பயின்றார். 1976ஆம் ஆண்டில் அவர் ஒரு பொறியியல் தொழிற்சாலையில் மொழி பெயர்ப்பாளராகப் பணியில் சேர்ந்தார். ஆயினும் அங்குள்ள கம்யூனிஸ்ட் ஆட்சியின் ரகசியப் படையாகிய “செக்யூரிடாட்டே” எனப்படும் பாதுகாப்புப் படையினருடன் ஒத்துழைக்கவில்லை என்பதற்காகப் பணியில் இருந்து விடுவிக்கப் பட்டார். பணியில் இருந்து வெளியேற்றப்பட்ட நிலையில் அவர் தொடக்கக் கல்வி ஆசிரியை யாகப் பணிபுரிந்து, தனியார்க்கு ஜெர்மன் மொழியினைப் பயிற்றுவித்தார்.

இவர் தனது படைப்புகளில், ருமேனியாவில் உள்ள சிறுபான்மை ஜெர்மன் மொழி பேசும் மக்களின் கண்ணோட்டத்தில் தீவிரவாதம், கொடுங்கோன்மை, பயங்கரம் ஆகிய தீமைகளை, ருமேனிய சோஷலிஸக் குடியரசுப் பின்னணியில் தாமே அனுபவித்த கொடுமைகளின் பயனாகத் தத்ரூபமாகச் சித்தரித்து உள்ளார்.

முல்லரின் முதல் படைப்பாகிய நாதிர்ஸ் ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டு ருமேனியாவில் 1982ஆம் ஆண்டில் அந்த நாட்டு அரசின் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டது. அந்தப் புத்தகம் ‘பனாத்’ பகுதியில் ஜெர்மன் கலாச்சாரம் பற்றி ஒரு குழந்தையின் கண்ணோட்டத்தில் எழுதப்பட்ட ஒன்று ஆகும். பனாத் ஸ்வாபிய சமூகத்தினர் அந்தப் படைப்பினைப் பற்றி விமர்சிக்கையில் முல்லர் தனது சொந்தக் கூட்டினை அசிங்கப்படுத்தி உள்ளார் எனச் சாடினர். பேச்சு சுதந்திரம் பற்றி ஜெர்மன் மொழியில் பரிந்து எழுதும் பனாத்தின் ஒரு இயக்கக் குழுவின் உறுப்பினராக முல்லர் இருந்து வந்தார். இதனால்



நிக்கோலாய் சீசெக்யூ ஆட்சியில் அவரது படைப்புகள், குறிப்பாக “பச்சை ப்ளம்ஸ்களின் நிலம்” எனும் புதினம், இதனைச் சுற்றியே எழுதப்பட்டன. அவரது வழக்கிற்குப் பொறுப்பாக இருந்த ராது டீனு எனும் ரகசியப் படைக் காவலர் அவர் எந்தத் துன்புறுத்தலுக்கும் ஆளாகவில்லை என மறுக்கிறார். எனினும் இதற்கு மறுப்பு தெரிவித்து முல்லரே 2009ஆம் ஆண்டில் ‘டை ஸீத்’ எனும் வாராந்திரப் பத்திரிக்கையில் என்ன என்ன துன்பங்கள் தான் அனுபவித்தேன் எனப் பட்டியலிட்டுள்ளார்.

வடக்கு ஜெர்மனிக்குத் தாம் செல்ல விரும்பியதை அரசு மறுத்துவிட்ட நிலையில் 1985ஆம் ஆண்டில் அவரது அப்போதைய கணவரும் புதின எழுத்தாளரும் ஆகிய ரிச்சர்டு வாக்னருடன் செல்ல அவர் அனுமதிக்கப்பட்டார். அவர்கள் வடக்கு பெர்லினில் குடியேறினர். இதனைத் தொடர்ந்த ஆண்டுகளில் அவர் ஜெர்மனியின் பல்கலைக்கழகங்களில் மற்றும் இதர வெளிநாடுகளில் உரைகள் நிகழ்த்தும் வாய்ப்பினைப் பெற்றார். ஜெர்மன் அகாதமியில் உறுப்பினராக இவர் சேர்க்கப்பட்டார். ஆயினும் முந்தைய ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுடன் ஜெர்மன் எழுத்தாளர்கள் அமைப்பு ஒன்றிணைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு



தெரிவிக்கும் வகையில் அதிலிருந்து விலகி விட்டார். "டெனிஸ் ஷெக்" எனும் விமர்சகர் முல்லரின் வீட்டுக்குச் சென்று அவரைச் சந்தித்த பின்பு, "ஒரு உண்மையான கவிஞரின் பட்டறையில் நான் நுழைந்துவிட்டேன்" என எழுதினார். அதற்குக் காரணம் முல்லர் ஒரு செய்தித்தாளின் ஒவ்வொரு அட்சரங்களையும் வெட்டி வெட்டி ஒரு மர அலமாரியின் இழுப்பறை முழுவதும் சேமித்து வைத்து, தாம் எழுதும் கடிதங்கள், படைப்புகளை அவற்றின் துணையுடன் எழுதி வந்தார் என்பதாகும்.

"தி பாஸ்போர்ட்" எனும் அவரது புதினம் ஜெர்மன் மொழியில் 1986ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. அது 'டைம்ஸ் லிட்டரரி சப்ளிமெண்ட்' எனும் பத்திரிக்கையின் விமர்சனப்படி, ஆதிக்க வெறியினால் அழுந்திக் கிடக்கும் ஒரு புதுவகை பரிபாஷையில் சங்கேத மொழியில் புரிந்தும் புரியாமலும் இருக்கும்படி எழுதப்பட்டுள்ளது எனச் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. அது தெளிவானது ஆயினும், சொல்ல வந்ததைச் சொல்லாமல் பிறவற்றைச் சொல்லிப் புரிய வைப்பது. பானை ஒட்டை, ஊசி போன்ற ஒவ்வொரு தலைப்புக்குக் கீழும் முக்கியம் அல்லாததாகக் கருத வேண்டிய வகையில், இடம் மாறிப் பொருள் புரிய வைத்துள்ளார். இவ்வாறு தவறான பாதை காட்டிச் செல்லும் நிகழ்வுகள் ஒவ்வொன்றும் இவரது நூலின் ஒரு குறு வடிவம் ஆகும். ஒவ்வொரு கதையிலும் சீச்க்யூவின் பெயர் சொல்லப்படாவிட்டாலும் அவன்தான் மையப் பொருள் என்பது புலனாகிவிடுகிறது. அதனால் ஆசிரியர் சித்தரிக்கும் ஒவ்வொரு குணச்சித்திரமும் இந்தப் புதினம் இன்னும் நீளும் தன்மையை உடையது என்பது போன்ற உணர்வைத் தருவதுடன், கதையின் எளிமையான தோற்றமும் உணர்வு வெளிக்கு அப்பால் நம்மை இழுத்துச் செல்கின்றது.

2009ஆம் ஆண்டில் முல்லர் தனது படைப்பாளி வாழ்க்கையில் ஒரு வெற்றிகரமான மைல்கல்லை எட்டி இருந்தார். அவரது புதினம் "பசி தேவதூதன்" ஜெர்மனியின் மிகச் சிறந்த நூலுக்கான பரிசைப் பெற்றதுடன் ஃப்ரான்ஸ் நாட்டின் மனித உரிமைகள் விருதினையும் தட்டிச் சென்றது. இந்த நூலின் கதைப் பொருள் என்னவெனில் சோவியத் யூனியனில் உள்ள ஒரு கிராமத்திற்கு ஒரு இளவயது ஆண் செய்யும் பயணம் மற்றும் இரண்டாம் உலகப்போருக்குப் பின் ட்ரான்சில்வேனியாவில் ஜெர்மானியர்களின் தலைவிதி பற்றியது ஆகும். ஆஸ்கார் பாஸ்டியர் எனும் கவிஞரின் படைப்புகளின் தாக்கத்தி லிருந்தும், தனது அன்னையின் துயர அனுபவங்களிலிருந்தும் குறிப்புகள் எடுத்து இந்த நூலை எழுதினார்.

அக்டோபர் 2009இல் ஸ்வீடிஷ் அகாதமி இவருக்கு இலக்கியத்தின் நோபல் பரிசு வழங்கப்போவதை அறிவித்தது. அதில் இவரைக் கவிதையின் மீது முழு கவனமும், உரைநடையின் பகட்டற்ற தன்மையும் கொண்டவர் என்றும் ஏதுமில்லாதோரின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் இயற்கைச் சித்திரம் என்றும் புகழ் பாடியது. முல்லரின் பாணியையும் அவரது ஜெர்மன் மொழி அறிவினையும் வியந்து அவரை ஃப்ரான்ஸ் காஃப்காவுடன் ஒப்பிட்டதோடு அல்லாமல் ஃப்ரான்ஸ் காஃப்காவின் தாக்கம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதையும் வெளிச்சம் போட்டுக் காட்டியது. இவரது நூல்களை வெளியிடும்

'மைக்கேல் க்ருகர்' என்பவர், "ருமேனியாவில் ஜெர்மன் மொழி பேசும் சிறுபான்மை மக்களிடையே வளர்ந்த ஹெர்ட்டா முல்லருக்கு இந்த விருதினை வழங்கியதன் மூலம், நோபல் பரிசுக் குழு கம்யூனிச ஆட்சியில் மனிதாபிமான மற்ற கொடுங்கோன்மையை எடுத்துரைத்த முல்லரைப் புரிந்துகொண்டுவிட்டது என்றே கூற வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார். 2012ஆம் ஆண்டில் 'மோ யானு'க்கு நோபல் பரிசு வழங்கப்பட்டதை விமர்சித்த முல்லர், ஸ்வீடிஷ் அகாதமி, தணிக்கையைக் கொண்டாடும் ஒரு படைப்பாளியைத் தேர்ந்துவிட்டது போல் தெரிகிறது எனக் கூறினார்.

இவரது சுயசரிதை போன்ற படைப்பாகிய "என்றென்றும் வேட்டைக்காரன் நரியே" எனும் புதினம் ருமேனியாவில் கம்யூனிசம் வீழ்ச்சி அடைவதற்கு முன்னர் அன்றாட வாழ்வில் ஒரு சில மக்கள் எப்படி நிழலுக்கும் ஒளிக்கும் இடையில் இயங்குகின்றனர் என்பதை ஆய்வு செய்யும் வகையில் படைக்கப்பட்டதாகும். உயர்ந்த கவிதை வகைமையைப் பயன்படுத்தி முல்லர் துளித்துளியாக அந்தச் செய்திகளைத் தரும்போது உண்மையையும் அப்படியே நம்மை உணர வைக்கிறார். பாதுகாப்புப் படை என்ற பெயரில் ஒரு பெரிய அண்ணன் நம்மை எப்போதும் கண்காணித்துக்கொண்டு இருக்கும்போது, வாழ்க்கை எவ்வளவு கசப்பானதாக இருக்கிறது என்பதை அவர்க்கே உரிய பாணியில் தனி முத்திரை பதித்துப் படைத்து உள்ளார்.

மந்திரக் கற்பனை நிறைந்த சிறகுகள் கொண்டு அவர் நம்மையும் தம்மோடு அழைத்துச் செல்வது நமக்கே புரியாது. ஒரு மின் கம்பி தயாரிக்கும் தொழிற்சாலையில் இயக்குனர் ஒருவரது சட்டைக் காலரில் இருந்து சிறு வண்டு ஒன்று அவர் பிடிக்குத் தப்பாமல் நழுவிச் செல்வதைப் படம் பிடித்துக் காட்டுவார். ஒரு மனிதனின் உள்ளார்ந்த அழிவைப் படிமமாகக் காட்ட எண்ணிப் பௌதிகமும் வெளி உலகும் போட்டி போட்டுக்கொண்டு இருப்பதை இத்தகைய அழகியல் கூறுகளால் நிரப்பி உள்ளார்.

இந்தக் கதையின் மையக் கருத்து.. 'அதீனா' எனும் பாத்திரம் தன் பெருமைக்குரிய உடைமையாக வைத்து இருக்கும் நரித்தோல் மேலாடை மீது அவருக்கு இருக்கும் பற்று



பற்றியது ஆகும். அந்த அம்மையார் வீட்டில் இல்லாத நேரத்தில் பாதுகாப்புப் படையினர் அவரது வீட்டிற்குள் நுழைந்து அந்த நரித்தோல் மேலாடையின் ஒவ்வொரு பகுதியாகக் கத்தரித்துவிட்டுச் செல்லும்போது அவளது பயம் அதிகரித்துக்கொண்டே போகிறது. அவ்வாறு கத்தரிப்பவர் எவராயினும் கத்தரித்த அந்தப் பகுதியை அப்படியே அந்த உடையில் வைத்துவிட்டுச் செல்வதால் பார்ப்பதற்கு நரி முழுமையாகவே இருக்கிறது. இது மக்களைத் துன்புறுத்துவது உலகப் பார்வைக்குத் தெரியாமல் போகும்படி அவர்கள் துன்புறுத்தினர் என்பதை வெளிக்கொணரப் பயன்படுத்திய படிமம் ஆகும். அந்த உடையை லேசாக அசைத்தாலே தெரியும் எத்தனை அங்கஹீனப்படுத்தப்பட்டுள்ளது என்பது. அதைப்போலவே அந்த மக்களும் எத்தனைச் சிதைக்கப்பட்டுள்ளனர் என்பதும் தெளிவாகும்.

இந்தப் புத்தகம் அனைவரும் விரும்பும் நூலாக இல்லாவிட்டாலும், இந்த நூல் கவிதைக்கு அப்பால் இருக்கும் கவின் மிகு அழகியலுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். ■

• கவி : உமா மோகன்
சித்திரம் : அன்பழகன்



பறத்தல் இருத்தல்
ஆரஞ்சா மஞ்சளா இது
வண்ணத்துப்பூச்சி
சம உயரச்செடியின் மலர்மேல்
அலைகிறது
அரவமின்றிக் குனிகிறேன்
புறங்கை வீசித் துரத்துகிறது
ஒருமுறையேனும்
பறந்துவிட்டு வா. ■

கட்டுரை

தொடர் - 1

• கரிகாலன்

# தேநீர் சாலை

கரிகாலன் கடந்த கால்நூற்றாண்டுக் காலமாகத் தமிழ் இலக்கியப் புலத்தில் இயங்கி வருபவர். கவிஞர். புனைகதையாளர். அ புனைவாளர். அவர் நமது தகவு மின்னிதழில் 'தேநீர் சாலை' எனும் தலைப்பில் பத்தி வகைமையில் தொடர் எழுதவுள்ளார்.

கரிகாலன் ஓர் ஆசிரியர். ஆனால் இங்கு அவர் பாடம் நடத்தப்போவதில்லை. கரிகாலன் ஓர் கவிஞர். இங்கு அவர் கவிதை எழுதப்போவதில்லை. கரிகாலன் சங்க இலக்கிய வாசிப்புடையவர். இங்கு அவர் சொற்பொழிவு நிகழ்த்தப்போவதில்லை. நிலா எரியும் கடற்கரைச் சாலைகளில், செந்தூரம் வானில் மினுங்கும் அந்திப் பூங்காக்களில், நமது காலையைப் புத்துணர்ச்சியாக்கும் தேநீர் விடுதிகளில், பக்கத்தில் அமர்ந்து நம்மோடு பேசப்போகிறார் கரிகாலன். இது இலகுவான நட்பின் உரையாடல். அன்பின் சர்க்கரை கலந்த காதல் கொஞ்சல். குழந்தையைத் தோள் சாய்த்து அம்புலி காட்டிச் சோறூட்ட அம்மா சொல்லும் நிலாக் கதைகள்.

நமது காலத்தின் மொழியில் நமது வாழ்வை, பண்பாட்டை, அரசியலைப் பேசும் தொடர் இது. இதில் நீங்கள் பார்த்த ஒரு ஈரானியப் படத்தின் இன்னொரு பரிணாமத்தை மீளக்காணலாம். வெகுசன சினிமாவில் என்ன இருந்துவிடப்போகிறது என சீரியஸ் இலக்கியம் தவறவிட்டதன் மறுபக்கத்தைக் காணலாம். அழியாத சங்கத்தமிழ் காட்டிய அபூர்வச் சித்திரங்களைக் கண்டுணரலாம். பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன் என்பானே பாரதி, அப்படிச் சிக்கலான விசயங்களை உடைத்து உரையாடலாம். நவீன வாழ்வின் அபத்தங்களை, கசடுகளை, பரிசுகளை இப்பத்திகளூடாக நாம் கடந்து போகலாம்.

தன்னைத் தானே கலாய்க்கும் இடங்களில்



'க.கா' என்றால் அது கரிகாலன் என அறியுங்கள். சுசி, அஞ்சலை எனப் பாத்திரங்கள் இடையிடையே நடமாடினால் அவை கவிஞரின் மெய்ந்நிகர் (virtual) காதலிகள் என அறியுங்கள். வாருங்கள், இனி கவிஞரோடு தேநீர் சாலையில் பயணிப்போம். உரையாடுவோம்!

## 1. சங்கம் பருகுவோம்

### • நிலத்தினும் பெரிதே

மங்கலகரமாக ஆரம்பிக்க வேண்டும். காதலைவிட மங்கலமானது வேறிருக்கிறதா என்ன? சரி, குறுந்தொகையில் 3 வது பாடலைப் பார்ப்போம். கடவுள், காற்று, காதல் இவையெல்லாம் வடிவமற்றவை. அதுவும் காதல் எங்கிருந்து வருகிறது? எப்படித் தாக்குகிறது? எங்கே மையம் கொள்கிறது? எவ்வாறு பலவீனமாகிறது? என்பதெல்லாம் மர்மமானவை. உடல் மனம் இவற்றால் உணரக்கூடிய காதலை மொழிக்குள் கொண்டு வருவது சிரமம். ஆனால் நம் சங்கக்கவிகளோ அற்புதம் நிகழ்த்துபவர்கள். குறிஞ்சித்திணையில் தேவகுலத்தார் பாடிய குறுந்தொகையைப் பார்ப்போம். இது தலைவி கூற்றில் அமைந்திருக்கும் பாடல்.

**'நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரளவின்றே – சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே'**

கரிய கொம்புகளில் குறிஞ்சி மலர்ந்து குலுங்கும் நாடு தலைவனின் நாடு. அப்பூக்களில் உண்ட மதுவைக் கொண்டு, வண்டுகள் தேன்கூடு கட்டுகின்றன. இத்தகைய வளம் நிறைந்த குறிஞ்சித் தலைவனோடு நான் கொண்ட நட்பு, நிலத்தை விடப் பெரியது. வானை விட உயர்ந்தது. நீரை விட ஆழமானது. ஆஹா, காதல் நிலத்தைவிட அகன்றது. ஆகாயத்தைவிட உயர்ந்தது. கடலைவிடவும் ஆழமானது.. என்கிறாளே தலைவி. இதைவிடவா நுட்பம் தேவை. வடிவமற்ற காதலை அளவெடுக்கிறாளே! நீர், நிலம், ஆகாயம் ஒன்றோடு ஒன்று உறவுகூடி இசைந்தவை. கடல் நீர் ஆவியாகி வானம் செல்கிறது. மேகமாகிக் குளிர்ந்து மண்ணில் பொழிகிறது. காதல் மழை கண்களிலிருந்து பொழிந்து இதயத்தை நனைக்கிறது. குறுந்தொகை தமிழையும் காதலையும் பிசைந்த அமுது. அள்ளிப்பருகி மரணமில்லாப் பெருவாழ்வு வாழுங்கள்!

- **மருதக் கலி!**

மருதக் கலி படித்தேன். வயலும் புனலும் சூழ்ந்த நிலம் மருதம். ஊரன், கிழத்தி, மகிழ்நன், மனைவி, உழவன், உழத்தி, கடையன், கடைசி என மாந்தர் வாழ்ந்த நிலம். வண்டாளம், மகன்றில், குருகு, தாரா இப்படிப் பறவைகள் கூட்டம். இம்மூதூர்களைத் தாமரைப்பூ, குவளைப் பூ, கழுநீர்ப்பூக்கள் வண்ணம் செய்தன. செந்நெல் அரிசிச் சோற்றை உண்ட நாகரிகம் கொண்டவர்கள் மருத மாந்தர். மருத யாழும் பறையும் இசைத்து மகிழ்ந்தார்கள். மருத நிலத்தில் இரண்டு பற்றுகள். பெண்களின் குடும்பப் பற்று. ஆடவரின் பரத்தையர் பற்று. வளம் பொருந்திய வாழ்வு. பொழுது போக்கில் புத்தியைச் செலவிட்ட நிலமது. பரத்தை வீடு சென்ற தலைவனைத் தலைமகள் கண்டிக்கிறாள். அவனோ மண்டியிடுகிறான். அவனது மதிப்பை அவள் குறைத்துவிடுவதில்லை. தவறைச் சுட்டித் திருத்த விழைகிறாள். தலைவன் நல்லவன். அவனைப் பாங்கன், பாணன், பாகன் போன்றோரே தவறாக வழி நடத்துகிறார்கள் என்பது அவளது எண்ணம். யோசித்தால் உழவர் பண்பாட்டில் இன்னும் இதன் எச்சங்கள் இருக்கவே செய்கின்றன. சந்தனம் கலைந்த மார்போடு, செஞ்சாந்து இழும்பிய உடையோடு, நகக்குறிகளோடு, சிவந்த வாயோடு வீடு திரும்பிய தலைவனை 'ஏன் அதற்குள் திரும்பினாய்?' எனப் பொய்க் கோவம் காட்டினார்கள். கைக் குழந்தையிடம் 'உன் அப்பனைப்போல் இருக்காதே!' என அறிவுரை சொன்னார்கள். ஆனாலும் தலைவனைக் கண்டதும் வெட்கமழிந்தனர் தலைவியர்.

இதோ ஒரு மருதக்கலி.

பரத்தையர் வீடு சென்றான் தலைவன்.

'இனியவனை இல்லம் சேர்ப்பேனோ!' எனப் பாங்கியிடம் கோபம் கொட்டுகிறாள் தலைவி. இன்று ஏதோ புயல் வீசப்போகிறது. விடிய விடியத் தலைவன் வெளியே பனியில் நனைய வேண்டியதுதான் எனத் தலைவன் மீது அனுதாபம் கொள்கிறாள் தோழி. பாவம் தோழி.

மறுநாள் காலை வருகிறாள். தலைவியின் மடியில் தலைவன். 'தலைவன் தவிப்பான். நான் வந்துதான் உனைச் சமாதானப்படுத்த வேண்டுமென எண்ணினேனே. எல்லாம் நடிப்பா?' என்கிறாள். 'சொன்னபடி கேட்கிறதா இப்பாழும் நெஞ்சு! ஊடுவேன் என்றால் கூடுவேன் என்கிறது. புலப்பேன் என்றால் கலப்பேன் என்கிறது. நான் என்ன செய்ய!' என அலுத்துக் கொள்கிறாள் தலைவி.

இத்தகைய இளகிய பெண்களால் செழித்தது மருதக்குடி!

'கோடு எழில் அகல் அல்குற் கொடி அன்னார் முலை மூழ்கி,

பாடு அழி சாந்தினன், பண்பு இன்றி வரின் எல்லா!

ஊடுவென் என்பேன்மன், அந்நிலையே, அவற்காணின்,

கூடுவென் என்னும், இக்கொள்கை இல்நெஞ்சே.' (கலித்தொகை: 84, மருதன் இளநாகன்).

– தொடரும் ■

• கவிஜி
ஓவியம் : அன்பழகன்

# சின்னஞ்சிறு உலகம்

என் அறை சாளரத்தைத் திறந்தேன்... பனிக்காற்றின் ஈரத் துளிகள் விரவிக் கொண்டிருந்தன.... முகம் நீட்டி முகர்ந்தபொழுதில் உறைந்துவிடும் நிலைக்குள் உடல் மொழி கூட கரைதலாகக் கொண்டேன். நுரையீரல் தீண்டும் சிலிர்த்த துளிகளின் சுவாசத்தில் சில் பயணம். சிலிர்க்கும் வனமெங்கும்... பட்டாம்பூச்சியின் ஊடுருவலாய்... நான் என்ற விதைக்குள் முளைக்கும் பனி கொட்டும் கவிதையைக் கடக்கவே முடியாத பக்கத்தில் அப்பிக்கொண்டேன்... மரபின் கவிதை தாங்கிய பெண் பாதக் கடற்கரையென.

'அப்பப்பா.....' என்றபடியே சாளரத்தை இழுத்து அடைத்தேன்.. கப்பென்று காணாமல் போன பனியின் நேசத்தின் தொடர்புகளாய் ஒரு சூடு அறைக்குள் நிரம்பியது. நான் மெய்ம் மறந்த கணத்தைச் சற்று தள்ளி வைத்துவிட்டு மெல்லமாகக் கதவைத் திறந்தேன். ஓ..... சாரல் மழை. அரிசியைத் தூவினாற் போல மழைத் துளிகள் பொழிந்துகொண்டிருந்தன. ஆச்சரியப் பார்வையில் நான் முகமற்று மனமானேன்...



அள்ளி இரைந்த மழை.. கதவுக்குப் பின்னால்... சாளரத்துக்குப் பின் பனி மூட்டம்.. ஒருவேளை என் கனவோ என்று கிள்ளிப் பார்த்துக்கொண்டேன். அல்லி பூத்த இதயம் போலச் சிணுங்கிய என் தேடல்... மீண்டும் ஓடிச் சென்று வலப்புறம் இருக்கும் சாளரத்தைத் திறக்கச் சொன்னது. ஓடினேன்.. திறந்தேன். அடர் வெயில்.. சுட்டெரிக்கும் பாலைவனத்தின் முகப்பின் நறுநறுப்பாகக் கண் கொண்ட தேடல் எதுவும் ஒரு வெயில் போல.. நிறமற்ற பாலையாகிக் கிடந்தது. கணத்தில் முகம் வியர்த்து உடல் வேர்த்து.. கண்கள் கூட வியர்த்துக் கொட்டியது.

ஓடிச்சென்று எதிர்ப்புறம் இருக்கும் பின் கதவையும் திறந்தேன்... இலையுதிர் காலத்தின் சுவடுகளால் மரங்களின் தலையாட்டலோடு பழுப்பு நிற இலைகள் பாதி பழுத்த இலைகள் எல்லாமே கதை சொல்லியாக, பறந்து கொண்டும்.. மிதந்து கொண்டும்... இணுங்கிய காற்றோடு செல்ல சிணுங்கலின் உயிர்ப்போடு கடந்துகொண்டிருந்தன. ஒன்றிரண்டு கதவு தாண்டி என் கன்னம் உரசியும் சென்றன. இலையுதிர் காலத்தின் வாசம் வரையறுக்கமுடியாத ஒன்று. தேகம் நிறைக்கும்.. ஆனாலும் மிச்சம் ஒன்று உண்டு என்று சொல்லச் சொல்பவையாக அது நிறைந்தேயிருக்கும். நிறைதலின் கணம் முழுக்க ஓர் இலையின் மெல்லிசை வாசித்துக்கொண்டே இருக்கும். சிறு வயது தோழியின் காற்றுக்குத் தூக்கிக்கொண்ட பாவாடையின் வெட்கமெனத் தலை கவிழ்ந்து அமரும் நாட்குறிப்பின் வர்ணங்களோடு அவைகள் சொல்லிக்கொண்டே இருக்கும் மிதவைகளின் ரகசியத்தை, நான் ஓடி ஓடி ஜன்னல் வாசல் என்று நாற்புறமும் திறந்து பார்த்துக்கொண்டே இருந்தேன். ஆச்சரியக் காட்சிக்குள் மலையளவு உயர்ந்து கொண்டே போனேன், சிறு துளியென. அப்போதுதான் ஒன்றைக் கவனித்தேன்...

என் எதிரே குழந்தை அமர்ந்து ஏதோ செய்துகொண்டிருந்தான். சற்று உற்றுக் கவனித்தேன்...

அவன் பூமி பொம்மையை மாற்றி மாற்றிச் சுற்றிக்கொண்டிருந்தான் சற்று வேகமாகவே.......! ■

கஸல் தொடர்

• ஜின்னா அஸ்மி



# நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் – II

நீ பார்க்காதவரை
எல்லாமே மர்மமாகத்தான் இருக்கிறது
காதலைப்போல...

•

வா...
கதவடைத்துவிட்டுக்
காற்றைப் போல உள் நுழைவோம் காதலில்...

•

தேவையிலிருந்து
தொடங்கும் குற்றத்தைப் போலவே
இந்தக் காதல் நமக்குள்...

•

அழகைத் தரிசிக்கும் கண்களுக்கு
ஒருபோதும் காதல் கிடைப்பதே இல்லை
வரமாக...

•

வாழ்க்கையை விற்பனை செய்யத் தெரியாத
பைத்தியக்காரத் தருணத்தில்
காதலிக்கத் தொடங்குகிறோம்....

•

மர்மத்தின் மலரை
பூக்கச் செய்கிறாய் எனக்குள்
நான் வெளிப்படையாக இருந்தாலும்
வாசமென்பது வெறும் நம்பிக்கையின்மைதானே..

•

நீ மூங்கில் அல்ல புல்லாங்குழல்...
கட்டுப்படுத்தத் தெரிந்தவரிடம்
இசை(க்)கின்றாய்

•

உன்னைப் பரிசீலிக்கச் சொல்வது
பாவ மன்னிப்புக்கு அல்ல...
காதலுக்கு... ■

• தமிழச்சி கோ.பிரியதர்ஷினி
முதலாண்டு கல்வியியல்
ஆக்ஸ்போர்டு கல்வியியல் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

# எனது அடையாளம் கவிதை...

நடந்தாய் வாழி காவிரி எனக் காவிரிப் பெருமையையும் மலைக்கோட்டை மாநகரத்தையும் கொண்ட திருச்சிராப்பள்ளியில் பிறந்தேன். எனது தந்தை தாய் நம்பிக்கையை மட்டும் கையில் வைத்து உழைப்பினைக் காணிக்கையாக்கும் பாமரர்கள்தான்.

தொடக்கக் கல்வியினைப் புனித ஸ்தனிஸ்லாஸ் நடுநிலைப் பள்ளியிலும்; மேனிலைக் கல்வியைப் புனித சிலுவை பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலும் பயின்றேன். திருச்சி சீத்தாலட்சுமி இராமசுவாமி கல்லூரியில் இளங்கலை விலங்கியலையும்; முதுகலை விலங்கியலைப் புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரியிலும் பயின்றேன். ஆக்ஸ்போர்டு கல்வியியல் கல்லூரியில் கல்வியியல் முதலாண்டு பயின்று வருகிறேன்.

பிறதுறை கல்வியைப் பயின்றாலும் தமிழினை மூச்சாக கருதித் தமிழ்மொழியின் மீது பெரும் காதல் கொண்டு கவிதைகள் இயற்றத் தொடங்கினேன். என்னுடைய கவிப் பயணம் தொடங்கியதன் முதற்காரணம் எனது தந்தையே. நான் படித்த முதற் புத்தகமும் அவரே. சிறுவயதில் கவி எழுதுவதில் ஆர்வம் மிக்கவர். அவரது தூண்டுதலில் கவிதை எழுத ஆரம்பித்தேன். எட்டாம் வகுப்பில் கவிதைப் போட்டியில் பங்கேற்றுக் கவிதை எழுதினேன். அதுவே முதல் தோல்வியாக அமைந்தது. அந்தத் தோல்வியே இன்று எனக்கு வெற்றிகரமான கவிஞராக உலாவருவதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தது.

என்னுடைய வெற்றிக்கான முக்கியப் படிகளாகத் திகழ்ந்தோர்... ஒவ்வொரு போட்டிக்கும் என் பெயரினைப் பரிந்துரை செய்து என்னை எல்லாப் போட்டிகளுக்கும் அனுப்பி அழகு பார்த்த அத்தனைத் தமிழ்த்துறைப் பேராசிரியர்களும் ஆவர். நீ படிக்கும் துறையை விடுத்துத் தமிழ்த்துறைக்கு வந்துவிடு என என் மீது நம்பிக்கையும் பெரும் மதிப்பும் கொண்ட பள்ளி, கல்லூரித் தமிழாசிரியர்கள் அனைவருக்கும் நன்றி கூறும் முக்கிய தருணமாக இதனைக் கருதுகிறேன்.

என்னுடைய ஏழ்மையின் பக்கங்கள் வெற்றியின் கவிதைகளால் நிரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கவிதைப் பயணம் காலப்போக்கில் என்னை யார் என்று சமூகத்திற்கும் எனக்கும் அடையாளப்படுத்தியது. தமிழன்னை வழங்கிய மிகப்பெரிய சொத்தாக நினைக்கிறேன் கவி இயற்றுவதை. கவியின் வடிவம், மொழியின் நயம், இலக்கண இலக்கிய மேன்மை கற்றுக்கொடுத்து என்னைச் செதுக்கிய முக்கியச் சிற்பிகளாகத் தலைசிறந்த கவிஞர்களையே கூறுவேன். அவர்களது புத்தகங்களுடனேயே பொழுதுகளைக் கழித்தேன்.

திருச்சி மாவட்ட அரசு நூலகம் என் திறமைக்கான உந்துகோலாக இருந்தது. பத்தாம்



வகுப்பு முதல் மாவட்ட மாநிலக் கவிதைப் போட்டிகளில் கலந்துகொண்டு முதலிடத்தில் வெற்றி பெற்றேன். குறிப்பாக, பள்ளிக் கல்வித்துறை நடத்திய கவிதைப் போட்டியில் திருச்சி மாவட்டத்தில் முதலிடம் பெற்றேன்.

மேலும் மிகவும் நெகிழ்ச்சியான மற்றும் என் வாழ்வில் நான் கண்ட மிகப்பெரிய சாதனையாக.. பதினோராம் வகுப்பில் தமிழ்நாடு அளவில் மாநிலத்தில் முதலிடமும் கோப்பையும் பல அமைச்சர் பெருமக்களிடம் பெற்றேன். பிறகு தமிழ் வளர்ச்சித்துறை நடத்திய கவிதைப் போட்டியில் தொடர்ந்து மாவட்ட அளவில் முதலிடமும் பரிசுத்தொகையும் மாநில அளவிற்குத் தேர்ச்சியும் பெற்றேன். தொடர்ந்து ஆறு வருடங்களாக இந்தப் போட்டியில் பங்கேற்றுப் பத்தாயிரம் முதல் இருபத்து ஐந்தாயிரம் என இதுவரை இரண்டு இலட்சம் ரூபாய் பரிசுத்தொகையைப் பெற்றிருக்கிறேன்.

அடுத்தபடியாக, பிரதமரின் தூய்மை இந்தியா திட்டத்தின்படி திருச்சியின் சிறந்த குடிமகள் என்ற பெயரினையும் கவிதைப் போட்டியில் மாவட்டத்தில் முதலிடமும் பெற்றேன். மேலும் தமிழக அரசின் அம்மா விருதினை அமைச்சர் மா.பா.பாண்டியராசன் அவர்களிடமிருந்து பெற்றேன். திருக்கோவிலூர் கபிலர் முத்தமிழ்ச் சங்கத்தில் கபிலர் விருதும் மற்றும் கவிமாமணி பட்டமும் பெற்றேன். அமுதசுரபி அறக்கட்டளையில் பாரதி விருதும், கல்லூரியில் சிறந்த கட்டுரையாளருக்கான வெள்ளிப் பதக்கமும் பெற்றேன்.

தமிழ்நாடு பொன்விழா ஆண்டு கவிதைப் போட்டியில் வென்று பரிசுத்தொகையினையும் சான்றுகளையும் பெற்றேன். தமிழகப் பெண்கள் செயற்களம் சார்பாகச் சிறந்த பேச்சாளர் விருது பெற்றேன். தலைசிறந்த கவிதையாக எனது கவிதையைத் தேர்ந்தெடுத்துப் பரிசுத்தொகை வழங்கியதோடு கணையாழி பத்திரிக்கை நிறுவனம் எனது கவியைக் கணையாழி இதழில் வெளியிட்டது. மேலும் மாவட்ட மாநில அளவில் கவிதைப் போட்டிகளில் வென்று இந்தச் சமூகத்திற்கு என்னை யார் என்று அறிய வைத்தது என் எழுத்துக்களே.

மேலும் கவிதைகளைப் புத்தகமாக இயற்றிடும் பணிகளையும் செய்து வருகிறேன். எனது தமிழ் ஆர்வத்தினையும் தமிழின் மீதான காதலையும் கண்டு தமிழச்சி என்றும் தமிழ்க்காதலி என்றும் அழைக்கப்பெற்றேன். சமூகத்திற்கு நல்ல கருத்துக்களையும் என் எண்ணக்குவியல்களையும் தமிழ்மொழியின் பெருமையினையும் அறிய வைக்கும் உன்னதமான படைப்பு கவிதை. பிறதுறை மாணவி என்பதால் கவியின் பிழைகளைச் சரிசெய்துகொள்ளவும் என்னை மெருகூட்டிக் கொள்ளவும் தமிழ்வழி கற்ற நண்பர்களின் நட்பினை நாடிக் கவிதையாக உருவம் கொடுத்து மகிழ்ந்தேன்.

நம்முடைய வெற்றி தோல்வி இவற்றைக் கடந்து எந்தத் துறையானாலும் சாதிக்கவேண்டும். நம் நாட்டின் பாரம்பரியத்தையும் நாம் தமிழன் என்கிற அடையாளத்தையும் மறக்காமல் மார்தட்டிப் பெருமை கொள்ளவேண்டும்.. தமிழ்நாட்டில் பிறந்ததற்கு. தமிழினை எழுத்துப் பூர்வமாகவும் பேச்சு வழக்கிலும் பயன்படுத்தும் நாம் கணினியிலும் அறிவியலிலும் பெயர்ப் பலகைகளிலும் வண்டி எண்களிலும் தமிழால் மட்டுமே நிறையக் காண வேண்டும் என்பது என் அலாதியான கனவு.

நல்ல புத்தகங்களை இயற்றியும் கவிதையை எனது அடையாளமாக மாற்றியும் செயல் படுவேன். கல்விக்கான படிப்பையும் உயிர்மொழி தமிழ்மொழிக்கான அடையாளத்தையும் உணர்ந்து இருதுறைகளிலும் வெற்றி பெற வேண்டும் என்பது என் விருப்பம். இன்று உலக வரலாற்றில் சாதித்த அத்துணைத் தமிழ் நபர்களும் தமிழ்வழி கற்றவர்களே. தமிழ்வழிக் கல்வியைக் குறைவாக எண்ணாமல்.. ‘தாய்த்தமிழ் வாழ வைக்கும், ஒருபோதும் வீழச் செய்யாமல்’ என்ற எண்ணம் கொண்டவராய் நாம் ஒவ்வொருவரும் இருக்க வேண்டும்.

என்னைச் சுற்றி எத்தனைச் சோதனைகளும் தோல்விகளும் இருந்தாலும் நான் காதலிக்கக் கவியுண்டு; என்னைக் காதலிக்கத் தமிழுண்டு. வீரமிக்க தமிழச்சியாகச் சமூகத்தில் என்னை முன்னிறுத்திக் கொள்வதோடு மட்டுமில்லாமல் எல்லாப் பெண்களும் தன்னம்பிக்கையோடு சமூகத்தில் எல்லாத் துறைகளிலும் வெற்றி பெற வேண்டும் என எண்ணுகிறேன். தமிழே நீ வாழும் வரை நான் வாழ்ந்து தமிழுக்குத் தொண்டு செய்யவேண்டும். கடந்துவந்த பாதைக்கு எல்லாம் கைப்பிடியாய் இருந்து என்னை வாழவைக்கும் தமிழுக்கும் தாய்த்தமிழ் நாட்டிற்கும் என் கவிதைக் காதலனுக்கும் மிக்க நன்றி. ■

• கோதையூர் மணியன்
தலைவர், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்,
ஸ்ரீ வில்லிபுத்தூர்.

# ஆவண மலர்களின் அழகுப் பூங்கா




1970ஆம் ஆண்டு முதலே ஸ்ரீ வில்லிபுத்தூர், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தொடங்கிச் செயல்பட்டு வருகிறது. மாதந்தோறும் மாலையில் கூட்டம் நடத்தி, படைப்பாளருக்குப் படைப்பரங்கம் நடத்தி, படைப்புகளுக்கு விமரிசனம் செய்து, படைப்பாளர்களைச் செழுமைப்படுத்தி வருகிறது.

2001ஆம் ஆண்டிலிருந்து மாதம் ஒரு எழுத்தாளர் சந்திப்பு என்கிற நிகழ்வு தொடங்கியது. வெறுமனே கூடிக் கலைவதைவிட, வரலாறாய் ஆவணப்படுத்தப்படும் வகையில் செயல்பட வேண்டும் என்கிற எண்ணத்தால் இது நிகழ்ந்தது.

முதலாவதாக விருதுநகர் மாவட்டத்தில் உள்ள எழுத்தாளர்களைப் பாராட்டி, அவர்களது படைப்புகளை விமர்சித்துக் கௌரவிக்க வேண்டும் எனத் திட்டமிடப்பட்டது. இன்றும் வாழும் 105 வயதுடைய கு.சங்கரநாராயணன் என்கிற எழுத்தாளரை முதன்மையாகப் பாராட்டிக் கௌரவித்தோம். இரண்டாவதாக வீர.வேலுசாமி என்கிற கரிசல் எழுத்தாளரைப் பாராட்டிக் கௌரவித்தோம்.

சுப.கோ. நாராயணசாமி அவர்களைத் தலைவராக ஏற்றுச் செயல்பட்டு வந்தோம். அவரது காலத்திற்குப்பின் எனது தலைமையில் (கோதையூர் மணியன்) மன்றம் செயல்படத் தொடங்கியது. பல இலக்கிய நண்பர்கள் உறுதுணையாக இருந்தார்கள்.

தொடர்ந்து இடைவிடாமல் மாதந்தோறும் எழுத்தாளர் சந்திப்பை நடத்திட வேண்டும் என்கிற வைரக்கியத்தோடு பாடுபட்டோம். உள்ளூர் வெளியூர் எழுத்தாளர்களுடன் தொடர்புகொண்டு எழுத்தாளர்களை இனங்கண்டு பாராட்டினோம்.

மிகப் பிரபலமான எழுத்தாளர்களையும் கௌரவப்படுத்தி மன்றத்தின் தரத்தை உயர்த்துவதற்காக மதுரையைச் சேர்ந்த இந்திரா சௌந்தரராஜனைப் பாராட்டிக் கௌரவிக்க நேரில் அழைத்தோம். அவரும் மனமுவந்து ஒப்புக்கொண்டார். இந்திரா சௌந்தரராஜன் நிகழ்வைப் பென்னிங்டன் கலையரங்கில் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் முழுநாள் நிகழ்ச்சியாக நடத்தினோம்.

தொடர்ந்து சாகித்ய அகாதமி எழுத்தாளர் மேலாண்மை பொன்னுச்சாமி, தோப்பில் முகம்மது மீரான் ஆகியோரையும் நேரில் சென்று அழைத்துச் சம்மதம் பெற்று, நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்திப் பெயர் பெற்றோம்.

ரசிகமணி டி.கே.சி. அவர்கள் பிறந்த ஊர் ஸ்ரீவில்லிபுத்தூர். டி.கே.சி.யின் தாய் ஸ்ரீவில்லி புத்தூரில் பிறந்தவர். அவரது வீட்டை ஆவணப் படுத்த வேண்டி மன்றத்தின் மூலம் கல்வெட்டு ஒன்றை வைத்து அவரது பேரன்களையும், உறவினர்களையும் மன்றத்தின் சார்பில் அழைத்து ஒரு நாள் முழுக்கச் சிறப்பு நிகழ்ச்சி நடத்தினோம். நிகழ்ச்சிகளுக்கு அழைப்பிதழ் அடித்து ஆவணப்படுத்தி வந்தோம். அதோடு நில்லாமல் 25ஆவது எழுத்தாளர் சந்திப்புக்கு ஒரு மலர் தயாரித்து ஆவணப்படுத்தினோம். அதன்பின் 50ஆவது எழுத்தாளர் சந்திப்புக்கு ஒரு மலர் தயாரித்து மன்ற வளர்ச்சியைப் பெருமைப்படுத்தினோம். 75ஆவது எழுத்தாளர் சந்திப்புக்கு ஒரு மலர் தயாரித்தோம். 75ஆவது சிறப்பு மலரைத் தினமணி ஆசிரியர் சென்னையில் பழைய பேப்பர் கடையில் வாங்கி அதனைப் பாராட்டித் தினமணி நாளிதழில் கலாரசிகன் என்கிற பெயரில் எழுதியது எங்கள் மன்றத்துக்குப் பெருமிதம் சேர்த்தது. 100ஆவது எழுத்தாளர் சந்திப்பு நிகழ்விலும் மலர் தயாரித்தோம்.

இலக்கிய மன்றங்களில் இதுபோன்ற ஆவண மலர்கள் தயாரிப்பது எங்களது மன்றத்தின் தனிச்சிறப்பு எனப் பலராலும் பாராட்டப் பட்டது. 100ஆவது ஆவண மலரில் சாகித்ய அகாதமி எழுத்தாளர் நீல.பத்மநாபனின் நேர்காணல் வெளியிட்டுச் சிறப்பு பெற்றோம்.

மிகச் சிறந்த நவீனச் சிந்தனை எழுத்தாளர் ஜெயமோகனைத் தொலைபேசி மூலம் அழைத்துச் சம்மதம் பெற்று, நிகழ்ச்சி ஒன்றைச் சிறப்பாக நடத்தினோம். அவரால் எங்கள் மன்றம் சிறப்புப் பெற்றது. சமீபத்தில் சாகித்ய அகாதமி விருதாளர் மலர்வதி அவர்களையும் தொலைபேசி மூலம் பேசிச் சம்மதம் பெற்று அவர்களைக் கௌரவித்துப் பாராட்டிப் பெருமிதம் அடைந்தோம்.

ஆரம்பக் காலங்களில் எங்களது சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு நாவலாசிரியர் பொன்னீலன் கலந்துகொண்டு எங்களைப் பாராட்டிக் கௌரவித்தது எங்களால் மறக்கமுடியாத உன்னத அனுபவமாகும். இப்போது 200ஆவது எழுத்தாளர் மலரை வெளியிட்டுள்ளோம். 200 எழுத்தாளர்களையும் நாங்கள் வரிசைப்படுத்திய போது பெருமிதம் கொண்ட மகிழ்ச்சி எங்களைத் திக்குமுக்காடச் செய்தது.

சென்னை, சேலம், மேட்டூர், செங்கல்பட்டு, திருச்சி, நெல்லை, தென்காசி போன்ற தொலைதூரங்களில் இருந்து வந்து எங்கள் எழுத்தாளர் சந்திப்பில் பலரும் கலந்து கொண்டது எங்களை மிகவும் கௌரவப் படுத்தியதாக மகிழ்கிறோம். தொடர்ந்து இடைவிடாமல் 222ஆவது எழுத்தாளர் சந்திப்பு ஆகஸ்டு 25இல் நடைபெற இருக்கிறது.

மிகச்சிறந்த எழுத்தாளரான சோ.தர்மன் அவர்களையும் பாராட்டிக் கௌரவித்துள்ளோம். தேனி எழுத்தாளர் நண்பர்கள் பெரும்பாலும் எங்கள் மன்றத்தில் கலந்துகொண்டு சிறப்புச் செய்துள்ளார்கள். இன்னும் தொடர்ந்து மாதந்தோறும் ஒரு வேள்வியைப் போலத் தமிழ்ப்பணி ஆற்றுவோம். எழுத்தாளர்களை ஒருங்கிணைத்துப் பாராட்டுவோம். தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் உங்களோடு சேர்ந்து தொடர்ந்து பணியாற்றுவேன். ■

• கவி : அறிவுமதி
சித்திரம் : அன்பழகன்



ஓடையில் கூழாங்கற்கள் சொற்கள்
உழுசாலில் விதைகள் சொற்கள்
'அற்றைத் திங்கள்' தொடங்கி
அதே அடுக்குதலில்தான்
கவிதை பெருகிக்
கொண்டிருக்கிறது.
வற்றாது கவிதை.
எழுது பிருந்தா...
இன்னும்... இன்னும்
இன்னும்... ■

காலம் கடந்த காவியம்


சிறுகதை

• லா.ச. ராமாமிருதம்

ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன், அன்பழகன்

# ரயில்

வாழ்க்கையின் சிக்கலே போன்று தண்டவாளங்கள் பின்னியும் பிரிந்தும், கண்ணுக்கு எட்டிய தூரம் வரையிலும், அதற்கு அப்பாலும் ஓடுகின்றன. அங்கங்கே ஆப்பு அறைந்தாற் போன்று தந்திக் கம்பங்கள் நிமிர்ந்து நிற்கின்றன. இரு மருங்கிலும் வயல்களும், குன்றுகளும், மரங்களும் பாய்ந்து சுழன்று செல்கின்றன. ஒருசமயம் ஆகாயத்தின் முழு நீலம்; ஒரு சமயம் அதில் அடித்த பஞ்சைப் போன்ற வெண்மேகம்; ஒருசமயம் அத்தனையையும் மறைக்கும் புகைப்படலம்.



இத்தனைக்குமிடையில், அத்தனையினதும் நடு நாடிபோல், அலுப்பற்று ஒரே நிதானமான வேகத்தில், ஒரு ரயில் வண்டித் தொடர், மரவட்டை போல் நெளிந்து நெளிந்து, விரைந்து செல்கிறது.

“ஜன்னலைத் திற!”

“இல்லேடா கண்ணா... அங்கே உட்காரப் படாதுடா...”

“மாட்டேன்... அங்கேதான் உக்காரணும்...நான் ஜன்னல் வழியாப் பாக்கணும்... ஐயோ... அம்மா இதோ பாரேண்டி... அக்கா திறக்க மாட்டேங்கிறாடி!”

“சனி தொலையட்டும்; திறந்துவிட்டுடேண்டி. எப்படியாவது அழாமலிருந்தால் போறும்...”

“இதோ தொலைச்சுக்கோ.”

வண்டிக்குள்தான் எத்தனை பேர், எத்தனை விதமாய் உட்கார்ந்து, படுத்து, நின்று, குமைந்து வருகின்றனர்! எத்தனை விதமான பேர்கள்... எங்கெங்கிருந்தோ எங்கெங்கேயோ போகிறவர்...

எஞ்சினின் ஊதல் ஆகாயத்தைக் கிழித்துக் கொண்டு போகிறது. அதுவே ஒவ்வொருவருக்கு அவரவர் மனதிற்கேற்ப, ஒவ்வொரு விதமாய்ப் படுகிறது. ஒருத்தருக்கு இருப்புக் குதிரையின் உற்சாகமான கனைப்பாயிருக்கிறது; ஒருத்தருக்குப் பின்வரும் விபத்தின் முன்னோலக் குறியாய் மனத்தில் ‘சுறுக்’கென்று தைக்கிறது.

மூணு நாலு பேர் சேர்ந்தாற்போல் ஒரே பெஞ்சில் நெரிகின்றனர்...

“என்னப்பா உன்னை நம்பி...”

“என்னத்தே என்னை நம்பி? நாந்தான் அப்பவே சொன்னேனே.. குதிரை என்னவோ நல்ல குதிரைதான், ஆனால் அந்த ஜாக்கி

ஏறினால் கோவிந்தாதான் என்று! போனால் போகிறது போ... வர சனிக்கிழமை நைஜாம் பிளேட் இருக்கு போ..."

"அடப்பாவி...என்னடா இருக்கு, இருக்கு என்கிறே? இன்னிக்குப் போனால் வீட்டில் அவள் மூக்கைச் சிந்திச் சிந்திப் போடுவாளேடா எப்படியடா போய் முழிப்பேன்? அவளுக்கு அப்பப்போ குடும்பச் செலவுக்குக் கொடுக்கிற பணத்தில் அவள் மிச்சம் பிடித்து, கடுகு டப்பாவிலும் மிளகு டப்பாவிலுமாய்ப் போட்டு வைத்திருந்ததையெல்லாம் பீராய்ந்து எடுத்துக் கொண்டு முப்பதை முன்னூறாய்க் கொண்டு வரேன்னு சொல்லி வந்தேன்!"

"என்னடா மூக்கால அழறே? இங்கே மாத்திரம் வாழறதோ? ஸ்வஸ்திக் வளையல் ஒரு ஜோடி அடித்துப் போன மாஸம்தான் அவள் பிறந்த வீட்டில் போட்டார்கள். இன்னிக்குக் கழட்டிக்கொண்டு வந்து இங்கே கப்பங் கட்டியாச்சு எல்லாம் இப்படித்தான்".

"ஒருநாள் வரதுதான், ஒருநாள் போறதுதான் இதெல்லாம் முடியாதப்பா."

"என்னப்பா பண்ணுவே.. இன்னிக்கு உனக்கு இந்த வேதாந்தம் இருப்பது ஒன்னும் வினோதமில்லை. உன் ஜேபியிலே, லட்சணமாய் நூறுரூபாய் நோட்டுகள் இரண்டு பதுங்கி யிருக்கையோன்னோ!"

"எனக்கு எல்லாம் ஒன்னுதான். இருந்தாலும் ஒரே பேச்சுதான்; இல்லாவிட்டாலும் அதே பேச்சுதான்; என்னவோ என்னய்யா என்னய்யா அவ்வளவு அவசரம்? மேலே இடிச்சுண்டு ஓடறே! எதிரே நிக்கறேனே.. கல்லாட்டமா, தெரியல்லே?"

"இல்லை, மன்னிக்கவும். இந்த ஸ்டேஷனில் தான் இறங்கணும். அடிபட்டுடுத்தா?"

"அதெல்லாம் ஒன்னுமில்லென்னா! பரவாயில்லே, போங்கோ - வண்டி பாஸாயிடுத்தே".

"டிக்கட், டிக்கட்".

"இதோ உள் ஜோபியிலே ஐயையோ!"

"என்ன என்ன?" வண்டி முழுவதும் ஒரே கலவரம், ஆரவாரம்.

"பைக்குள்ளே தேளா, கொட்டிடுத்தா?"

"ஐயையோ! என் காசைக் காணாமே. கடியாரத்தைக் காணாமே.. பர்ஸ்.. டிக்கட்"

"அதனால் என்னப்பா, நீதான் சொன்னியே.. இருந்தாலும் ஒன்னுதான் இல்லாவிட்டாலும் ஒன்னுதான் என்று. எல்லாம் நீ சொல்லிக் கொடுத்த வேதாந்தம்தானே.."

"திருட்டா? யார்? யார்?"

"யார், யார் என்றால் உங்ககிட்டே சொல்லிக் கொண்டு போவானா? எல்லாம் அவரே வழிகூட்டியனுப்பிச்சாரே அந்த ஆசாமிதான்



கைவெச்சிருக்கணும், இல்லாட்டா அவனுக்கென்னையா அவ்வளவு அவசரம், வண்டி புறப்படற சமயத்தில் இடிச்சுப் புடிச்சுண்டு இறங்கும்படியா?"

"இதே மாதிரிதான் ஸார், நான் பத்து வருஷங்களுக்கு முன்னால் விருத்தாசல மார்க்கத்தில் போய்க்கொண்டிருக்கையில்.."

"டாமிட்! டிக்கட், டிக்கட்"

"ஒருத்தரையும் குற்றம் சொல்வதற்கில்லை. இந்த முழி பிதுங்கும் கூட்டத்தில் அவாளவாள் ஜேபியைப் பற்றியே சந்தேகம் வந்துவிடுகிறது. தன் பையென்று நினைத்து இன்னொரு சட்டையில் கைவிட்டுவிட்டான்! அவ்வளவுதான்."

வண்டியின் ஊதல் எல்லாரையும் பரிஹசிக்கிறது. விதியின் விளக்கமுடியாத கதி போன்றிருக்கிறது, வண்டி ஒரே திக்கில் செல்லும் தீர்மானம்.

"டேய், சொன்னதைக் கேளு. நீ ரொம்ப எட்டிப் பார்க்கறே. காலைவாரி விட்டுடப் போறது".

"நீ என் காலைப் பிடிச்சுக்கோ. அதைவிட உனக்கு என்னடி வேலை?"

அந்தப் பக்கம் முழுவதும் இதைக் கேட்டதும் ஒரே சிரிப்பு.

"பேஷ்.. பிழைக்கிற பிள்ளைதான்! என்ன இருந்தாலும் ஆண்பிள்ளைகள் ஆளப் பிறந்தவர்கள்தான்."

பிள்ளையைப் பெற்றவர்களுக்கு உள்ளூற ஆனந்தம் பொங்குகிறது.

"என்னடா,உனக்கா உனக்கு இன்னமும் சிசுரூஷை பண்ணிண்டு இருக்கணுமா! அவளுக்குக் கலியாணம் ஆன அப்பறங்கூட? போனாலும் போறதுன்னு ஒரு வார்த்தை சொன்னையே அதுவும் மாப்பிள்ளையை எதிரே வெச்சுண்டு!"

சர்க்கரை என்று நினைத்து உப்பை வாயில் வைத்துக்கொண்ட முகம் போல், மாப்பிள்ளை மூஞ்சியில் அசடுவழிகிறது. அவனுக்குக் கலியாண வெறி இன்னமும் தணிந்தபாடில்லை. மாமனார் வீட்டில்.. சேஷ்த்ராடனம் போகப்போகிறார்களென்று வீட்டில்கூடச் சொல்லிக்கொள்ளாமல் 'டிமிக்கி' கொடுத்துவிட்டு வந்திருக்கிறான். அவன் மாமியார் ஏதோ பெரும்வெற்றியைக் கண்டுவிட்டதுபோல், பெண்ணையும் மாப்பிள்ளையையும் ஒன்றாய் உட்கார வைத்துவிட்டு மனமகிழ்கிறாள்.

அவனுக்குள் அவனையும் அவளையும் சுற்றித்தான் உலகமே சுழல்வதாய்த் தியானம். மணலில் தலையைச் செருகிக்கொண்ட நெருப்புக் கோழிபோல், ஒருவரும் தன்னைப் பார்க்கவில்லையென்று அவன் நினைத்துக்கொண்டபோதெல்லாம், அவள் தோள் பக்கமாய்க் கையைப் போடுகிறான். இந்த விரசத்தில் தட்டும் வெறுப்பில் அவளுக்கு முகம் சுளிக்கிறது. அதே சமயத்தில் ஒரு திருட்டுச் சந்தோஷமும் அந்த வெறுப்பில் கலந்திருப்பதால், சலிப்புக் கரைந்து முறுவலாய் மாறுகிறது. இப்படியே அவள் பக்கத்தில் அவள் புதுப்புடவை சலசலத்துக் கொண்டு, உடல் பட்டதும் படாததுமாய் இருவரும் உராய்ந்துகொண்டு, இப்படியே இந்த ரயில் எப்பொழுதுமே எங்கும் நிற்காமல் போய்க்கொண்டே இருக்காதா?

"இந்த ரயில் எப்போதான் நிற்குமோ தெரியவில்லையே!"

"ஏன் இப்படிக் கரிச்செடுக்கறேள்?... எப்பவோ ஒருதடவை சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் சேர்த்தாப்போலே லீவு வரதே! வேளா வேளை எந்தெந்த ஊரிலேயிருந்தோ பெருமாளைச் சேவிக்கணும்னு வராள்... நாம் இப்படிப் பக்கத்து ஊரிலே இருந்துகொண்டே ஒருதடவையாவது பார்க்காமலிருக்கறதான்னு கூப்பிட்டால்.."

"இதோ பார்.. எனக்கு எங்கேயாவது போய்த் தலையைச் சாய்ச்சால் போறுமென்னிருக்கு.

இத்தனைக் குழந்தையும் குட்டியும், மூட்டையும் முடிச்சுமாய்ப் போய், இந்தப் புண்ணியத்தைச் சம்பாதிச்சுண்டு வரணும்னு எனக்கு ஆசையே இல்லை".

"உங்கள் கூட்டமே நாஸ்திகக் கூட்டம்தானே.. உங்களுக்கெல்லாம் ஒரே ஆசைதான் - புகையிலையைப் போட்டுண்டு கண்ட இடத்தில் துப்பவும் சீட்டாடிண்டு இருக்கவுமேயொழிய"

"அம்மா, தாயே"

"நீங்கள் - என்ன வேணுமானாலும் சொல்லலாம். நீங்கள் சொன்னாலும் சொல்லாட்டாலும் நான் தாய்தான். நானும் கலம் பெத்தாயிடுத்து!"

"ஐயோ, நம்ம வமிசாவளியெல்லாம் இங்கே வந்து கூடவா படிக்க வேண்டும்!"

"ஏன் இப்படி"

இல்லை, மற்றதொன்றும் கேட்கவில்லை. வண்டியின் ஊதல் எல்லாச் சத்தத்தையும் அடக்கிவிடுகிறது.

தடக் தடக் தடக்

வண்டி விழுங்க விழுங்க, தண்டவாளம் திரௌபதியின் துகில் போல் நீண்டுகொண்டே போகிறது. அது வளைந்து சுழன்று மறுபடியும் வெறித்துச் செல்லும் ரீதியைப் பார்க்கையில் அதுவும் காலத்தைப் போல் எல்லையே அற்றது போலிருக்கிறது. எங்கெங்கெல்லாம் எப்படி யெல்லாம் போகிறது! ஓர் இடத்தில் தாபத்தால் உடைந்த இதயம்போல், பூமி பளார் பளார் என்று அங்கங்கே, தண்ணீரே காணாமல் வெடித்திருக்கிறது. இன்னொரு இடத்தில் துக்கம் நிறைந்த உள்ளத்தினின்று பிழியும் கண்ணீர்போல் சதுப்பு நிலத்தில் ஜலம் கசிகிறது. இன்னொரு சமயம், பாலத்தினடியில் இருமருங்கிலும் கண்ணாடித்தகடு வார்த்தாற்போல் ஏரியில் தண்ணீர் விளிம்பு கட்டி அசைவற்று நிற்கிறது.

ஒரு சமயம், கோபத்தில் வெதும்பும் மனம் போல், வானத்தில் மேகங்கள், கறுத்தும் வெளுத்தும் புழுங்குகின்றன. இன்னொரு சமயம் ஆகாயம் பிரேதம் போல் ஒரே நீலமாய்ப் பூரித்திருக்கிறது.

ஒரு சமயம், மாலைவேளையில் மலரும் மலர்களில் மணம், மனத்தை மயக்குகிறது. மறுசமயம் ஜதையில் வேகும் பிணத்தின் நிணம் மூக்கைப் பொசுக்குகிறது. வண்டி ஒரு மூலையில் திரும்பியதும் அதோ சவுக்குத் தோப்புக்கப்பால், சுடுகாட்டினின்று எழும் ஜ்வாலைகளே தெரிகின்றன.

வேளை முதிர முதிரக் கவியும் இருளில், ஒரு விளக்கு ஒளி மினுக்கென்று தோன்றுகிறது. கண்மூடி வழிகாட்டும் லட்சணம் போல், எட்டியும் கிட்டியும் நிலையற்று எரிகிறது.

ரயிலில் பெஞ்சோரத்தில் ஒருத்தி இத்தனைப் பேரிடையிலும் தன்னந்தனியாய்ப் பதுங்கிக் கிடக்கிறாள். பாம்பின் கண்பட்ட இரைபோல் பார்வை நிலைதவறி, ஒரே குத்தலில் விறைத்திருக்கிறது. மார்த்துணி சரிந்திருப்பதுகூட அவளுக்குத் தெரியவில்லை. வண்டி அலறும் போதெல்லாம், அவள் கைகள் அவளை அறியாமலே, அடிவயிறைப் பிட்டாய்ப் பிசைகின்றன.

அவள் போய்ச் சேரும் இடத்தில் என்ன காத்திருக்கிறதோ அவளுக்கு! 'வண்டி இவ்வளவு சீக்கிரம் பிரயாணமுடிவை நெருங்குகிறதே' எனும் பயங்கரம் ஒருபக்கம்; 'ஐயோ! இந்தச் சங்கடத்தைச் சகிக்கமுடியவில்லையே! ஒரே வழியாய்ச் சுருக்கப் போய்ச் சேர்ந்துவிட மாட்டோமா!' எனும் உள்ளப்பதைப்பில், உயிரே ஊசலாடுகிறது.

"ஐயோ நான் படும்பாடு.. சிவனே.. உலகோர், நவிலும் பஞ்சுதான் படுமோ.. சொல்லத்தான் படுமோ!"

"இதென்ன கஷ்டம்! நாம் இடமில்லாமல் படும்கஷ்டம் போதாதென்று பிச்சைக்காரர்களின் உபத்திரவம் வேறேயா? இந்தக் கும்பேனிக்காரன் எல்லாத்துக்குமொரு வரி போடறானே, இவாள் மேலே ஒன்னு போடப்படாதோ?"

"ஏன் ஸ்வாமின்னு, உங்களுக்கு அவ்வளவு தயாளம்! அவன் வயிற்றுக்கொடுமை; ஏதோ கத்திவிட்டுப்போறன்."

"ஏதேது அவனுக்குக் கூட வராத கோபம் பெரியவாளுக்கு வராப்போலேயிருக்கு! பெரியவா ஏதேனும் வாரிசோ?"

"வாரிசு என்ன சுவாமி? பார்க்கப் போனால் உலகத்திலே எல்லாருமே பிச்சைக்காராள்தானே! நான் ஒரு பிச்சைக்காரன். நீரும் ஒரு பிச்சைக்காரன்..."

"என்னடா சொன்னாய் என்னை! நீ வேணுமானால் பிச்சைக்காரனாயிரு.. என்னை.. பல்லை.."

"சீச்சீ"

"சூ சூ" இது ஒரு சமாதானக்காரர்.

வண்டி முழுதும் ஏகக்கூச்சல்; களேபரம்.

தடக் தடக் தடக்

இது வண்டி.

"என்ன சிரிக்கிறேள்?"

"என்னத்துக்கு அழவேண்டும் என்றுதான் சிரிக்கிறேன்"

"என்ன புதிர்போட ஆரம்பிச்சுட்டேளே?"

"புதிரேயில்லை. எல்லாம் வெட்ட வெளிச்சம்தான். எல்லாம் கண்ணெதிரே நடக்கிறதுதான். ஒரு சிமிழுக்குள்ளேயே உலகம் அடங்கியிருக்கிறது. உனக்கு ஒரு பெரிய விந்தையாயில்லையா?"

"இந்த மாதிரி எல்லாம் பேசினால் எனக்குப் புரிஞ்சுடுமோ?"

"சொல்கிறேன், கேள்; அக்காவை விரட்டிக் கொண்டு ஜன்னலின் வெளியே வேடிக்கைப் பார்க்கும் சின்னப்பையனாய் நான் இருந்திருக்கிறேன். இன்னமும் மாப்பிள்ளைக் கருக்கழியாமல், வண்டியே தனக்காகத்தான் ஓடுகிறதென்று நினைத்துக்கொண்டிருக்கும் வயசுப்பிள்ளையாகவும் இருந்திருக்கிறேன். ஏன்டாப்பா இத்தனைப் பெரிய குடும்பத்தைப் படைத்தோம் என்று ஏங்கும் அந்தச் சம்சாரியாகவும் இருந்திருக்கிறேன்".

"உங்கள் எண்ணத்தின் கடுப்புதானோ என்னவோ அஞ்சும் பெத்து,வளத்து வயசு வந்த பிறகு ஒன்னொன்னாய்ப் பறிகொடுத்தோம்!"

"அதுவும் சரிதான்... நீயும் ரொம்பக் கஷ்டப்பட்டுவிட்டாய்; இல்லையென்றா சொன்னேன்? ஏதோ நீ பட்டதில் பாதியாவது நான் பட்டிருக்க மாட்டேனா? உனக்கு இருந்தது எனக்கும் இருந்திருக்காதா?"

"இப்போ என்னத்துக்கு அதெல்லாம்?"

"அதைத்தானே சொல்ல வந்தேன்! உப்பு மில்லை, புளியுமில்லாததற்கெல்லாம், உறுமிக் கொண்டும், கருவிக்கொண்டும், குலாவிக் கொண்டும், கொக்கரித்துக்கொண்டும் இருந்திருக்கிறோம்.. இருக்கிறோம். ஆனால் இப்போ.."

"என்ன, டக்குன்னு நிறுத்திட்டேள்?"


"இப்போது நமக்கும் வயசாகிவிட்டது. நீ முந்திக் கொள்கிறாயோ, நான் முந்திக் கொள்கிறேனோ எல்லாம் பட்டாய்விட்டது. சந்தோஷப்படவும் அலுப்பா இருக்கிறது. துக்கப்படவும் தெம்பில்லை. என்னவோ போகிறோம், வருகிறோம். எங்கே போகிறோம், எதற்காக என்னும் அக்கறையும் அதிகமில்லை. இந்த மாதிரி சமயங்களில் உலகத்தைவிட்டு நாம் ஒதுங்கி நின்று, அதன் வேடிக்கையைக் கவனிக்கும்போது மனதிற்கே ஒரு நிம்மதி பிறக்கிறது. ஏதோ சந்தேகம் தெளிந்தாற்போல் ஒரு கனம் குறைகிறது. இதைச் சரியாய் வெளியில் சொல்லக்கூட முடிகிறதில்லை. மனதுக்கு மனதுதான்.

"அதே சமயத்தில் உலகத்திலிருக்கும் சுகதுக்கங்களுக்கும் குறைவில்லை. உலகம் மாத்திரம் சுழன்றுகொண்டுதான் இருக்கிறது. காலமும் கடந்துகொண்டிருக்கிறது. இத்தனையையும் ஏந்திக்கொண்டு இந்த வண்டி போகிறமாதிரி. பார், இதுவும் உலகத்தின் நடுநாடிபோல், அடித்துக்கொள்கிறது.. ஒரே நிதானமாய்.. தடக்தடக்"

தடக்தடக் தடக்தடக் ■

• தொகுப்பு : நித்யா

# சங்கத்தேன்




பூவிடைப் படினும் யாண்டுகழிந் தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சிபோல
(குறுந்தொகை 57:1,2)

நீர்வாழ்ப் பறவையாகிய மகன்றில் பறவைகள் ஆணும் பெண்ணும் பிரிவின்றி வாழும். அவ்வாழ்க்கையில் நீர்நிலையில் இருக்கும் பூவானது இடைப்பட்டால் பல ஆண்டுகள் கடந்தாற் போன்ற துன்பத்தை உண்டாக்கும்.

செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே
(குறுந்தொகை 40:4,5)

செம்மண் நிலத்தில் பெய்த மழை நீர் எவ்வாறு அம்மண்ணோடு ஒன்று கலந்து பிரிக்க இயலாதவாறு ஆகிவிடுகிறதோ அதைப்போல ஒன்றுபட்ட அன்பினால் நெஞ்சங்களும் தாமே கலந்தன.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
(புறநானூறு 192:1,2)

எல்லா ஊரும் எம் ஊரே, எல்லா மக்களும் எம் உறவினரே, நன்மை தீமை அடுத்தவரால் வருவதில்லை.

முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்
(நற்றிணை 355:6,7)

நட்புக் கொண்டவர்கள் எதிரே இருந்துகொண்டு நஞ்சை ஊற்றி ‘உண்க’ எனத் தந்தவிடத்தும், சிறிதும் மனங்கோணாமல், முகத்தைச் சுளிக்காமல் உண்பதே நாகரிகம்.

நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்,
அல்லது செய்தல் ஓம்புமின்
(புறநானூறு 195:6,7)

நல்வினைகள் செய்யமாட்டீராயினும், தீவினைகளையாவது செய்யாது விலகுங்கள்.

புகழெனின் உயிரும் கொடுக்குவர்,பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்
(புறநானூறு 299: 1,2)

நற்செயல் எனில் உயிரையும் கொடுத்தாயினும் அந்நல்லதையே செய்யக்கூடியவர்,பழிவரும் எனில் உலகம் முழுவதையும் ஒருங்கே தரினும் ஏற்றுக்கொள்ளார்.

அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின் மெல்லியள்
(நற்றிணை 142:9,10)

இராப்பொழுதாயிருப்பினும் வந்த விருந்தைக் கண்டு மகிழ்ந்து யான் கூறிய சொற்பிறழாது இல்லிலிருந்து நல்லறஞ் செய்யும் கற்பினை உடையவள் தலைவி.

பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
(கலித்தொகை 133:3,4)

மக்கள் பண்பு சான்றோர்வழி அறிந்து ஒழுகுதலாகும், அன்பெனப்படுவது சுற்றம் தழுவி வாழ்தல் ஆகும். ■



படைப்பு குழுமம் மூன்றாம் ஆண்டு விழா
பதிவு எண்: 521/2018
படைப்பு
08
09-2019
1:30 PM - 7:30 PM
நூல்வெளியீடு
பரிசளிப்பு
விருதளிப்பு
கவிஞர் விக்ரமாதித்யன்
இயக்குநர் N. லிங்குசாமி
திரு. பவா செல்லதுரை
எழுத்தாளர் இந்திரன்
கவிஞர் அமிர்தம் சூர்யா
ஆரூர் தமிழ்நாடன்
அமுதபாரதி
மு.முருகேஷ்
தமிழன் பிரசன்னா
ஈரோடு மகேஷ்
அருண்பாரதி
பூங்குழலி
நடைபெறும் இடம்
அரசு அருங்காட்சியக கலையரங்கம்,
எழும்பூர் , சென்னை 600085